1964. 6-2




**மரபுப் பிரச்சனை!**

"கலைச்செல்வி" பொங்கல் மலரின் அட்டை எனக்குப் பிடித்து விட்டது. அதை இந்திய ஓவிய பாணி எனப் பொதுவாகக் குறிப்பிடாமல் ராஜபுதன மரபு என்று குறிப்பிட்டிருக்கலாம்.

கோட்டேபோம் தெரு. —சி. குஞ்சிதபாதம்

**எனக்கு (த்) திருப்தி!**

கவிதைப் பொங்கல் இனிக்கிறது. "எனக்கு" உட்பட, ஏனைய அம்சங்கள் திருப்தியாகவே இருக்கின்றன.

புத்தளம். —சிவா.

**பூரிப்-பூ!**

தங்களின் "கலைச்செல்வி" பொங்கல் மலர் கண்டு இதயம் பூரித்தேன். என் மனதில், என்றுமில்லாத ஒரு நிறைவு அதனால் கிடைத்தது.

சம்மாந்துறை. யூ. செயின்

**மலரெல்லாம் "கலைச்செல்வி" மலராகுமா?**

"கலைச்செல்வி" மலர், நல்ல மலராக மலர்ந்திருப்பது பாராட்டத் தக்கது. சினிமாவுக்காகவும் புகழுக்காகவும் பத்திரிகை நடத்தாமல் இலக்கிய சேவைக்காகவே பத்திரிகை நடாத்துகிறீர்கள் என்பது பொங்கல் மலரிலிருந்து நன்கு புலனாகின்றது.

கொள்ளுப்பிட்டி. —இணுவையூர்கணேசன்.

**அமுதும் தேனும் எதற்கு?**

தித்திக்கும் தேனைவிடச் சுவை பொருந்திய பொங்கல் மலரினைக் கண்டு களிகொண்டேன். கதை, கட்டுரை, கவிதை எனப் பல அம்சங்களும் ஒன்றை ஒன்று வெல்லக் கூடியதாக உள்ளது

முகத்துவாரம். ராஜம் புஷ்பவனம்.

**மகிழ்ச்சிப் பொலிவு!**

சென்ற டிசம்பரில் இந்தியா சென்று, சமீபத்திற்றான் திரும்பினேன். தமிழ் நாட்டில் தங்கள் "கலைச்செல்வி" பொலிவுடன் உலவி வருவதைக் கண்டு மகிழ்ந்தேன்.

அட்டன். —இரா. சிவலிங்கம்.

**தொடர் மறை!**

கலைச்செல்வி பொங்கல் மலரில் என்னைக் கவர்ந்தது "ஏன் மறைத்தேன் என் பெயரை?" என்ற பகுதிதான். இதுபோல் மற்றைய ஈழத்து எழுத்தாளர்களையும் எழுதச் செய்யுங்கள்.

திருமழபாடி (திருச்சி) —கு. கைலாஸம்.

**கலைப் பாலம்!**

கலையம்சம் நிறைந்த "புதிய பாலம்" கதையைப் பல தடவை படித்து மகிழ்ந்தேன். பொன்விலங்கிலிருந்து விடுதலை பெற்றதும், "கலைச்செல்வி"க்குத் தொடர்ந்தெழுதி ஈழத்திற்கும் இந்தியாவிற்கும் ஒரு கலைப்பாலம் அமைப்பதற்கு "மணிவண்ணன்" முன்வருவார் என எதிர்பார்க்கலாமா?

திருமலை. —கே. மாலினி.

**நன்மைக்கொரு காலம்!**

ஈழத்து எழுத்தாளர்கள் பற்றிய சுவாரஸ்யமான விஷயங்களை "கலைச்செல்வி" மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது... விமர்சனம் என்று சொல்லிக் கொண்டு வீணத்தனம் செய்வதில் ஆர்வம் மிகுதியாகக் காட்டாமல், சுயமாக சிருஷ்டிப்பதில் உற்சாகமுள்ள எழுத்தாளர்கள் தீவிரமாக ஈடுபட்டால் இலக்கியத்துக்கும் மொழிக்கும் நன்மை பிறக்கும்.

ராஜவல்லிபுரம். —வல்லிக்கண்ணன்.

லா டிராக்டர்களையும் விட

1.500.000

மக்காரர்களினுல் மிகச்சிறந்த

நிரூபிக்கப்பட்டுவிட்டது!



மஸ்ஸி - பெர்குசன்

ஆர்ன்கோ அக்ரிகல்சரல் இன்டஸ்ரீஸ்

பரந்தன் வவுனியா




## நவீன முறையில் படப்பிடிப்பு

பெருப்பித்தல்,

வர்ணந்தீட்டுதல்,

புளக் செய்தல்

**மற்றும் படப்பிடிப்பு (Photography)**

சம்பந்தமான விஷயங்களில் உங்களுக்குத்
திருப்தியளிக்கக் கூடிய ஸ்தாபனம்

சொந்தக்காரர்: J. A. பேரின்பநாயகம்

# Chandra Knitting Company

HIGH CLASS HOSIERY MANUFACTURERS

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும்
பெருமை மிகுந்த

**சந்திரா பெனியன், பெனியன் வகைகள்**

- ரீ ஷேட்
- பேபி வெஸ்ட்
- ஸ்போட் ஷேட்
- ஸ்வெட்டர்ஸ்
- பேபி சன் சூட்

முதலியவற்றையே கேட்டு வாங்கி உபயோகியுங்கள்

## சந்திரா நிட்டிங் கம்பனி

(உரிமையாளர்: M. T. செல்லையா)

**64, பிறவுண் வீதி : யாழ்ப்பாணம்**


# படிமுறை அட்சர கணிதம்

*108* நாள்களுக்குரிய பாடவிதானமும் பயிற்சிகளும்,
விடைகளும் கூடியது.

பாடநூற் பிரசுரசபையின் அங்கீகாரம் *1967*
டிசம்பர் வரை பெற்றது.

ஆக்கியோன்.

**A. J. ஆசீர்வாதம்** B. Sc. (Lond)

[ஆசிரியர் சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்]

| | |
|---|---|
| 6 ஆம் வகுப்புப் படிமுறை அட்சர கணிதம் | - *1-60* |
| 7 " " " " " | - *1-60* |

உங்கள் பிரதிகளுக்கு:-

## ஆசீர்வாதம்

அச்சகம் சக புத்தகசாலை

32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(தொலைபேசி:- 274)






# கலைச்செல்வி

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்'

—பாரதியார்


| கலை: 6 | மாசி: 1964 | காட்சி: 2 |
|---|---|---|

FEBRUARY : 1964


பொருளடக்கம்


1 வாசகர் கருத்து
2 கருத்தோட்டம்
3 அன்பார்ந்த நேயர்களே!
4 டாக்டர் பி. எஸ்
5 திருக்குறள் கீர்த்தனை
6 திப்பு சுல்தான்
7 உள்ளம் குளிருமே!
8 சிவாஜியும் நானும்.
9 தென்னிந்தியாவும் தொல்லிலங்கையும்
10 ராசாத்தி
11 குருத்து
12 கலைகளின் உறைவிடங்கள்
13 எழுத்தும் இசையும்
14 பிழைப்பு
15 பாரசீக இலக்கியப் பூங்கா
16 பலதும் பத்தும்
17 பட் பட்
81 கவிப் பொங்கல்
19 பதிலும் பரிசும்

சுத்தமாக

சுகாதார முறைப்படி

நவீன இயந்திரங்களினல்

## விலையுயர்ந்த மூலப்பொருட்களைக் கொண்டு

தயாரிக்கும்

# பேபி BABY BRAND மார்க்

# ஸ்பெஷல்

## பானங்களையே அருந்துங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்

**சுப்பிரமணியம் சோடாக் கம்பெனி**

போன்: 97 வல்வெட்டித்துறை தந்தி: SODA

கிளை:

## ராஜு ஸ்ரோர்ஸ்

போன்: 373

2/B, ஸ்ரான்லி ரோட்,

**யாழ்ப்பாணம்**

தந்தி: ESVES

# கருத்தோட்டம்.

மனிதன் மனிதனாக வாழ்ந்து, மகாத்மாவாக உயர்ந்து, மரணமாக நிறைவு பெறுவதற்கு உதவிசெய்யும் உயர்ந்த சிந்தனை ன் சிறந்த சொல்லுருவமே இலக்கியம். இத்தகைய இலக்கியம் கால, தேச எல்லைகளைக் கடந்து வாழ்ந்து கொண்டேயிருக்கும்.

❁ ❁ ❁

'உயிரை இழப்பதன் மூலம் மானத்தைக் காக்கலாம் என்றால், உயிரை இழந்துவிடு' என்று கூறுகின்றார் வள்ளுவர். 'இவ்வுலகில் ஒருவனுக்காவது உண்ண உணவில்லை என்ற நிலை ஏற்பட்டால், அப்போது உன்னையும் அழித்து உலகத்தையும் அழித்துக்கொள்' என்று வள்ளுவர் கூறுகின்றாரேயன்றி, 'உன் மானத்தை ஒதுக்கிவைத்து விட்டுக் கெஞ்சி மன்றாடியாவது கஞ்சிகுடித்துக்கொள்' என்று சொல்லவில்லை.

❁ ❁ ❁

உயர் பதவியில் இருப்பவர்களுக்குப் பெரிய விழாக்களிலும் மகாநாடுகளிலும் பங்குபற்றிப் பேசவேண்டிய சந்தர்ப்பங்கள் பல தாமாகவே வருகின்றன. அங்கெல்லாம் சென்றுஉடலுழைப்பின் உயர்வைப் பற்றியும் உத்தியோகத்தின் சிறுமையைப்பற்றியும் மணி மணியான கருத்துக்களை உதிர்ப்பார்கள்; மற்றையோர்க்கு அடிபணியாது மானத்துடன் சுதந்திர வாழ்க்கை வாழவேண்டும் என்று பேசுவார்கள். இத்தகையோர், தம் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னராவது, தாம் முன்பு சொன்னவற்றைச் சாதனையிற் காட்டினால் நன்றாயிருக்குமே! ஐயா பெரியவர்களே! நீங்கள் வாய்ச்சொல் வீரராக இருக்காது, வயலில் இறங்கிப் பாடுபடுங்கள்; உடலுழைப்பு உண்மையிலேயே உயர்வானதுதான் என்பதை நிரூபித்து இளைஞர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டுங்கள். நீங்கள் முன்னால் செல்லுங்கள், நாங்கள் பின்னால் வருகின்றோம்.

❁ ❁ ❁

உயர்ந்த சாதியார் என்று சொல்லப்படுவர்களிற் சிலர், தம்மிற் குறைந்த சாதியார் எனச் சொல்லப்படுபவர்களை அடக்கி ஒடுக்கி அழிப்பதற்கு முயல்வதன் அடிப்படைக்காரணம் சாதி வெறி. அதேபோல், குறைந்த சாதியினர், தம்மில் உயர்ந்தோரை வெருட்டிப் பய முறுத்தி விரட்ட முயல்வதன் அடிப்படைக் காரணமும் சாதி வெறிதான். தகுதியையும் திறமையையும் புறக்கணித்துவிட்டு, ''என்னுடையசாதியைச் சேர்ந்தவன் மட்டுமே முன்னேறவேண்டும், மற்றவர்கள் எக்கேடாவது கெட்டுப் போகட்டும். என்று எவன் நினைக்கின்றானோ, அவனிடம் சாதிவெறி நிறைந்திருக்கின்றது என்பதுதான் பொருள்.

# அன்பார்ந்த நேயர்களே!

வணக்கம். பொங்கல் மலரைப் பாராட்டி, வழக்கத்திலும் பார்க்க அதிகப்படியான அன்பர்கள் எழுதியிருக்கின்றார்கள். சில கடிதங்களை மட்டும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மலரைப் பற்றிய சிறப்பான விமரிசனங்கள் 'சுதந்திரன்' இதழிலும் இலங்கை வானொலியிலும் இடம்பெற்றன. இப்படி உற்சாகமூட்டும் அன்பர்களுக்கு நமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பொங்கல் மலரின் தொடர்ச்சியைப் போன்று இவ்விதழ் அமைந்துள்ளது. ஈழத்தின் பிரபல சிறுகதை எழுத்தாளர் ஒருவர், காளிதாசரின் சாகுந்தலத்தைத் தமிழிற் காவியமாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார். அவருடையசில கவிதைகள் பொங்கல் மலரில் வெளிவந்தன; இந்த இதழிலும் சிலவற்றைக் காணலாம். தன் பெயரை இப்போது வெளியிட விரும்பாத இவ்வெழுத்தாளர், தன் கவிதைகளைப் பற்றிய கருத்தை வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றார். ''கலைச்செல்வி''யின் புதிய முகவரிக்கு உங்கள் கருத்தை எழுதியனுப்புங்கள். "பாரசிக இலக்கியப் பூங்கா"வை எழுதிய எம். ஏ. எம். சுக்ரி அவர்கள் இலங்கைப் பல்கலைக் கழக மாணவர்; அரபி மொழியைச் சிறப்புப் பாடமாக பயின்று வருபவர்; இலங்கை வானொலியில் அடிக்கடி சொற்பொழிவாற்றுபவர். பிறநாட்டு இலக்கியத்தைப் பற்றி அறிய விரும்பும் தமிழ் வாசகர்கட்கு இக்கட்டுரைபெரிதும் பயனளிக்கும்.

நாவல் போட்டியின் முடிவுகளை இந்த இதழிற்கூட அறிவிக்க முடியாமைக்காக வருந்துகின்றோம். அகிலன் அவர்களின் தீர்ப்பு இன்னமும் கிடைக்கவில்லை.

கலைச்செல்வியின் எதிர்கா இன்னுமதிகமான பிரகாசத்துடன் விளங்குவதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ளன. தமது நீடித்த ஆதரவைத் தொடர்ந்து அளித்து வரும் நம் அபிமான வாசகர்கட்கும் எழுத்தாள நண்பர்க்கும் இச்செய்தி மேலும் மகிழ்ச்சியூட்டும் என நமபுகின்றோம். யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியிலுள்ள புதிய மாளிகையொன்றில், ''கலைச்செல்வி'' குடிபுகவிருக்கின்றாள். எழுத்தாளர்களும் இலக்கியத்தாகமுள்ள வாசகர்களும் அடிக்கடி சந்திக்கும் கலைக்கூடமாக இப்புதிய மாளிகையை ஆக்க முயன்று வருகின்றோம்.

கலைச்செல்வியின் ஆதரவில் நடைபெறும் இரண்டாவது சிறுகதைப் போட்டி, கலைவிழா முதலியவற்றைப் பற்றிய அறிவித்தல்கள் இந்த இதழில் வெளியாகியுள்ளன. அன்பர்கள் வழமைபோல் உற்சாகத்துடன்பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

—ஆசிரியர்

---

பெறலரும் பேற்றின் நல்ல பெட்பினை ளென்னி ஞக்கி
யுறவரு மும்ப ரெய்து முலப்பிலா நலத்தின் மூழ்கித்
துறவர் நீர் மலர நாளுந் துய்த்தன ஞயினந் தோ
வற மெனைச் சீற நுங்கு மளறுவா யடைத் திடாதோ.

—நிறைமலர் வெய்து படலம், சாகுந்தலம்

---

# டாக்டர் பி. எஸ்.

யாழ்ப்பாணத்தமிழனின்புகழை ஈழமெங்கணும் பரவச்செய்த பெருமைக்குரியவர்களுள் "டாக்டர் பி.எஸ்" என அன்புடன் அழைக்கப்பட்ட வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் முதன்மையானவர். அடையா நெடுங்கதவையுடைய அவரின் இல்லத்திற்கு அனுதினமும் ஆயிரக்கணக்காஞேர் யாத்திரை செய்தவண்ணமேயிருப்பர். நோய் தீர்க்க மருந்தைநாடிச் செல்வோர்; பசிக் கொடுமையைத்தீர்க்க பணவுதவிநாடிச் செல்வோர்; கல்விச் சாலைகளையும்கோவில்களையும் அமைப்பதற்கு நன்கொடை நாடிச் செல்வோர்—இப்படிப் பலதரப்பட்டவர்களை இன்முகத்துடன் வரவேற்று, அன்பாகப் பேசி, ஆறுதலும் ஆசியும் கூறி, மருந்தும் விருந்தும் அளித்து, வேண்டியார்க்கு வேண்டிய பணமும் கொடுத்து, எல்லார்க்கும் ஓர் உதாரணபுருடராக வாழ்ந்தவர் பி. எஸ். அவர்கள். அன்றுஞ்சரி, இன்றுஞ்சரி, எத்தனையோ வைத்திய கலாநிதிகள் பி. எஸ் ஆகக் கடமையாற்றியிருக்கின்ருர்கள். இருந்தும் "பி. எஸ்" என்பது டாக்டர் சி. சுப்பிரமணியம் அவர்களையே குறிக்கின்ற அளவிற்குத் தன் சேவையால் உயர்ந்திருந்தார்.

சரித்திரப் பிரசித்திபெற்ற கிராமமாகிய கந்தரோடையில் 1873ம் ஆண்டு பிறந்த இவர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, கல்கத்தாச் சர்வ கலாசாலை முதலியவற்றில் பயின்று, பின் இலண்டன் சென்று அங்கேயும் பரீட்சையில் திறமையுடன் சித்திபெற்ருர். அரசாங்கத்தில் பணியேற்று இலங்கையின் பல பாகங்களிலும் கடமையாற்றிவிட்டுத் தன் சொந்த இடமாகிய யாழ்ப்பாணத்திற்கு 1930ம் ஆண்டில் வந்தார். அன்றுதொடக்கம் சென்றமாதம் அமரராகும்வரை, யாழ்ப்பாணத்தின் முதன்மைபெற்ற டாக்டராக இருந்தார்.

பல பொது நிலையங்களுக்கு அள்ளி அள்ளி வழங்கிய இவர், "கலைச்செல்வி"யின் ஆயுட் சந்தாதாரராகவும் இருந்தார். அன்பு, சேவை, தியாகம் ஆகியவற்றின் உருவமான அவர், அனைவரது நெஞ்சங்களிலும் என்றென்றும் வாழ்வார்.

---


**யாழ்நகரில்**
**கலைச்செல்வியின் ஆதரவில்**
**இவ்வாண்டு சித்திரைமாதத்தின் பிற்பகுதியில்**

## கலைவிழா

நடைபெறும்

ஈழத்தின் மிகச்சிறந்த கலைஞர்கள் பங்குபற்றும் நாடகம், நாட்டிய நாடகம், நாதஸ்வரக் கச்சேரி, இசைக் கச்சேரி, வில்லுப்பாட்டு, தாளவாத்தியக் கச்சேரி முதலிய பல நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன

**நுழைவுக் கட்டணம்: ரூபா 2.**

# திப்பு சுல்தான்

நாடக உலகில் நல்லதோர் நம்பிக்கையை ஏற்படுத்திய வண்ணை கலைவாணர் நாடக மன்றத்தினரின் "திப்பு சுல்தான்" மீண்டும் யாழ்நகரில் வெற்றிப்பவனி வரவிருக்கிறுன். என்ற செய்தி நாடக அபிமானிகளுக்கு மகிழ்ச்சியூட்டும் என்றே நம்புகின்றோம். சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில் முதல் முதலாக யாழ்ப்பாணம் மனோகரா தியேட்டரில் அரங்கேற்றப்பட்ட இந் நாடகம், 1963ம் ஆண்டின் சிறந்த சரித்திர நாடகமாக இலங்கைக் கலைக் கழகத்தினரால் தெரிவுசெய்யப்பட்டது. கொழும்பில் நடைபெற்ற கலைக்கழக நாடகவிழாவில், இரண்டாவது தடவையாக அரங்கேற்றப்பட்டது. தொடர்ந்து பல நல்ல நாடகங்களைத் தயாரித்தளிக்கத் திட்டமிட்டுள்ள கலைவாணர் நாடக மன்றத்தினர், தம் நிதி நிலைமையைச் சீர் செய்வதற்காக இதே நாடகத்தை மீண்டும் மேடையிடுகின்றனர். 29-2-64 சனிக்கிழமை, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கென ஒரு விசேட காட்சி உண்டு. 1-3-64 ஞாயிறன்று பொது மக்கள் அனுமதிக்கப்படுவார்கள். யாழ்ப்பாண நகரமண்டபத்திலேயே இரண்டு தினங்களிலும் நாடகம் நடைபெறும். கலையை வளர்க்கும் உயர்ந்த நோக்கத்துடன் மேடையேற்றப்படும் இந் நாடகத்திற்கு நாடக ரசிகர்கள் பெருந்திரளாகச் சென்று தமது ஆதரவைத் தெரிவிப்பார்கள் என நம்புகின்றோம். இந் நாடகத்தின் பிரதான பாத்திரமான திப்பு சுல்தானைத் தோன்றும். திரு. லோகேஸ்வரன் அவர்களின் படத்தை இவ்விதழின் அட்டையில் மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றோம்.

——

## உள்ளம் குளிரும் மனமே.

**-அளவையூர் சஞ்சீவி-**

இராகம்: மோகனம். தாளம்: ஆதி.

**பல்லவி**

ஓம் முருகாவென ஒருதரம் சொன்னால்  
உள்ளம் குளிரும் மனமே—தினம் (ஓம்)

**அனுபல்லவி**

தாமரைச் செல்வி தழுவும் மருமகனை  
சச்சிதானந்தனை சங்கர சண்முகனை (ஓம்)

**சரணம்**

ஏக சுதந்திர இன்ப அன்பூட்டும்  
இதய வெளியினிலே எழில் நடம் காட்டும்.  
யோகசுகம் பெறும் யூகமும் கூட்டும்  
நோக்கிலும் வாக்கிலும் நுண்பதம் தீட்டும் (ஓம்)

# சிவாஜியும் நானும்



- பாலன் -

அன்று ஒரு திங்கட்கிழமை. நான் சென்னையில் தங்கி நின்ற சமயம், நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்களைச் சந்திப்பதற்காக சென்னை "போக்கு" ரேட்டில் உள்ள அவரது "அன்னை இல்லம்" நோக்கிச் சென்றேன்.

"நடிகர் திலகம்" உலகவாழ் அத்தனை சினிமா ரசிகர்களின் மனதையெல்லாம் கவர்ந்து தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றது போல் அவர் அன்னை இல்லத்தின் முன் வாசலில், நிரந்தரமான இடம் பெற்று விட்ட ஸ்ரீ கணேசப்பெருமானின் திருவுருவம் அவ்வழியால் செல்லும் மக்கள் அத்தனை பேரின் கவனத்தையும் கவர்ந்த வண்ணமே இருக்கின்றது. அவருக்கு அர்ச்சனை செய்வதற்கென தனிப்பட்ட ஓர் அர்ச்சகர். நடிகர் திலகத்தின் இல்லத்தில் இடம் பெற்றுக் கொலுவிருக்கும் அந்த விநாயகப் பெருமானுக்கும், ஒரு தனிப்பட்ட பெருமை என்று கூறினாலும் பொருந்தும். "இந்தக் கணேஷனை வழிபட்டால், அந்தக் கணேஷனைப்போல் நமக்கும் பேரும், புகழும் கிடைக்கும்" என்ற நம்பிக்கை பலருக்கிருக்கக் கூடுமோ என்னமோ, அவ்வீதியில் செல்லும் அனைவரும் இவ்விநாயகர் முன் விழுந்து விழுந்து—தலையில் குட்டிக் குட்டிக்—கும்பிட்டுத்தான் செல்லுகின்றார்கள். இதற்கு நான் மட்டும் விதி விலக்கா என்ன? நானும் தலையில் ஒரு குட்டுக் குட்டி நெஞ்சில் ஒரு கும்பிடு போட்டு விட்டு உள்ளே சென்றேன்.

வீட்டின் நடு ஹோலில் உட்கார்ந்து வேறொருவருடன் உரையாடிக்கொண்டிருந்த சிவாஜி அண்ணா, கைகூப்பி எம்மை வரவேற்றார். தன் பக்கத்தில் என்னை அமர வைத்துவிட்டு எனக்கு முன் உரையாடிக் கொண்டிருந்த நபருடன் கதைத்து முடித்ததும் என்னுடன் உரையாடத் தொடங்கினார்.

ஈழத்தைப்பற்றியும், ஈழத்தில் வதியும் தமிழ் மக்களைப்பற்றியும் சுமார் இருபது நிமிடங்கள் வரை மிகுந்த ஆவலுடன் வினவினார். அவர் என்னுடன் உரையாடியதிலிருந்து, இங்குள்ள தமிழ் மக்கள் மீது அவர் கொண்டுள்ள அன்பை நான் அறியக் கூடியதாய் இருந்தது. இதற்கிடையில் எமக்குக் காப்பி வந்தது. உடனே அதையும் ருசி பார்த்துவிட்டு மறுபடியும் எமது உரையாடலைத் தொடங்கினோம். அப்போது நடிகர் திலகம் தன் அருமை மகள் சாந்தியையும், தம்பி சண்முகத்தையும் எமக்கு அறிமுகம் செய்து வைத்தார்,

## தேவை அறிந்து வாரி வழங்கும் வள்ளல்.

சில சினிமா நடிகர்கள் பணத்தைத் திரட்டித் திரட்டிப் பெட்டியில் பதுக்கிவைக்கிறார்கள். ஆனால் இதற்கு விதிவிலக்கானவர் நடிகர் திலகம். இவரது உண்மை உள்ளத்தை அறியாத சில கேள்விச் செவியர், இவரைப்பற்றிப் பலவிதமாக எண்ணக்கூடும்; வெளியில் கூறிக்கொண்டும் திரியலாம். ஆனால் சிவாஜிகணேசனின் வள்ளற்றன்மையைக் கொண்டு வாழ்நாளைக் கழிப்பவர்கள் எத்தனையோபேர், எவ்வளவோபேருக்குத் தேவை அறிந்து உதவிசெய்கிறார். அதுமட்டுமா? எந்த ஒரு பொது விடயங்களுக்கென்று யார் அவரை

நாடினாலும் அவரின் கைகள் வாரி வழங்கத் தயங்குவதில்லை.

சினிமாத்துறையில் ஈடுபட்டு அதனால் நஷ்டமடைந்து கடனில் சிக்கிச் சாவெனும் பாதையை விட வேறு வழியில்லையென்று தவித்த சில நடிகர்களையும், படத்தயாரிப்பாளர்களையும், "இதோ நான் வாழ வைக்கின்றேன்." என்று கைகொடுத்து அவர்களுக்கு வாழ்வளித்தவர் எங்கள் நடிகர்திலகம்தான். குறிப்பாக நாம் சிலரின் பெயரைக் குறிப்பிட முடியும். ஆனால் இப்படிப் பழைய வாழ்க்கையை நினைவூட்டுவது, சில சமயம் அவர்களுக்கு வேதனையாக இருக்கக்கூடும்! ஆகவே நாம் அதை அப்படியே விட்டுவிடுவோம். சிவாஜி அவர்கள் தமது இளம் வயதிலேயே வறுமையால் மிகவும் கஷ்டப்பட்டவர். இங்ஙனம் கஷ்டமென்றால் என்ன என்பதை நன்கு உணர்ந்தபடியால்தான் இப்போது இரப்போர்க்கு இல்லையென்னாது வழங்குகின்றார்.

## தாய்ப்பாசம்

சிவாஜிக்கு அவர் அன்னைமீது அளவுகடந்த பாசம். அவர் தன் வீட்டுக்கு "அன்னை இல்லம்" என்று பெயர் வைத்திருப்பதே இதனாற்றான். தாயின் உடல்நிலை சிறிது காணாது இருந்தாற்போதும். அன்று தனது எவ்விதமான வேலைகளுக்கும் போகாது தாயைக் கண்ணும் கருத்துமாகப் பார்ப்பார். ஞாயிற்றுக்கிழமை சிவாஜி உண்ணாவிரதத்துடன் யாருடனும் கதைக்காது மௌனவிரதமும் அனுஷ்டிப்பார். மாலை 5-30 மணிக்குமேல்தான் தனது விரதத்தை முடித்துக்கொள்ளுவார். இவையெல்லாம் தாயின் அன்புக்கட்டளையே!

## வேட்டைக்காரன்!

சிவாஜியின் வீட்டு ஹோலில் அவர் வேட்டையாடிய வேங்கைகளை நன்கு பதப்படுத்தி உயிருடன் நிற்பதுபோல் பலகோணங்களில் அழகாக வைத்திருக்கிறார். அவற்றைக் கண்டதும் நான், "தங்களைக் காண்பதற்கென ரசிகர்கள் கூட்டம் முண்டியடித்து முன்வருவதுபோல வனத்திலும் தங்களைக் காண்பதற்கென வனவிலங்குகள் வரும்பொழுது தாங்கள் அவற்றைச் சுடுவது நன்றா?" என்றுகேட்டேன். அவர் பதிலுக்குச் சிரித்துவிட்டு, "வேட்டை என்றால் எனக்கு ஒரே பைத்தியம்" என்றார். அவரின் பொழுதுபோக்குகளில் மிக முக்கியமானது வேட்டையாடுதலே. எமது உரையாடலின்போது நான் கேட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதிலை வாசகர்களுக்குத் தரக் கடமைப்பட்டுள்ளேன். அதை அறியஉங்களுக்கு ஆவலாயிருக்கிறது இல்லையா?

கேள்வி: ஈழத்து இயற்கை அழகுகளை வைத்து ஒரு படம் தயாரிக்க நினைக்கவில்லையா?

பதில்: இப்படியான சந்தர்ப்பத்தை நானும் மிக ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றேன். ஆனால் இரு நாடுகளின் அரசாங்கக்கட்டுப்பாடுகளினால் இந்த ஆசையை நிறைவேற்றமுடியவில்லை. சந்தர்ப்பம் கிடைக்கும்போது செய்யக் காத்திருக்கிறேன்.

கே: ஈழத்துக் கலைஞர்களை வைத்துப் படம் தயாரிக்க முயற்சிக்கவில்லையா?

ப: சிறந்த நடிகர்கள் எந்த நாட்டிலிருந்து வந்தாலும் நிச்சயம் இடம் கொடுப்போம். ஊக்கமளிப்போம்,

கே: கலைச்செல்விமூலம் நாம் சிறந்த கலைஞர்களை அனுப்பிவைத்தால் அவர்களை ஆதரிப்பீர்களா?

ப; இப்படியான பணிகளைச் செய்து இரு நாடுகளுக்கும் இடையில் கலைச்செல்விமூலம் கலைப்பாலம் அமைக்க வேண்டுமென்றுதான் நானும் ஆசைப்படுகின்றேன்.

கே; எப்படிப்பட்ட கலைஞர்களைத் தாங்கள் விரும்புகின்றீர்கள்?

ப: கலையைக் கலையென மதித்துக் கடமையுணர்ச்சியுடன் நடிக்கக் கூடிய நடிகர், நடிகையர்களையே நான் எதிர்பார்க்கின்றேன்.

கே. தங்களால் உருவாக்கப்பட்டவர்கள் பலருண்டாமே! உண்மை தானா? அவர்கள்யார்?

ப. உண்மைதான். ஆனால் அவர்களைப் பற்றி நான் கூறுவது அழகல்ல.

கே: கலைச்செல்விக்குத் தங்கள் ஆதரவு என்றும் இருக்குமா?

ப: சந்தேகம் வேண்டாம். நிச்சயமாக இருக்கும். கலைச்செல்வியின் வளர்ச்சியைக் கண்டு பெருமைப் படுபவர்களில் நானும் ஒருவன். எனவே அவள் வாழவேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

கே: ஈழத்திற்குத் தாங்கள் எப்போது வர எண்ணியுள்ளீர்கள்?

ப: மிகுந்த சீக்கிரம் ஈழத்திற்கு விஜயம் செய்து ஈழம்வாழ் ரசிகப் பெருமக்களைக் காண ஆசைப்படுகின்றேன்.

கே: தாங்கள் விரும்பி வணங்கும் தெய்வம் எது?

ப: எனது கண்கண்ட தெய்வம் என் தாய் தான்! X

சென்னையில் நான் நின்ற போது, பிரம்மாண்டமான தனது மாளிகையிலேயே நான் தங்குவதற்கு வசதிகள் செய்து, மற்றைய நடிகர்களைக் காண்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுத்த நடிகர்திலகம் சிவாஜி அண்ணாவைப் பிரிய மனமின்றிப் பிரிந்து வந்தேன். அவர் விரைவில் இலங்கைக்கு வந்து எம்மையெல்லாம் மகிழ்விப்பதற்கு இறைவன் அருள்புரிக.

## திருக்குறள் கீர்த்தனை - 15

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

இராகம்: பாகேஸ்ரீ　　　　தாளம்: ஆதி

பல்லவி.

நல்லதும் மழையே நானிலத்தை அழிக்க
வல்லதும் எல்லாம் வானின் மழையே

அனுபல்லவி


பல்வித உயிர்களைப் பாரினில் கெடுத்து
அவ்விதம் கெடுத்தோரை ஆக்கி எடுப்பதால்

சரணம்

பெய்யாது நின்றே பெருமழை உலகினை
உய்யாது கெடுப்பதூஉம் கெடுத்திடும் உயிர்களை
மெய்யாகப் பெய்து மேலாக்கி எடுப்பதூஉம்
பொய்யாகி மெய்யாகிப் பெய்யும் மழையதால்.

யாழ்ப்பாணம் ந. வீரமணி

# ரூதா சாந்துப்பொட்டு



கண்ணைக் கவரும்
வண்ணச்சாந்து
மங்கையர் அணியும்
மங்கலச் சாந்து!
சிறுவர் சிறுமியர்
விரும்பும் சாந்து!
குழந்தைகள் திருஷ்டி
கழிக்குஞ் சாந்து!!

## ரூதா சாந்துப்பொட்டு

பல வர்ணங்களிலும் அரை அவுன்சுப் புட்டிகளில் அடைக்கப்பட்டு எமது கம்பெனியில் விலைப்பட்டு வருகிறது.

பலமாசங்களுக்குப் பழுதுபடாமல் இருக்கத்தக்கது.

## முகத்திற்கு அழகையும் வசீகரத்தையும் கொடுக்கவல்லது.

மனோரம்மியமான

## ரூதா சாந்துப்பொட்டு

தொகையாகவும் சில்லறையாகவும் எமது கம்பெனியில் பெற்றுக்கொள்ளலாம்.

**தொகையாக வாங்குவோர்க்கு**

விசேஷ கழிவு கொடுக்கப்படும்.

## எஸ். சுப்பிரமணியம் அன் கம்பெனி

53, காங்கேசன்துறை வீதி,

**பெரியகடை, யாழ்ப்பாணம்.**

கிளை:-

**பாலேந்திரா பில்டிங்**

160, செட்டியார்தெரு, கொழும்பு - 11




ஜார்ஜ் பெர்ணுட்ஷா ஒருவிருந்துக்குப் போயிருந்தார். அங்கே ஓர் இளம் பெண்ணுடன் தன்னைப் பற்றியே அளந்து கொண்டிருந்தார். சில மணிநேரம் தன் பிரதாபங்களையெல்லாம் கூறிவிட்டுக் கடைசியில், "இவ்வளவு நேரமும் என்னைப் பற்றியே பேசிக் கொண்டிருந்து விட்டோம். இனி உன்னைப் பற்றிப் பேசலாம். நான் கடைசியாக எழுதிய நாடகத்தைப் பார்த்தாயா? அதைப்பற்றி நீ என்ன நினைக்கின்ருய்?" என்று கேட்டார் ஷா!

ஃ ஃ ஃ

வேலைக்கு வந்த பெண்ணிடம் கம்பனி டைரக்டர் கேள்விகேட்டார்.

"கல்யாணமாகிவிட்டதா?"

"ஆகிவிட்டது!"

"குழந்தை...?"

"இல்லை, ஒரு வாலிபனைத்தான் மணம் புரிந்துகொண்டிருக்கிறேன்!"

—உமா.

தமிழ் எழுத்தாளர்களின் முதலாவது மகாநாடு 1944ம் ஆண்டளவில் கோயமுத்தூரில் நடைபெற்றது. எழுத்தாளர் அறிமுக நிகழ்ச்சியின்போது ஓர் இளைஞர் எழுந்து, "நான்தான் கோரநாதன்; நான்தான் நையாண்டிபாரதி; நான்தான் பிள்ளையார்; நான்தான் சொக்கலிங்கம்; நான்தான் மிவாஸ்கி; நான்தான் கெண்டையன்பிள்ளை; நான்தான் சோம்பேறி... சோனுமுனு... கனவானந்தா... இளவல்—என்றெல்லாம் அடுக்கிக்கொண்டு போய் அனைவரையும் பிரமிப்பில் ஆழ்த்திவிட்டார். அப்படிச் செய்தவர் யார் தெரியுமா? அவர்தான் பிரபல எழுத்தாளர் வல்லிக்கண்ணன். இத்தனை புனைபெயர்களுள் மறைந்திருந்து எழுதிவரும் அவருடைய இயற்பெயர்—ரா, சு. கிருஷ்ணசாமி.

ஃ ஃ ஃ

இலங்கையில் அடிமை முறை 1844ம் ஆண்டளவிலேதான் முற்ருக ஒழிக்கப்பட்டது. அதற்கு முன்பு கொழும்பிலுள்ள பல இல்லங்களில் அடிமைகள் அமர்த்தப்பட்டிருந்தார்கள். ஒவ்வொருநாளும் பொழுது கருகியவுடன் இந்த அடிமைகள் பெய்ரா வாவியின் மத்தியிலுள்ள ஒரு சின்னஞ்சிறு தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, இரவு முழுவதும் சிறைச்சாலையில் அடைத்துவைக்கப் படுவார்கள். இந்த இடந்தான் இப்போது 'ஸ்லேவ் ஐலண்ட்' (Slave Island)என அழைக்கப்படுகின்றது.

ஃ ஃ ஃ

துருக்கியிலுள்ள ஹோசர் சிம்செக் என்ற பெண்ணிற்கு இப்போது எத்தனை வயது தெரியுமா? திகைக்காதீர்கள்—அவளுக்கு இப்போது 169வயது! இதுவரை எந்த வைத்தியரிடமும் தன் உடம்பைப் பரிசோதிக்காத இந்தத் தொண்டு கிழவி, தான் ஒவ்வொருதடவை சாப்பிடும்போதும் உள்ளியை நிறையச் சேர்த்துக்கொள்வாளாம். இவளுக்கு ஆறு பெண்களும் ஐந்து ஆண்களும் அறுபத்தேழு பேரப்பிள்ளைகளும் இருக்கின்ருர்கள். உள்ளியின் மகத்துவம் என்னே!

# தென்னிந்தியாவும் தொல்லிலங்கையும்

## 14. யாழ்ப்பாணத் தமிழரசு:

பதின்மூன்ரும் நூற்ருண்டு முதல் யாழ்ப்பாணம் தனியரசாகச் சிறப்புற்று விளங்கியது. அதனைத் தமிழரசர்கள் ஆண்டுவந்தனர். அவர்கள் சிங்கள ஆரிய சக்கரவர்த்திகள் என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டனர். அவர்கள் பரராசசேகரன் செகராசசேகரன் என்ற பட்டங்களை மாற்றி மாற்றிவைத்துக்கொண்டனர் கி.பி. 1215முதல் 1620வரை ஏறக்குறைய 400ஆண்டுகள் அந்த அரசமரபு ஆட்சிபுரிந்தது. இந்தத் தமிழ் அரசர்களிடையே சிலர் புலவர்களாக இருந்தனர். எல்லாரும் தமிழ் மொழியை ஓம்பி வந்தனர். புராணம், மாலை, பிள்ளைத்தமிழ், பள்ளு முதலிய பல தமிழ் நூல்கள் அக்காலத்தில் இயற்றப்பட்டன. அம்மன்னர்கள் தமிழ்நாட்டுப் புலவர்களைப் போற்றிப் பரிசுகள் வழங்கிப் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

இவர்கள் சைவசமயத்தைத் தழுவியவர்களாகவே இருந்தனர். எனவே, பொதுவாகச் சிவன் கோயில்களைக் கட்டியும் ஓம்பியும் வந்தார்கள். இவர்கள் காலத்தில் தான் நல்லூர்க் கந்தசாமிகோயில் கட்டப்பட்டது என்பர்; வேறு பல கோயில்களும் இக்காலத்தில் கட்டப்பட்டும் காக்கப்பட்டும் வந்தன.

## 15. இலங்கையின் வீழ்ச்சி:

பிற்காலத்தில் இலங்கையை ஆண்ட அரசர்கள் எல்லாம் தம்பதேனியா(Dambadeniya)விலிருந்து வந்தனர். ஆயினும் இக்காலத்தில் பொலநறுவா தன் முழுச்சிறப்பையும் இழந்துவிடவில்லை. மூன்ரும் விசயபாகு என்ற அரசன் அப் புதிய தலைநகரிலிருந்து ஆண்ட அரசர்களுள் குறிப்பிடத்தக்கவன். இவன் புத்தசமயத்திற்குப் பேராதரவு தந்தான். இவன் இறந்தவுடன் ஆட்சியை வேறுசிலர் கைப்பற்றிக் கொண்டனர். சில ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாம் பராக்கிரமபாகு அரசுக்கட்டிலேறினன். கி. பி. 1245 அளவில் சைலேந்திரப் பேரரசை வன்முறையில் கைப்பற்றிய சந்திரபானு என்ற அரசன் இலங்கையைத் தாக்கினன். மேலும், முதலாம் சடையவர்மசுந்தரபாண்டியன் சிங்களத்தின் வடபகுதியைத் தனது அடிமைநாடாக்கினன். இதனுல் இலங்கையின் தென்பகுதியை ஆளுவதோடு இரண்டாம் பராக்கிரமபாகு மனநிறைவு கொள்ள வேண்டியதாயிற்று. இவன் சமயத்தையும், இலக்கியத்தையும் போற்றிய புலவன் என்ற காரணத்தால்

க.த. திருநாவுக்கரசு எம்.ஏ. (தமிழ்) எம்.ஏ. (வரலாறு)

சிறப்புமிக்க அரசனாகக் கருதப்படுகிறான். அவன் சமயசாத்திரங்களுக்குச் சிறந்த விளக்கவுரை எழுதியுள்ளதோடு, சிங்களமொழியில் கவிதைமூலம் சிறந்ததொரு இலக்கியத்தையும் படைத்துள்ளான்; மகாவமிசம் எனும் இலங்கை வரலாற்றுக் குறிப்பேட்டை கி. பி. ஆரும்நூற்றாண்டுமுதல் பன்னிரண்டாம் நூற்றாண்டுவரை தொடர்ந்து எழுதுமாறு பணித்தான்; அதற்குச்'சூளவமிசம் என்று பெயரிட்டான். புத்தசமயத் துறவிகளைக் கொண்ட மாநாடு ஒன்று நடத்திச் சமயத்தைத் துளக்கமுறச் செய்தான். கி. பி. 1268ல் அரசுரிமையைத் துறந்தான். இவன் மகன் நான்காம் விசயபாகு அரசனானான். சந்திரபானுவின் இரண்டாம் படையெடுப்பை விசயபாகு எதிர்த்துப் போரிட்டுப் புறமுதுகிடச் செய்தான். அனுராதபுரம், பொலநறுவா முதலிய நகரங்களை மீண்டும் சிறப்புடன் விளங்குமாறு புதுப்பித்தான். இவனுடைய தந்தை மீண்டும் முடிசூட்டிக் கொண்டார். கி. பி. 1269ல் 2ம் பராக்கிரமபாகு இறந்தான். இவனுடைய மகனான விசயபாகு படைத்தலைவனால் கொலைசெய்யப்பட்டான்.

அப் படைத்தலைவன் சிறிது காலம் ஆண்டான். விசயபாகுவின் தம்பியான புவனேகபாகு படைத்தலைவனைக் கொன்று நாட்டைக் கைப்பற்றினான். இத் தருணத்தில் சுந்தரபாண்டியன் இலங்கையின் மீது படையெடுத்துவந்தான். அப்பொழுது அவன் திருகோணமலையில் பாண்டியன் சின்னமாகிய கயல் மீன்களைப் பொறித்துச் சென்றான். திருகோணமலையின் வாயிலில் இரு பக்கங்களிலுமுள்ள கற்களில் அக் கயல் மீன்கள் காண்பவர் கருத்தைத் கவரும் நிலையில் இன்றும் காட்சி வழங்குகின்றன. போரில் வெற்றி பெற்ற பாண்டியன் சிங்கள அரசன் பால் யானைகளையும், பலவகை விலையுயர்ந்த பொருள்களையும் திறையாகப் பெற்றுத் திரும்பினான். அவனுடைய ஆட்சியின் இறுதிக் காலத்தில் எகிப்து நாட்டு சுல்தானோடு நேச உடன்படிக்கை செய்து கொண்டான்.

கி. பி. 1283 முதல் 1302 வரை இலங்கையின் வரலாறு இருள் செறிந்து காணப்படுகிறது. கி பி.


உங்கள் மோட்டார் வாகனங்கள் பழுதுபட்டுவிட்டனவா?

இங்கே வாருங்கள்!

விரைவாகவும் சரியாகவும் திருத்திக் கொடுப்போம்.

**ஸ்ரீதர் மோட்டோர் வேர்க்ஸ்**

50/28, பண்ணை ரோட், கொட்டடி

**யாழ்ப்பாணம்.**

1224 ல் முதல்மாறவர்மன் குலசேகர பாண்டியனின் படைத் தலைவனுக யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்த ஆரியச்சக்கரவர்த்தி இலங்கையின்மீது படையெடுத்து வந்தான். புத்தரின் புனிதப் பல்லைக் கைப்பற்றிக் கொண்டு அவன் திரும்பிச் சென்ருன். அதைஅறிந்த சிங்கள மக்கள் பெருந்துன்பக்கடலுள் ஆழ்ந்தனர். இந் நிலையில் மார்க்கோபோலோஎன்ற வெனிஸ் நகர யாத்திரிகன் இலங்கைக்கு வந்தான்.

கி. பி. 1302 ல் ஆட்சிக்கு வந்த மூன்ரும் பராக்கிரமபாகு பாண்டிய நாட்டின்மீது படையெடுத்துச் சென்று, புத்தர் பெருமானின் புனிதப் பல்லைத் திரும்பத் தாயகத்திற்குக் கொண்டுவந்தான். அதனுல், இலங்கை வரலாற்றேடுகளில் அவன் சிறப்பிடத்தைப் பெற்ருன். நான்காம் பராக்கிரமபாகு காலத்தில் புத்த சாதகக் கதைகள் சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப் பட்டன. அவன் பல விகாரங்களைக் கட்டினுன். சூளவமிசத்தை அவன் ஆட்சிக்காலம்வரை நிறைவுடையதாக்கினுன். இபின் படுடா (Ibin Batuta) என்பவன் 1342ல் இலங்கையைக் காணவந்தான்.

நான்காம் புவனேகபாகு (1345—54) என்ற அரசன் தன் தலைநகரைக் கண்டிக்கு அருகிலுள்ள கம்போலா (Gampola)விற்கு மாற்றிக்கொண்டான். அங்கு இரண்டு புத்தவிகாரங்களைக் கட்டினுன். மூன்ரும் விக்கிரமபாகுவின் ஆட்சிக்காலத்தில் கொழும்பிற்கு அருகில் கோட்டை (Cotte) எனும் கோட்டை கட்டப்பட்டது. யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் அரசர்களின் படையெடுப்பை எதிர்த்து இவன் வெற்றிபெற்ருன்.

தென்னுர்க்காடு மாவட்டத்தில் செஞ்சிக்கு அருகிலுள்ள ஆலம்பூண்டியில் விசயநகர மன்னன் முதலாம் விருபாக்கன் கல்வெட்டொன்று கிடைத்து இருக்கிறது. அது கி. பி. 1383ல் பொறிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அதில் விசயநகர அரசன் சிங்களத்தை வெற்றி கொண்டதாகவும், அங்கு பெற்ற பரிசுப்பொருட்களைத் தனது தந்தையான இரண்டாம் அரியரனுக்கு அனுப்பி வைத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் இதைப் பற்றித் தெளிவாக ஒன்றும் அறிய முடியவில்லை.

நான்காம் விசயபாகு (கி. பி. 1397—1409)வையும், அவனுடைய அரசியையும் சீனத்தூதனை சிங் ஒ (Ching Ho) சீனுவிற்குத் தூக்கிக் கொண்டு போய்விட்டதாகத் தெரிகிறது. ஆரும் பராக்கிரமபாகு (1412—68) கோட்டையைத் தலைநகராகக்கொண்டு ஆளத்தொடங்கினுன். இவன் யாழ்ப்பாணத்தை வென்று தன் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தான். இவன் பல கோயில்களையும் விகாரங்களையும் கட்டினுன். இராகுல தேரர் போன்ற சிங்களமொழிப் புலவர்களைப் போற்றியதன் மூலம் அவன் சிங்கள மொழி இலக்கியத்தை வளர்த்தான். "இரண்டாம் பராக்கிரமபாகுவிற்குப் பிறகு இவனது ஆட்சிக்காலத்தில் இலங்கை பலதுறைகளிலும் உயர் நிலையை அடைந்து சிறந்துவிளங்கியது. இதற்கு ஒப்புமை கூறத்தக்க நிலையினை அப் புகழ்மிக்க நாடு

அடையவில்லை" என்பது இங்கு கருதத்தக்கதாகும்.

எட்டாம் பராக்கிரமபாகு (1484-1509)வின் ஆட்சிக்காலத்தில் போர்ச்சுக்கீசிய இராசப் பிரதிநிதியின் மகன் இலங்கைக்கு வந்தான். அந்நிலையில் இலங்கை அரசன் தன்னைப் பகைவர்களிடமிருந்து காப்பாற்றினால், அவனுக்கு யானைகளையும் இலவங்கப்பட்டைகளையும் தருவதாகக் கூறினான். பிறகு போர்ச்சுக்கீசியரோடு இவ்வரசன் கி.பி.1505ல் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டான். போச்சுக்கீசியரின் நாடுபிடிக்கும் பேராசையும், தங்கள் சமயத்தைப் பரப்புவதில் கொண்டிருந்த ஆர்வமும் இலங்கையின் பெரும் பகுதியைத் தங்கள் ஆட்சிக்குக்கீழ்க் கொண்டுவரத் தூண்டியது. கண்டி ஒன்றுதான் சுதந்திர நாடாகத் தனித்து நின்றது. கடற்கரையோரங்களில் வாழ்ந்த சிங்களவர்களுள் பெரும்பான்மையோர் போர்ச்சுக்கீசிய பாதிரிகளால் கிறித்தவ சமயத்திற்கு மாற்றப்பட்டனர்

கி.பி.பதினேழாம் நூற்றுண்டில் இலங்கைக்கு ஒல்லாந்தர்கள் (டச்சுக்காரர்கள்)வந்து சேர்ந்தனர். அதையடுத்து ஐரோப்பிய நாடுகளிடையே கடல்கடந்த நாடுகளில் தங்கள் பேரரசை நிறுவும் போராட்டம் தொடங்கியது. இறுதியில் இந்தியாவோடு இலங்கையும் ஆங்கிலேயரின் (1796ல்) ஆட்சிக்குட்பட்டது.

தமிழகத்திற்கும் இலங்கைக்கும் நெடுங்காலமாக இருந்துவரும் தொடர்பு இன்றுவரை நிலைத்த ஒன்றுகவே இருந்துவருகிறது. இலங்கையில் வாழும் தமிழர்கள் தமிழகத்தைத் தங்கள் தாயகமாகவே கருதிவருகின்றனர். இலங்கையில் வாழும் சைவ, பௌத்த சமயங்களைத்தழுவிய மக்கள், இன்றும் இமயம்முதல் குமரிவரை யாத்திரைசெய்து திருக்கோயில்களைக் கண்டு வழிபடும் வழக்கமுடையவர்களாகவே உள்ளனர். மேலும் பன்னெடுங்காலமாக இலங்கையில் சிறப்புமிக்க பொருள்களாகப் போற்றிவணங்கும் பழம் பொருட் சின்னங்கள் இரண்டும் இந்தியாவோடு இலங்கை கொண்டுள்ள நெருங்கிய தொடர்பிற்குக் கண்கண்ட சான்றுக விளங்குகின்றன. அவைகளுள் ஒன்று முன்பு குறிப்பிடப்பட்ட 'போதி'மரம். மற்றொன்று இலங்கைவாழ் மக்கள் மனத்தைக் கவர்ந்துள்ள புத்தர் பெருமானின் திருப்பல்.

இலங்கையில் வாழும் மக்களுள் பெரும்பகுதியினர் பௌத்த சமயத்தவர்களாவர். புத்தசமயப்பிரிவுகளுள் ஒன்றுகிய ஈனயானத்தின் சிறுநெறியின்) நிலைக்களமாக இலங்கை சிறப்புற்று விளங்குகிறது இங்குள்ள தாது கோபுரங்களையும், புத்தரது திருவுருவங்களையும் போன்ற அழகிய வடிவங்கள் உலகில் வேறெங்கும் காண்பது அரிது. புத்த சமயத்தின் தலையாயப் பண்புகள் இன்றும் இலங்கையில் சிறப்புடன் விளங்குகின்றன. அசோகன் காலத்தில் இலங்கையில் நுழைந்த புத்தசமயம் இன்றுவரை சிறந்த நிலையில் நின்று நிலவுவது வியக்கத்தக்கதாகும். புத்த சமயத்தின் தாயகமாகிய இந்தியாவில் புத்தசமயம் பத்தாம் நூற்றுண்டிற்கு முன்பே தன் செல்வாக்கை இழந்து, இருக்குமிடம்

தெரியாது] சீர்குலைந்தது. ஆனால், இங்கிருந்து இலங்கைக்குச் சென்ற புத்தசமயம் புதிய மண்ணில் நன்கு வேரூன்றித் தழைத்து வளர்ந்து, பூத்துக் காய்த்து, சிறந்த கனிகளை உலகிற்கு அளிக்கும் நிலையில் இன்று உள்ளமை பாராட்டுவதற்குரியதாகும்.

புத்தசமயத்திற்கு அடுத்த நிலையில் இலங்கை மக்களால் பின்பற்றப்படுவது சைவசமயமாகும். சைவசமயம் தமிழ் மன்னர்களின் ஆட்சியின் பொழுது இலங்கையில் சிறப்பிடம் பெற்றது. இலங்கையின் வட பகுதியில் வாழும் தமிழ் மக்களுள் பெரும்பாலோர் சைவசமயத்தைத் தழுவியவர்களாவர். பௌத்தமும் சைவமும் நெடுங்காலமாக இலங்கை மக்களால் பின்பற்றப்படுகின்றமையால் இவ்விருவகைச் சமயத்தின் வழிபாட்டிலும் மக்கள் வேற்றுமையுணர்வின்றிக் கலந்து கொள்ளுவது குறிப்பிடத்தக்கது. இந்துச் சமயத்திற்குரிய தெய்வ வடிவங்கள் பௌத்தர் கோயில்களிலும் காணப்படுகின்றன. 'திருமால் புத்தரின் சிறந்த பக்தர் என்றும், அவர் சிறந்த பௌத்தர்களோடு நட்பு கொள்ள விரும்பியே பௌத்த கோயில்களில் நின்று கொண்டிருக்கின்றார்' என்றும் சிங்கள மக்கள் கருதுகின்றனர், விநாயகர், கதிர்காம வேலர் முதலிய இந்து சமயத்திற்குரிய தெய்வங்களைப் பௌத்தர்கள் வணங்கிவருவது இங்கு நினைவுகூரத்தக்கதாகும். கதிர்காம வேலரைத் தொன்று தொட்டு பௌத்தர்கள் வழிபட்டு வருகின்றனர். அக்கோயில் இன்றும் பௌத்தர்களின் கண்காணிப்பில் இருந்து வருவது இதற்குச் சிறந்ததொரு சான்றாகும்.

பண்டைத் தமிழ் மக்கள் முருகனைக் குறிஞ்சி நிலத்திற்கு (மலைக்கு)ரிய தெய்வமாகப் போற்றி வழிபட்டனர். இம்முறையில் இலங்கையிலுள்ள கதிரை மலையிலும் முருகவழிபாடு சிறப்புற்று விளங்குவது குறிப்பிடத்தக்கது. துட்ட கெமுனு (கி. பி. 161–137) என்ற சிங்கள அரசன் காலத்திற்கு முன்பிருந்தே கதிர்காமக் கோவிலுக்கு மக்கள் பெருந்திரளாகச் சென்று வழிபட்டு வருகின்றனர் என்பது அம்மலையின் வரலாற்றால் தெரிய வருகிறது. இதனால் தொல்லிலங்கையில் முருகன் வழிபாடு பழங்கால முதல் சிறப்புடன் விளங்கி வருவது புலனாகின்றது.

முதலாம் இராசராசன் காலத்தில் திருக்கேதீச்சுரர் கோயில் சிறந்த முறையில் கட்டப்பட்டது திருக்கோணேசர் ஆலயம் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டது என்றும் தெரிகிறது. இராசராசன் திருக்கேதீச்சுரத்தை அழகுறக் கட்டுவதற்கு முன்பே அக்கோயிலும், திருக்கோணேசர் கோயிலும் வட இலங்கையில் சிறப்புற்று விளங்கியமை தேவாரத்தால் அறியப்படுகிறது. தேவாரம் பாடிய மூவர் முதலிகள் இத் திருக்கோயில்களில் கோயில்கொண்டுள்ள இறைவனைப் போற்றிப் பாடிய தேவாரப் பதிகங்கள் கிடைத்துள்ளமையால் இக்கோயில்கள் கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்பே இலங்கையில் இருந்தமை விளக்கமுறுகிறது. எனவே, கி. பி. ஏழாம் நூற்றாண்

டிற்கு முன்பே இலங்கை மக்களுள் ஒரு சாரார் சைவசமயத்தைப் போற்றினர் என்பது புலனாகின்றது.

இவ்வாறு தமிழகத்திற்கும் இலங்கைக்கும் சற்றேறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாக நெருங்கிய தொடர்புஇருந்து வருகிறது. தமிழகத்து மண்ணில் அரும்பிய கலை, சமயம், பண்பாடு முதலியவை எல்லாம் இலங்கையின் இயற்கைச் சூழ்நிலைக்கும் மக்களின் மனவளத்திற்கும் ஏற்றவகையில் அங்கு நன்கு செழித்து வளர்ந்ததைக் கண்டோம். அன்று தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையே இருந்த தொடர்பு என்றும் போற்றத்தக்க சிறப்புடையதாகும்.

(முற்றும்)


## மனக்கவலை தீர வேண்டுமா ?

எந்தவிதமான மனக் கவலைகள், கரைச்சல்கள், இருப்பினும் அவைகளை விபரமாக எழுதுங்கள். உங்கள் காரணங்களை மந்திர சக்தியின் மூலம் நிவர்த்தி செய்து தரமுடியும். இரகசியங்கள் வெளியிடப்படமாட்டா.



கவர்மென்ட் ரிஜிஸ்டர் மாந்திரிக வைத்தியர்

**பி. எம். திஸநாயக்கா**

**நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா**

அருத எண்ணெய் தலைமைக் காரியாலயம்

**கப்பளை.**

# ராசாத்தி!

இலங்கையர்கோன் நினைவுச் சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கதை இது. நிகழ்கால நடப்பும் எதிர் கால நினைவுகளும் மாறி மாறிக் கலந்து வரும் இக் கதையைச் சுவையுடன் எழுதும் செங்கை ஆழியானை நமது வாசகர்கள் நன்கு அறிவார்கள்.

விழிகள் இரண்டும் ஈக்களாக மாறிவிடுகின்றன. எனக்கே அதிசயமாக இருக்கிறது. அச் சிறுமியிடம் அத்தகையதொரு கவர்ச்சியா?

எட்டுவயதுதான் இருக்கும்; ஆனால் பெரும்பாலும் அதற்கும் குறைவாகத்தான் இருக்குமென்றுதான் நான் நினைக்கின்றேன். குறுகுறுக்கும் விழிகளை அகலத் திறந்து கொண்டுயன்னலுக்குவெளியேபார்வையைப் பதித்துக் கொண்டிருக்கிருள். மாம்பழம்போன்ற சிவந்த கன்னங்களில் சிரிக்கும்போது குழிவிழுகிறது.

—அதிர்ஷ்டக்காரிதான்.

வலதுபக்கக் கீழ்த்தாடையில் ஒரு சிறு பாலுண்ணி.

அவள் சிலவேளைகளில் யன்னலின் கீழ்விளிம்பில் நாடியைப் பதித்து வெளியே தலைசாய்த்துப் பார்க்கின்ருள். அப்போதெல்லாம், அவளுக்குப் பக்கத்தில் இருந்த தாயின் குரல் எச்சரிக்கும்.

"ராசாத்தி! எத்தனைதரம் சொல்லுறது? கண்ணுக்குள் கரி விழுந்துவிடப் போகுது!"

தாயின் குரலில் கண்டிப்பு இருக்காது, பரிவுதான் இருக்கும், என் அம்மாவைப்போல.

அவள் தாயின் குரலிற்கு அசைந்துகொடுப்பதாகத் தெரியவில்லை,

**செங்கை ஆழியான்**

புகைவண்டி ஊளையிட்டபடி ஓடிக் கொண்டிருக்கிறது; அவள் வெளியே தலையை நீட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டபடியே வருகிறாள்.

"ராசாத்தி...!" திடீரென்று கண்டிப்பு நிறைந்த ஒரு குரல் எழு கிறது, என்பக்கத்திலிருந்து.

அவள் திடுக்கிட்டவளாகத் தலையை உள்ளே இழுத்துக்கொள் கிறாள்.

"என்னப்பா...?"

"அம்மா சொல்வது உனக்குக் கேட்கவில்லை...?"

"குழந்தையை வெருட்டாதீர் கள்!" என்று பரிந்து வருகிறாள், அம்மா.

ராசாத்தி ஒருகணம் தந்தையை நிமிர்ந்து பார்க்கிறாள். அவர் கண் களைச் சந்திக்கும் சக்தி அவளுக் கில்லை. மறுகணம் சிணுங்கியபடி தாயின் தோளில் முகத்தைப் புதைத்துக்கொள்கிறாள்.

தாயின் கரம் வாஞ்சையுடன் அவள் முதுகைத்தடவிக் கொடுக் கிறது. அப்பா பத்திரிகை ஒன்றுள் முகத்தைப் புதைக்கிறார்.

நான் .........?

புகைவண்டி இருப்புப் பாதை களை விழுங்கித் தள்ளுகிறது.

—ராசாத்தி அழகாக வளர்ந்து விடுவாள்: குறுகுறுக்கும் விழிகளில் மருட்சியும், உலகத்தின் அழகெல் லாமும் சேர்ந்து பார்த்தவர்களைக் கிறுங்க வைக்கும். சிரிக்கும் போது கன்னங்களில் விழும் குழிவுகள் இளைஞர்களின் நெஞ்சங்களை நிச் சயமாகத் துடிக்க வைக்கும்.

அப்போதும் வலத்திடையி லுள்ள பாலுண்ணி அவளது அழ கிற்குப் பரிகாரமாகத் தான் இருக் கப் போகிறது.

பருவத்தின் வனப்புகள் உட லெல்லாம் குறைந்து கொஞ்ச, பரு வத்தின் கனவுகள் உள்ளமெல் லாம் நிறைந்து இனிக்கும். அவள் இன்ப நினைவுகளின் தழுவலில் நெளிவாள்.

கூந்தலை அழகாக எண்ணெய் தடவி வாரிப் பின்னலிட்டிருப்பாள்: அவற்றை இரண்டாக மடித்துக் கட்டியிருப்பாளோ ...?

காலை மலரும்.

மணிக்கூட்டின் பெரிய முள் நான்கிலும், சிறிய முள் எட்டிலும் நிற்கும்.

கண்ணாடிமுன் நேரம் கழியும். தலையை வாரிப்பின்னி, பின்னலின் நடுவில் கறுத்த 'றிபன்' கட்டிக் கொள்வாள். முகத்திற்கு அளவாகப் பவுடர் தடவிப் புருவங்களின் நடு வில், நெற்றியில், சந்தினால் தில கம் இட்டுக் கொள்வாள்.

அவளிடும் திலகம் வட்டமாக ஒருபோதும் இருக்காது, நெருப்புக் குச்சியின் அடியில் சாந்தைத் தொட்டு, நெற்றியின் குறுக்கே, நீளமாக இட்டுக்கொள்வாள்; நீளத் தின் கீழே ஒரு சிறு வட்டம்.

"ராசாத்தி! பள்ளிக்கு நேர மாகிறது! சாப்பிடக் கெதியாக வா வென்..." அடுக்களைக்குள்ளிருந்து அம்மாவின் குரல் கேட்கும்.

'அம்மா, என் அம்மா, உன் அன்பை உணரத் தவறிவிட்டேன், என்னை மன்னித்துவிடு!'

"இதோ, வாறன், அம்மா!' என்று பதில் கொடுப்பாள் ராசாத்தி; மேலும், சில விநாடிகள்

அலங்காரத்துள் கலக்கும்.

"ராசாத்தி...!" இது அப்பாவின் அதட்டல்.

அவள் அலங்காரத்தை முடித்துக்கொண்டு, சாப்பிடவிரைந்து செல்வாள்.

இரண்டு கோப்பைகள் கழுவி வைக்கப்பட்டிருக்கும். ஒன்றின் முன் அப்பா அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருப்பார். ஒன்றின் முன் அவள் அமர்வாள்.

அம்மா இடியப்பங்களை எடுத்து அவள் கோப்பையில் போடுவாள்.

ஒன்று... இரண்டு... மூன்று...

"ஐயையோ, போதுமம்மா!" என்று தடுப்பாள், ராசாத்தி. அம்மா அப்பாவைப் பார்ப்பாள். அப்பா மகளைப் பார்ப்பார்.

ராசாத்தியின் விழிகள் அழுது விடுவனபோலக் கலங்கும். மேலும் இரண்டு இடியப்பங்களை எடுத்துத் தன் கோப்பையில் போட்டுக்கொள்வாள்.

அப்பாவின் உதடுகளில் புன்னகை நெளியும்.

"அம்மா! போட்டு வாறேன்! அப்பா, போட்டுவாறேன்!"

"கவனம், குஞ்சு! பார்த்துப் போ...!" என்பாள், அம்மா.

"அவளுக்கு எல்லாம் தெரியும்!" என்பார் அப்பா.

'அப்பா, என் அப்பா, என்மீது உயிரையே வைத்திருந்தீர்களே? நான் உங்களுக்குச் செய்தது...? மன்னித்துவிடுங்கள், அப்பா, மன்னித்துவிடுங்கள்!'

"ஏன், அழுகிறீர்...?" ராசாத்தியின் அம்மாதான் என்னைக் கேட்கிறுள்.



"ஒன்றுமில்லை! கண்ணிற்குள் கரி விழுந்துவிட்டுது!"

"நீர் யாழ்ப்பாணமா போகிறீர்?"

"ஓம்... நீங்கள்...?"

"யாழ்ப்பாணந்தான்..."

"யாழ்ப்பாணத்தில் எந்த விடம்...?"

"ஓட்டுமடம்...!"

"நாங்கள் கொக்குவில்! தனியாகவா போகிறீர்?"

இதற்கு நானென்ன சொல்வேன்?

"அப்பா ஸ்ரேசனுக்கு வருவார்"

எவ்வளவு பொய்?

"உமக்கும் எங்கள் ராசாத்தியைப்போல வலத்தாடையில் பாலுண்ணி ஒன்றிருக்குது! ராசாத்தியைப்போலத்தான் நீர் முன்பு இருந்திருப்பீர்? உம்முடைய பேர் என்ன...?"

"மேகலை...!"

'ராசாத்தியைப்போல இருக்கிறேனு? என்னைப்போல ராசாத்தியா...?'

புகைவண்டி இரும்புப்பாதைகளை விழுங்கித்தள்ளுகிறது,

—வீதியில் கார்கள் நெருக்கமாக விரைந்து வந்துகொண்டிருக்கும். பாடசாலை நேரமல்லவா?

ராசாத்தி ஓட்டுமடம் வீதியின் கரையோடு, மெதுவாக, இந்துமகளிர் கல்லூரிநோக்கி வந்துகொண்டிருப்பாள். அவளோடு வேறும் சில கல்லூரி மாணவிகள் வந்துகொண்டிருப்பார்கள்.

ஓட்டுமடம் வீதியிலிருந்து, சிவலிங்கப்புளியடியில் கால்களைப் பதிக்கும்போது, மதகுகளில் உட்கார்ந்திருப்பவர்களின் விழிகளும் கல்லூரி

மாணவர்களுடைய விழிகளும் அவளை அள்ளிப்பருகத் துடிக்கும்.

''மிகவும் நல்லா இருக்கிறாள்...?"

''சோக்கான குட்டியடா...?"

''நடையைப் பார்த்தாயா...?"

உதட்டிலே பெருமிதச் சிரிப்பை மலர்த்தியபடி அவள் நடந்து கொண்டிருப்பாள்.

கனகசபை ஒழுங்கையில் திரும்பி, கொலிஜ்ரேட்டில் மிதந்து, பின் அரசடி வீதியில் திரும்பும் போது, ஒரு இளைஞன் வெகுவேகமாகச் சைக்கிலில் வருவான். இவளை நெருங்கியதும் சைக்கிலின் வேகம் குறையும்.

அவனுதடுகளில் மென்னகை மலரும்.

அவள் அவனைக் கடைக்கண்ணால் பார்ப்பாள்; கன்னங்களில் குழிவிழும்.

பார்வைகள்... தூதுக்கள்... கடிதங்கள்... சந்திப்புகள்...!

அவன் அவள் கன்னங்களைக் கைகளில் ஏந்துவானா அல்லது மென்கரங்களைக் கைகளில் அடக்கிக் கொள்வானா? ஒருபிடிக்குள் அடங்கி விடும் அவளிடையைக் கரத்தால் வளைத்துத் தன்னோடு நெருக்கி இழுத்துக்கொள்வானோ?

ராசாத்தி குழிவிழச் சிரிப்பாளா? அல்லது முகம் சிவக்க நாணித் துவழ்வாளா? அவன் அணைப்பின் இறுக்கத்துள் தன்வசமிழந்து கிடப்பாளோ?

'பாவி உன்னை நான் நம்பி ஏமாந்தேனே?'

''ராசாத்தி! ராசாத்தி... என்ன அதற்குள் நித்திரை? இந்தப் பாலைக் குடி...!" 'பிளாஸ்கில்' இருந்த பாலை ஊற்றி, அவளுக்குக் கொடுக்கிறாள். அம்மா. ராசாத்தி சிணுங்கியபடி பாலைக் குடிக்கிறாள்.

''என்ன சிணுங்கல், ராசாத்தி?" என்று அப்பா கேட்கிறார்.

''நானொன்றும் சிணுங்கவில்லை!..."

அப்பா சிரிக்கிறார்; எழுந்து வந்து ராசாத்திக்கு அருகில் உட்கார்ந்து, அவளை அணைத்துக்கொள்கிறார்.

'நானும் ராசாத்தியைப் போல...'

'அப்பா, அப்பா... கண்டிப்பிற்குள் நிறைந்திருந்த அன்பை நானுணரத் தவறிவிட்டேனே?'

புகைவண்டி திடீரென்று குலுக்கிக்கொண்டு நிற்கிறது எல்லாரும் தலையை வெளியே நீட்டிப் பார்க்கிறார்கள்.

சுற்றிவர ஒரே பொட்டல்காடு; ஒரு ஸ்ரேசனும் இருப்பதாகத் தெரியவில்லை.

யாரோ ஒருவன் சக்கரத்துள் தலையை மாட்டிவிட்டான்.

''நாம் நினைக்கிறதுபோல எது தான், நடக்கிறது?"

''நீங்கள் எதைச் சொல்கிறீர்கள்?''

''இன்றைக்காவது வண்டி யாழ்ப்பாணத்திற்குக் கெதியாகப் போய்விடும் என்று நினைத்தேன்... எங்கை இனிப் போகப் போகிறது?"

'நினைக்கிறதுபோல எதுதான் நடக்கிறது?"

—''ராசாத்தி"... என்று சீறுவார், அப்பா: "இன்றோடு பள்ளிக்கு நீ போவதை நிறுத்திக்கொள்! நீ படித்துக்கொட்டியது போதும்! வீட்டோடு இரு...!''

"அப்பா...!" என்று 'கிரீச்'சிடு

வாள், ராசாத்தி. அவளுடைய ஆசைகள், இன்பங்கள், கனவுகள் எல்லாம் அவள் தலைமீது இடிந்து விழும். அவள் படிப்பதற்கு மட்டுந் தான் சென்றுளா?

நினைவில் வடுவாகப் பதிந்து போன அந்த இளைஞனின் முகம்... அவன் சைக்கிலை லாவகமாக ஓட்டி வரும் அழகு... அவனைக் கண்டதும் அவனுதடுகளில் மலர்கின்ற புன்னகை... அவன் தரும் காதலில் குழைத்த கடிதங்கள்...

''அப்பா! ஏனப்பா...?'' என்று விதிர்விதிர்த்துப்போய் வினவுவாள், ராசாத்தி.

''அந்தப் பரிசுகேட்டை எல்லாம் சொல்லச் சொல்கிருயா? உன்னுலை என் மானம்... மரியாதை எல்லாம் காற்ருேடு பறக்கிறது காணுதே...?''

''அப்பா...!'' —விம்முவாள்: ''நான் தொடர்ந்து படிக்கப்போகிறேன் அப்பா!''

''நீ படிக்கவா போனே...?''

அம்மாவிடம் ஓடுவாள்; அம்மா முகத்தைத் திருப்பிக்கொள்வாள்.

''அம்மா, அம்மா!''

''அடி ராசாத்தி! உன்னை எவ்வளவு செல்லமாக வளர்த்தோம்! அப்படி வளர்க்க நீ இப்படி ஒரு எண்ணம் கொண்டாயே?''

ராசாத்தி தலையணைக்குள் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழுவாள்; இமைகள் மூடமறுக்கும். அவள் இதயக் கதவங்களைத் திறந்து மூடுவான், ஒருவன்.

தலையணை கண்ணீரால் தோயும்.

''இது கிளிநொச்சியா...?''

''இல்லை... கொடிகாமம்—!''

''கெதியாகப் போயிடுவம்...''

—''அப்பா! என்னுல் முடியாதப்பா...!'' என்று கதறுவாள், ராசாத்தி: ''நான் ஒருபோதும் கலியாணம் செய்துகொள்ளமாட்டேன்!''

'ராசாத்தி!'' என்று கத்துவார், அப்பா: ''நான் பேசிக்கொண்டு வந்தவனைத்தான் நீ செய்ய வேணும்! உன்ரை எண்ணப்படி மட்டும் நடக்கும் என்று எண்ணுதே...!''

ராசாத்தி தலையை நிமிர்த்தித் தந்தையைப் பார்ப்பாள்; அப்பார் வையில் எதற்குமே அஞ்சாத உறுதி தொனிக்கும்.

''அப்பா! ஒருபோதும் உங்கட விருப்பத்திற்கு நான் ஒத்துவரவே மாட்டன்...!''

''இதுதான் உன் முடிவா?''

''ஆமாம்...''

''அதையும் நான் பார்த்துவிடுகிறன்...!''—அப்பா கோபமாக வெளியேறுவார்,

அதன்பின் ராசாத்தி என்ன செய்வாள்? தற்கொலை செய்து கொள்வாளோ? அல்லது...இல்லை இல்லை... நிச்சயமாக அவள் விரும்பியவனேடு ஓடிவிடுவாள். பின், அவனுல் ஏமாற்றப்பட்டுத் திரும்பி விடுவாளோ...? திரும்பிவந்த அவளைப் பெற்ருேர் ஏற்றுக்கொள்வார்களோ?

'அப்பா, அப்பா, உங்களுக்கு மானம் இருக்கிறது...!'

புகைவண்டிக்குள் கலகலப்பு குறைகிறது; யாழ்ப்பாண ஸ்ரேசன் நெருங்கிவிட்டது.

என் இதயமேன் துடியாய்த் துடிக்கிறது.

இறங்குவதற்கு எல்லாரும் அவசரப்படுகிருர்கள்.

ராசாத்தியின் அப்பா சாமான்களை ஒவ்வொன்ருக இறக்குகிருர்; அம்மா அதற்கு உதவிசெய்கிருள். ராசாத்தி இருந்தவிடத்தைவிட்டு இறங்காமல் அப்படியே இருக்கிருள்.

"நீ முதலில் இறங்கு கவனமாக...!" என்று மனைவியிடம் கூறுகிருர், அப்பா.

"ராசாத்தி...?" என்று தயங்குகிருள். அம்மா.

"அவளை நான் தூக்கி வாறன்—!"

எட்டுவயதுச் சிறுமியால் இறங்கமுடியாதா?

அப்பா ராசாத்தியை ஆதரவாக அணைத்துத் தூக்குகிருர்.

என்னிதயம் வெடிக்கிறது: ஐயோ! அவர் தூக்கியபோதுதான் அவளை நன்கு சவனிக்கிறேன்.

ராசாத்தியின் கால்கள் மெலிந்து நடக்கப் பலமற்றவையாகத் துவண்டு, சூம்பிக்கிடக்கின்றன. என் கற்பனைகள் எல்லாம் பூதங்களாக என்னை அமுக்குகின்றன.

அவை கற்பனையா?

அசைபோட்ட மிருகம் நான்,

'அப்பா, என்னை ஏற்றுக் கொள்வீர்களா?'

கண்கள் கலங்கித் தவிக்கின்றன; உதடுகள் முணுமுணுக்கின்றன;

"ராசாத்தி, நீ அதிர்ஷ்டக்காரியடி!"


**Chandra Knitting Company**

HIGH CLASS HOSIERY MANUFACTURERS

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும்
பெருமை மிகுந்த

**சந்திரா பெனியன், பெனியன் வகைகள்**

- ரீ ஷேட்
- ஸ்போட் ஷேட்
- பேபி சன் சூட்
- பேபி வெஸ்ட்
- ஸ்வெட்டர்ஸ்

முதலியவற்றையே கேட்டு வாங்கி உபயோகியுங்கள்

**சந்திரா நிட்டிங் கம்பனி**

(உரிமையாளர்: M. T. செல்லையா)

64, பிறவுண் வீதி : யாழ்ப்பாணம்

# குருத்து

இலங்கையர்கோன் நினைவுச் சிறுகதைப் போட்டியில் மூன்ருவது பரிசுபெற்ற சிறுகதை "குருத்து". இக்கதையை எழுதியவர் இலக்கியப் பூஞ்செடிக்கு அழகூட்டும் ஓர் இளங் குருத்து. தன்னையீன்ற தந்தையையும் தானீன்ற பிள்ளையையும் காக்கும் கடமையை மேற்கொண்ட ஓரிளந்தாயின் மெல்லிய உணர்வுகளைத் துல்லியமான கவிதை நடையிற் கூறுகின்ருர், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவராகிய சத்திய மூர்த்தி.

செ. சத்தியமூர்த்தி

நிலமெலாம் நித்திலமாய்ப் பனிபூத்து ஒளிர்கின்ற, காகம் எழுந்து கரையாத காலைக் கருக்கிருட்டு. சோலையற்றுச் சுனையற்றுக் கிடக்கும் பரந்த வயல் வெளியில், கூரையிற்று ஓலையற்றுக் காணும் கோவிலொன்று. சொல்லமையுஞ் செல்வரற்ற ஊரில்—சித்திரமற்ற சுவரமைந்த பழமையான முருகன் ஆலயம்.

ஊரெல்லாம் ஒலிக்க எழுந்த அந்தக் கோவில் மணியோசை கூட்டியதோர் கூட்டம்—முருகன் பேரெலாம் சொல்லி—அவன் கோலத் திருமுகத்துக் குறுவிழியின் அருள்நோக்கிற்காகக் காத்துக்கிடந்தது. பாடுவார் பாடியும், கூடிக் குறையிரப்பார் தாமிரந்தும், ஆடுவார் ஆடியும் தேடுகின்ற செல்வம்—செய்யவொரு முகத்துச் சிலைவடிவாய் வீற்றிருந்தது.

சிறுமணி அசைந்து இளவொலி எழுப்ப, சங்கும் சேமக்கலமும் முழங்க, ஆர்க்கின்ற பெருமணியின் ஓசையிடையே அந்தக் கோவிற் பூசை ஆரம்பமாகியது. ஆலத்தி எடுக்க அர்ச்சகர் தூக்கிய கற்பூரக் கண்கள் சிந்திய சுடரொளியில் கற்பக்கிருகம்மாத்திரமின்றிக் கண்டிருந்தோர் உள்ளமெல்லாம் ஒளிர்ந்தது. நோக்கொத்து, நினைவொத்து நின்றவர்கள் பார்க்கும்படியாகக் கிரியைகள் நிறைவெய்தின. ஈற்றில்—பாடிடப்பணித்தகுருக்கள் உரை கேட்டதும், பாடினூர் ஒருவர் பரவசமாக. காப்பும், தேவாரந் திருவிசைப்பா முதலாம் அருள்மொழியும் பாடியபின்—மனமுருகிப் பாடலுற்ருர் மணிவாசகரின் திருவெம்பாவையை,

"ஆதியும் அந்தமுமில்லா
அரும்பெருஞ் சோதியை"

சோதியை அவர் பாடினுர். அவ் வேளை, கூப்பிய கரமும், குலைந்த கூந்தலும், பிழிந்துடுத்த உலராத ஆடையும், உலர்ந்து ஒட்டிய கன்னத்தில் வழிந்தோடும் கண்ணீருமாக வந்தாள் ஒருத்தி, தோய்ந்த பின் துவட்டாத ஈரக்கையால் திருநீற்றை அள்ளி பரந்த நெற்றியிற் பட்டைபட்டையாய்ப்பூசிக்கொண்டு, இருளோடு ஒன்றிச் சுவரோடு ஒதுங்கிநின்ருள். பாடிய பெரியவர் தொடர்ந்து பாடினுர்...

''பாசம் பரஞ்சோதிக்
கென்பாய்...''

சுவரோடு அணைந்துநின்ற அவளுடைய மேனி சிலிர்த்தது.உள்ளம் விறைத்தது. இதயம் பேசியது...; ''பாசம் பரஞ்சோதிக்கு...''—எந்தப் பரஞ்சோதிக்கு? இந்தக் கோவிலிலே குடிகொண்டிருக்கும் பரஞ்சோதிக்கா...? இதயக் கோவிலிற் குடிகொண்டு 'அம்மா' என அழைக்கும் அன்புப் பரஞ்சோதிக்கா...? குடிப் பெயரைச் சொல்லிக் குலம்விளங்கத் தழைத்த ஒரே செல்வன் பரஞ்சோதி; அவனிடத்துக் காட்டாத பரிவு—பாசம், இந்தப் பரஞ்சோதிக்கு அர்ப்பணமாவதா...? அவள் உயிரில் வாழும் தெய்வம், தாய்ப்பாசமுணரத் தவித்துக்கொண்டிருக்க, உள்ளத்தில் உறையுந் தெய்வத்திற்கு அதைக் காணிக்கையாக்குவதா? நினைவுகளின் மோதலினுல், நெஞ்சம் வெடித்துவிடுமாப்போல் விம்மினுள் அவள்.

''முத்தன்ன வெண்ணகையாய்
முன்வந்து...''

முத்தொக்கும் இளநகையின் மலர்ச்சிக்கே இடமின்றிக் காய்ந்து கறுத்துக்கிடந்த முகம் நிமிர்த்தி முன் நடந்து, ஆட்களோடு ஆளாய் அவளும்சேர்ந்து நின்றுகொண்டாள். நிணம்சோரும் புண்ணுன நெஞ்சத்தில் விளைந்தெழுந்த நெடுமூச்சு—காற்றேடு கலந்துவிட, மனஞ்சோர, உடல்சோர, நின்றவளின் கண்சோர்ந்த வெய்யநீர் கன்னத்தைத் தீய்த்து வடிந்தது. விழிசோரும் கண்ணீரைத் துடைத்துவிட்டுக்கொண்ட அவள். விதிசோர்ந்த துயரைத் துடைத்துவிடத் துணைவேண்டிக் கற்பக்கிருகத்துக் கடவுளை நோக்கினுள். அங்கு தூண்டாமணிவிளக்கின் துய்ய ஒளியிற் துலங்கிக்கொண்டிருந்தது மூலமூர்த்தியின் திருவுருவம்

''ஒள்நித் திலநகையாய்
இன்னம்...''

'உன் மனமுருகிக். கருணைசெய்ய வேண்டிநிற்கும் என் துயர் துடைக்க எண்ணம் கொண்டிலையோ! தெய்வமே!! உன்னிடத்தேயன்றி நான் மற்று யார்க்கு எடுத்துரைப்பேன்!!! உறுதியான கருங்கல்லாய் உன்னைச் சமைத்துவிட்டார்களேயென்று உணர் வழிந்துபோனுயோ! உற்ற துயர் துடைத்து உதவாயோ!! தெய்வமே!!!' அவள் நெஞ்சம் ஓலமிட்டது.

யுகங்களைச் சிருஷ்டித்து அநுபவத்தை வளர்க்கின்ற காலம் விடிை விடியாகக் கரைந்தது. அது கவலையால் வாடுகின்ற பெண்ணுக்கிரங்கவுமில்லை; கருணையே வேண்டிப் பாடுபவர்— பாலூறு தேன் வாய்ப்பாடலைக் கேட்போமென்று சோர்ந்துவிடவுமில்லை. அது கரைந்துகொண்டிருந்த வேகத்திற்

கலந்தது—பெரியவர் பாடிய பாடல்களுட் பல.

"போற்றியருளுக நின் ஆதி யாம் பாதமலர்"...

நெக்குருகி நினைப்பவர் நெஞ்சத்து நிறைந்து, அருள் சுரக்கும் அம்மையப்பனையும், குமரக் கடவுளையும் அவளும் போற்றினாள். வழங்குகின்ற பிரசாதத்தோடு 'வரமும் எனக்கருள்வான் வள்ளல்' என்று—நீட்டி இருகை நிறையப் பிரசாதம் பெற்றாள். கண்களில் அதை ஒற்றிக் கொண்டு ஓடினாள் தன் குடிலை நோக்கி, நுழைந்தாள் அதன் படலை நீக்கி.

உடலுருவி என்புறைக்கும் மார்கழி மாதக் கடுங்குளிருக் காற்றாது, காலொடு தலைசேரப் போர்த்திக் கொண்டு கூனிக் குறுகிக் கிடந்தார் அவள் தந்தை. அப்பாற் சீலை மேற்சீலை போட்டுப் போர்த்தி விட்டுப் போன தன் மகனை—முக்கிக் முனகிக் கொண்டு கிடக்கும் நிலையிற் கண்டாள். ஓசைப்படாமல் உள்ளே நுழைந்து, வாடிவதங்கிப் போன நேற்றுப் புனைந்த பூக்களை நீக்கினாள்—செத்தையிற் கட்டியிருந்த சிறிய தொரு முருகன் படத்திலிருந்து. கொண்டு வந்த பிரசாதத்தை அதன் முன் வைத்துக் கும்பிட்டெழுந்து—அதற்குப் புது மலர்களைப் புனைந்தாள். அந்தப் படம்—அது வெறும் படமல்ல அவளுக்கு; கருணையே பூத்த முகமும், அருளாலே செய்யுங்கையுமாக—அவளையும் அவளைச் சார்ந்தாரையுங் காத்து நிற்குங் கடவுளே அதுதான் என்று கருதினாள். நம்பிக்கை கொள்வதானாலும் ஆழமாக நம்பவேண்டும் என்று இலக்கணம் வகுக்கும் வடிவம் அவள்.

பிள்ளைக்குத் திருநீறு சாத்திப் பூவும் வைத்தாள். தானும் நீறு பூசிக் கொண்டாள். பூ...? அதை அவள் வைத்துக் கொள்ளவில்லை—வைத்துக்கொள்ள அருகதையற்றவள். 'விட்டுப்பிரியேன்' என்று அவளைத் தொட்டுத் தாலி கட்டியவன்—மூவாறு மாதங்களில் முடித்துக் கொண்டான் தன் கதையை. இன்பிற் திளைத்துச் சேவையிற் செழிக்க வேண்டிய அவள் பெண்மைக் கோலம் பறிபோய் விட்டது. மிஞ்சியதெல்லாம், கடமைக்காகவும் பாசத்திற்காகவும் வாழ வேண்டிய வாழ்வு தான். பெற்றெடுத்த தந்தையை பேணவேண்டியும், தான் பெற்றெடுத்த பிள்ளைக்கு அன்பு காட்டி ஆதரிக்கவுமே அவள் வாழ்கிறாள்—பட்ட மரமாக. இந்த மரத்துப் போன வாழ்விற்கும் பங்கம் வந்து விடக் கூடாதே என்பதுதான் அவள் பிரார்த்தனை.

நெற்றியில் நீறு சாத்தியதும் நெஞ்சமெல்லாம் நிறைந்து அவளை அணு அணுவாய்க் குடைந்து கொண்டிருந்த நினைவுகளும் கவலைகளும் நீங்கி விட்டாற் போன்றதொரு நிம்மதியை உணர்ந்தாள். அந்த உணர்விற் கிளர்ந்தது ஒரு நெடுமூச்சு. அதில் அவள் நெஞ்சத்தைப் பச்சைப் புண்ணாக்கிப் பரிதவிக்கவைத்திட்ட சோக நிகழ்ச்சியும் கலந்து வெளிப்பட்டது......

கொட்டுகின்ற மழையும், வெட்டுகின்ற மின்னலும், பல்லுக் கிட்டுகின்ற குளிரும், ஒருங்கேயமைய, பயங்கர இருள் மண்டிக் கிடந்தது போன வெள்ளியன்று இரவு.

உற்ற முதுமையிற் தன்னை ஒண்டிய தகப்பன் செத்து விடுமாப் போற் பிணி உற்றுக் கிடக்கக் கண்டு சோர்ந்திருந்தாள். அவ்வேளை—சாம் பிணத்தின் உயிர் அழிக்கும் பிணியே வந்துற்றதென்று. இரவெல்லாம் அங்கு தூங்கியெழ வந்து கூடியிருந்தாருள்—யாரோ—தூங்கியெழுந்து வந்த அவள் மகனை அழைத்து, "தேவாரந்திருவாசகம் தெரிந்திருந்தாற் பாடு தம்பி" என்று சொல்லக் கேட்டாள். அவனும் பழையதொரு புத்தகத்தைக் தூக்கி வந்து பாட்டன் பக்கம் வைத்து அமர்ந்தான். 'காலைப் பொழுதுப் பூசைவேளை ஆச்சென்று' ஆர்த்தது அப்போது கோவில்மணி. பூசை காணவென்று புறப்பட்டனர் எல்லோரும். தானும் 'போய்வாறேன்' என்றெழுந்து போனாள்.

ஒன்றன்பின் ஒன்ருகத் தானு வந்த பாடல்களைப் பாடினான் பரஞ்சோதி, பாட்டன் அருகிலிருந்து. அவ்வேளை கிழவனார் கண்மலரக் கண்டு "அப்பா" என்ருன் சிறுவன். "ம்..." என்று ஒலிசெய்து 'பாடென்ருர்' பாட்டனார். தாயவளும் அவ்வேளை வந்து, தன் முருகன்படத்தயலே சென்ருள். தேவாரம் திருவிசைப்பா, பல்லாண்டு முதலாய பலவும் பாடியவன் அடுத்திருந்த அருட்பாடற்றெகுப்பினை தட்டினான். அங்கோர் இடத்தில் அமைந்திருந்த, 'முத்துத்தாண்டவர்' கீர்த்தனையுள் சந்தம் உவந்தொரு பாடலைப் பாடினான்,

"இப்பவோ, பின்னையோ,
மத்தியானத்திலோ
இரவிதான் படுநேரமோ,
....................................
செப்பரிய வீட்டிலோ
காட்டிலோ வென்னுயிர்
பிரிந்திடும் நடராஜனே."

முருகன் படத்தைக் கும்பிட்டெழுந்தவள் காதில் இப்பாடல் விழுந்ததும், அவளுக்கு—உருக்கிய செம்பை உச்சியில் வார்த்தது போலிருந்தது. சாகக்கிடக்கும் தனையீன்ற தந்தையைப்பார்த்துத் தன் மகனே 'எப்பவோ சாவான் இவன்' என்று அங்கலாய்த்துக்கொண்டது போற் பதைபதைத்தாள். சினமொன்றே ஓங்கச் சிந்தை தடுமாறிச் சீறினள் .உற்றகடுங்கோபத்திற் பெற்றமகனென்றும் பாராமல் அலற அலற அடித்துவிட்டு ஓய்ந்தாள் அடித்தவள்ஓய்ந்துவிட்டாள். அடிபட்டவன்...?

அவன் உடல் வேதனையிற் புரண்டது. உள்ளம் ஏக்கத்திற் புரண்டது. ஏன்தான் தாய் அடித்தாளோ? என்று எண்ணி எண்ணிப் புழுங்கியது அவன் மனம். அவனது முடிவு, "அம்மாவுக்கு என்னிலே அன்பில்ல; நான் நல்லாய்ப் பாடுறது அவவுக்கு பிடிக்கேல்ல— எரிச்சல் பிடிச்சவா, அதான் எனக்கு அடிச்சவா;" இப்படி என்னென்னவோ எல்லாம் எண்ணியது அந்த இளமனம். அது கொண்ட ஏக்கம் எதையோ இழந்து விட்டது போன்ற உணர்வை எட்டியது. அந்த வேதனையே அவனைப் படுக்கையிற் போட்டுவிட்டது. படுக்கையிற் புரண்ட அவன் பட்டுடலின் தகிப்பை—காய்ச்சலை—ஏக்கக் காய்ச்சலை, உணர்ந்து கொண்டபோது தான் ஓய்ந்திருந்த அவளது உள்ளமும் குமுறியது, 'மெல்லிளங்காற்றுக்கே ஆற்ருது அலைகின்ற இளங் குருத்துச் செடிக்குத்தான் நிழல் குத்தி நீர் வார்க்க வேண்டும். பருத்து வளர்ந்த மரத்துக்கல்ல' என்று அடிக் கொரு தடவை அவளிதயம் அடித்துக் கூறியது.

"அடிக்காதையம்மா...அம்மா...! அம்மா...! அடிக்காதை..." ஈனசுரத்தில் முனகிய பரஞ்சோதியின் குரல் கேட்டு நினைவு கலைந்து திரும்பினாள். அனலாய்க் கொதித்த அவனுடலைப் பரிவோடு அருகமர்ந்து தடவிவிட்டுக் கொண்டு....

''என்னடா....ராசா...''என்ருள்.

''அடிக்காதையம்மா...அம்மா...! ஏனம்மா...! அடிச்சனி... இல்ல... இல்ல...நான்...நான்... கேக்கமாட் டேன்...... நீ...நீ ... அடிப்பியே... அம்மா!...''

அந்தக்குரல்...அதிற் தொனித்த ஏக்கம் அவளைத் கொல்லாமற் கொன் றது. அவள் நெஞ்சத்தைப் பிழந்து—அங்கு இரக்கமே இல்லை என்று எடுத்துக்காட்டியது; 'நீ மெல் லியல் வாய்ந்த பெண்ணல்ல... வல் லரக்கி..., என்று சொல்லாமற் சொல் லியது.

சுற்றித் திருகிச் சுருண்டு கிடந்த கந்தைகளை வாரிப் போர்த்தி—தன்மகளை ஆசையோடு தூக்கி அரவணைத்து மடியில் வளர்த்தினுள். அவள் அன்புப் பிடி யிற் பிணைந்த அவன்—குத்தி நிமிர்ந் தெழுந்த தென்னங் குருத்தோலை முத்திப் பருத்தக்கால் முகைய விழ்ந்து அலர்வது போல்—முக மலர்ந்தான். வாடிய இளமுகத்தில் வருத்தத்தின் சாயல் மறையக் கண் மலர்ந்தான். நீர் நிறைந்து வழி ன்ற கண்ணிரண்டைத் தாய் முகத்தில் நேரிட்டன அவன் விழி கள்.

'இரக்கமுள்ளவர்களுக்கே விசா லமான உள்ளம் இருக்கும். அதிற் தான் மனிதப் பண்புகள் நிறைந் திருக்கும்' என்று அந்த விழிகள் சொல்லாமற் சொல்வது போன்றி ருந்தது அவளுக்கு. தெளிவுற்ற நோக்கோடு முகம் நிமிர்த்தி முறு வலித்தான் அவன்.

''ஏனம்மா...அழுகிருய்...''இழுத் திழுத்து அமைதியாக உச்சரித்தன அவன் இதழ்கள்.

''இல்லையடா ராசா'' அவள் உதடுகளும் அசைந்தன.

''அம்...மா...''

''என்னடா ராசா''

இருவர் நாவிலும் பேச்சடங்கி விட்டது, துடிப்பு அடங்கவில்லை. அவன் நாடி துடித்தது. அவள் இதயமும் துடித்தது. அவள் அவன் முகத்திற் கண்டது... 'இறுதி மலர்ச் சியோ'...?

அவனது செருகிய விழிகளும், வெளிறிய முகமும் அவளை விறைக்க வைத்து விட்டன. அவன் தலை துவண்டு சரிந்தது. அவன்... அவன்...?

காகம் கரையாத கருக்கிருட் டுக் கரைந்து விடக்காலைக் கதிரவன் கதிரொளி எழுவது கண்டு, காக்கை குருவி எல்லாமே இசைத்தன. அவளும் இசைத்தாள் ''ஐயோ...''. என்றெரு அவலப் பேரொலியை!

---

ஆடகத்திற் சிறந்த வணங் கனர்
காடெனத்தகு காருறு குந்தளம்
மூடிநின்ற முகமும் மதியமும்
மாட மீதுறை மஞ்சுமொன் ருயின.

—நகரப் படலம், சாகுந்தலம்.

# கலைகளின் உறைவிடங்கள்

கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் M. A. Ph.D

## 2 கிரியை என்னுந் தனிப்பெருங்கலை.

வாழ்க்கையில் பல அம்சங்கள் உண்டு. அவற்றுள் சமயம் ஒன்று. இதுவே அவ்வம்சங்கள் எல்லாவற்றுள்ளும் முக்கியமானது. தனக்குச் சமயம் இல்லை என்று சொல்லுபவன் ஒருவனையேனும் உலகில் காணுதல் அரிது. ஒவ்வொருவனும் ஏதாவது சமயத்தைத் தழுவியவனாகவே காணப்படுகின்றான். தெய்வ நம்பிக்கை அற்றவனும் தன்னைப் பொறுத்த அளவில் ஒரு சமயத்தை உருவாக்கிக் கொள்கிறான். இவ்வாறு தெய்வ நம்பிக்கை அற்றவன் தனக்கென உருவாக்கிக் கொள்ளுஞ் சமயம் பகுத்தறிவை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அமையும். பகுத்தறிவின் மூலமும் தானே நேரே கண்டுணரும் அனுபவ வாயிலாகவும் பிறக்கும் அறிவே அவனுக்கேற்புடைத்தானது. இப்பகுத்தறிவு இத்தகையது எனச் சுட்டியறிவது அவனுக்கும் எளிதன்று. அறிவு மக்களிடம் ஒரே நிலையிற் காணப்படுவதில்லை. பல்வேறு நிலையினதாய், ஒருவனிடம்குடி கொண்டிருப்பதைக் காட்டிலும் இன்னொருவனிடம் அதிகமாகவோ குறைவாகவோ காணப்படுவதனால் ஒன்றுக் கொன்று வேறுபட்டதாய் அமையும் நிலையில் அறிவு மக்களிடம் காணப்படுகின்றது. இவ்வறிவு சூழ்நிலைக்கேற்ப வளர்ந்தும் தேய்ந்தும் காணப்படும் இது ஒருவனிடத்திலாயினும் ஒரே நிலையில் எப்பொழுதும் விளங்குவதில்லை. அவன் அமைதியுறும் வேளை மிகுந்தும், கோபம், பயம், கவலை முதலிய உணர்ச்சிகள் வயப்படும் வேளை நலிந்தும் அறிவு காணப்படும். இவ்வாறு மனிதனுக்கு மனிதன் வேறுபட்ட அறிவுநிலை வாய்ந்தவனாகக் காணப்படுவதனாலும், இவ்வறிவும் மேற் கூறியவாறு அடிக்கடி வேறுபடும் காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப நிலைதிரிந்து ஒரேதன்மைத்தாய் விளங்காததாலும், எனவே நிலைபேறுள்ள பயன் தராததாலும் இவ்வறிவை அடிப்படையாகக் கொண்ட பகுத்தறிவையே துணைக்கொண்டு தம் சமயத்தை வகுக்கும் மக்களின் கொள்கைகள் சீரியதாக அமைய மாட்டா. தெய்வீக அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துள்ள மக்களோ நிலையற்ற தம் பகுத்தறிவைக் காட்டிலும் என்றும் நிலைபேறுள்ள தெய்வத் திருவருளால் உருவாக்கப்பட்டு மக்களிடை பரம்பரையாகப் பேணப்பட்டு வழங்கி வரும் கருத்துக்கள் விரவிய சமயத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்பவர்கள். தன்னிலையினின்றும் திரியாததாகி எக்காலத்துக்கும் உண்மைப் பொருளாய் விளங்கும் தெய்வீக அறிவை ஆதாரமாகக் கொண்ட சமயமே மக்களின் வாழ்க்கைக்கு நிலைபேறுள்ள அடிப்படையாக அமைய வல்லது. இதுவே வாழ்க்கையைச் செவ்விதாகத்திகழவைப்பது. இவ்வடிப்படையில் பாரத நாட்டில் தோன்றி வளர்ந்து வளங்கிவரும் சமயங்களின் சிறப்பு உணரற்பாலது. மக்கள் தாம் நினைப்பவற்றையெல்

லாம் நினைக்குமாறு செய்யும் ஆற்றல் அற்றவர்களாக இருக்கின்றனர். இவ்வாறு ஆற்றலற்ற நிலை மக்கள் ஆற்றலுக்கு அப்பாற்பட்டது. ஏதோ ஒன்று உளது என்ற உண்மையை உணர வைக்கின்றது. இவ்வேதோ ஒன்று யாது என்பதை விசாரித்து அறிய விழையும் மக்களுக்குச் சமய நூல்கள் அவ்வவர்களின் நிலைக்கேற்ப உண்மையை எடுத்துச் சுட்டி அறியத் தருகின்றன.

முன்னர்க்கூறிய வாறு மக்கள் அறிவு நிலை பலவகைப்பட்டதனாலும், பொருளைக் கிரகிக்கும் ஆற்றலும் அதற்கியைய வேறுபட்டுக் காணப் படுவதாலும் பாரத நாட்டில் உருவாகிய சமயங்கள், சிறப்பாகச் சைவம் அவரவர் அறிவு நிலைக்கேற்ப இப்பொருளை அறியவைக்கும் வழிகளை வகுத்தளித்தன. இவ்வாறு வகுத்தளிக்கும் நிலையே கலைகளின் முதன் முதற்றோற்றம் என்று கூறலாம். இவ்வாறு வகுக்கும் முறையே ஒப்பற்ற தனிப்பெருங் கலையாய்ப் போற்றற்குரியது. மக்கள் மனதைக் கவரும் வண்ணம் வாழ்க்கையிற் பெரும்பயன் தரக்கூடியவாறு மிக நுண்ணிய கலையுணர்வு கொண்டு அறிவுக்கு வழிகாட்டுவன சமய நூல்கள். மக்களனைவருக்கும் இவ்வாறு வழிகாட்டும் தனிநோக்குடைய இந் நூல்கள் அவர்களை நான்கு நிலைகளில் நிறுத்தி ஒவ்வொரு வகையினருக்கும் அவரவர் கிரகிக்கக்கூடிய வகையாகப் பேருண்மையினை உணர்த்துகின்றன. மக்களுள் ஒரு சிலர் அறிவு மேம்படாதவர். இவர்கள் நுண்ணறிவில்லாத வேலையாளர் (Un-skilled Labourers.) தமக்கிடப்பட்டவேலைகளைச் செய்வது போல் அறிவை அதிகம் பிரயோகிக்க வேண்டிய அவசியம் அற்றவர்களாதலின், தாம் ஏவப்படுவதை அனுசரித்துச் செய்யவேண்டிய கருமங்களைச் செய்பவர்கள். சமயவாழ்க்கையில்இந்நிலையில் நிற்பவர்களுக்குச் சமயநூல்கள் சரியை எனப்படும் சுலபமான வழியை வகுத்துள்ளன. சரியை நெறி நிற்றற்குரியவர்களைக் காட்டிலும் வேறானவர்களும், சிறிது அறிவு மிக்கவர்களாய் ஏவப்படும் வேலை தாம் செய்யவேண்டியதை செவ்விதாக உணர்ந்தும், செய்பவற்றின் இயல்புகளையும் அவற்றின் விளைவுகளையும் நன்கு விசாரித்து அறியும் ஆற்றல் மிக்க பெரும்பாலான மக்களுக்கு சமயநூல்கள் கிரியை எனப்படும் வழியை வகுத்திருக்கின்றன. மக்களுட் பெரும்பாலானோர் சரியையையோ அன்றிக்கிரியையையோ பற்றும் தகுதிவாய்ந்தவர்கள் எனவேஇவ்விரு வழிகளும் மக்கள் வாழ்க்கையில் பெரும் இடம் வகிக்கலாயின. இவ்விரண்டனுள்ளும் கிரியையே மிகவும் பெருமளவினரால் இன்று கடைப்பிடிக்கப்படுகின்றது. கிரியை இற்றைய உலகில் மக்கள் வாழ்க்கையில் மிகமுக்கியமாக விளங்குகின்றது. சமயத்தைப் பற்றிக் கூறுபவர்கள் கிரியை பற்றிப் பெருமளவில் விரித்துக்கூறுவது மிகவும் பொருத்தமே. இவ்வாறு கிரியைகள் வாழ்க்கையுடன் பெருந்தொடர்பு கொண்டுபெருமளவிலானமக்களால் கடைப்பிடிக்கப்படுவதனல் இவை கலைகளின் தோற்றுவாயாகவும் உறைவிடங்களாகவும் விளங்கலாயின. சரியை, கிரியை ஆகிய இரு நெறிகளிலும் வேறானதான யோகமும் ஞானமும் இரு பெருங்கலைகள். இக்கலைகள் மிக நுண்ணியயியல்பு வாய்ந்

தவையாதலின் இவற்றை நன்கு அறியவும் இவற்றின் வழி நிற்கவும் வேண்டிய ஆற்றலை ஒரு சிலரே பெறவல்லவர். கிரியை நெறி நின்று மிகவும் செம்மையுற்றவர்கள் கிரியைகளைச் சிறிது சிறிதாகத் தவிர்த்து, தம் உடலையும் உள்ளத்தையும் மட்டுமே கருவிகளாகக் கொண்டு பேருண்மையினை உணர முயல்வர். அவ்வாறு உயர் பரம்பொருளுடன் தொடர்புகொள்வாரும் உண்மையை உணரத் தரும் நெறி யோக நெறி எனப்படும். வானப் பிரஸ்தர்கள் இல்லறம் நீங்கித் துறவறங் கொள்ளு முன் காட்டுக்குப் புறப்பட்டுச் செல்வதான வானப் பிரஸ்தம் மேற்கொண்ட பின் கடைப்பிடித்தற் குரியது யோக நெறியே. யோக நெறி நின்று உடலையும் உள்ளத்தையும் பரிபக்குவமடையச் செய்தவர்க்கு ஞானநெறி எளிதில் கைகூடுவது. இவ்வழி செல்வதற்குரியவர்கள் ஞானிகள்; இவர்கள் முற்றுந்துறந்த சந்நியாசிகள்.

இவ் வழிகள் நான்கினுள்ளும் முதலிருவழிகளான சரியை கிரியை ஆகிய இரு நெறிகளைப் பின்பற்றுபவர்களே நம்மவருட் பெரும்பாலானவர்கள். ஏனைய யோகநெறியிலும் ஞானநெறியிலும் நிற்பவர்கள் குறைந்த அளவினரே. இவ்வாறு நான்குவகையாக நெறிகளைப் பிரித்து அவ்வவற்றிற் செல்லவேண்டியவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய வழிவகைகளைத் திறம்படக்கூறும் சமயநூல்களிலும் தத்துவநூல்களிலும் பொலிந்து விளங்குங் கலையுணர்வு ஒப்புயர்வற்றது. இவ்வாறு திறம்பட வகுத்துக் கூறியதனால், பாரதநாட்டில் தோன்றிய எவனும் எந்நிலையினனாயினும் தம் அனுபவத்திற்கும் ஆற்றலுக்கும் சூழ்நிலைக்கும், அறிவு முதிர்ச்சிக்கும் பரிபக்குவத்திற்கும் ஏற்ப இவ் வழிகளில் ஏதாவதொன்றைத் தனக்குரியதாக்கியேனும் தான் முன்னேறும் வாய்ப்பைப் பெறுகின்றான்.

அறிவுத்துறையில் சிறிதும் முன்னேற்றங் காணாதவன் குற்றேவல்களைச் செய்யும்தகுதிமட்டையும் பெற்றவனாகின்றான். இவன் இவ்வாறு செய்வது அடிமை, ஆண்டானைக் கருத்திற்கொண்டு பணிவிடை புரிவதை நிகர்க்கும். நுண்ணறிவினைப் பிரயோகிக்கும் ஆவசியகம் நேரிடாது குற்றேவல்செய்து இவன் பின்பற்றும் வழி தாசமார்க்கம் என்றும் நூல்களிற் கூறப்பட்டுள்ளது. திருக்கோவில்களில் அலகிடுதல், மெழுகிடுதல், பூமாலை புனைந்துதருதல், உழவாரத்திருப்பணி முதலியன சரியை நெறிநிற்போர் மேற்கொள்ளும் பணிகளாகும். இறைவன் திருவுருவத்தை நிறுவி அபிடேகித்தல், அருச்சித்தல், ஆராதித்தல், முதலிய வழிபடுமுறைகளில் ஈடுபடுபவர் கடைப்பிடிக்கும் கிரியைநெறி புத்திர மார்க்கம் எனக் கூறப்படுகின்றது. உடலையும் உள்ளத்தையும் இறைவனிடத்துப் பதிப்பதன்மூலம் முறையே ஹடயோகம், இராஜயோகம் என்னும் இருவகைப் புணர்ப்பினால் இறைவனுடன் ஒன்றவிழைவோர் செல்லும் யோகநெறி சகமார்க்கம் எனப்படும். அறிவுமுதிர்ச்சியடைந்த ஞானியர் பேரறிவு ஒன்றையே துணைக்கொண்டு திருவருள் முன்னிற்ப பரம்பொருளை உணர்வதற்கு மேற்கொள்ளும் ஞானநெறி சன்மார்க்கம் எனப்படும். இவ்வாறு பலதிறப்பட்டவர்களும் தத்தம் நிலைக்கேற்ப கடைப்பிடிக்கவல்ல வழிகளை

வெவ்வேருகத் திறம்பட வகுத்து மக்கள் ஒழுங்காகவும், சீரியதாகவும், நாகரிகமாகவும் வாழ்ந்து அவ் வாழ்வின் பயனுக உயர்நிலையடைய வழி வகுத்த சமய நூல்களிற் பொலிந்து விளங்கும் நுண்கலேச் சிறப்பினை நம்மவருட் பலர் உய்த்துணர்வதில்லை.

கலையழகு ததும்பும், சமய நூல்கள் மக்களின் வாழ்க்கையைச் சீரிதாக அமைக்கும் உயர்நோக்குடையவை. வாழ்க்கை சீரிதாக அமைவதற்குக் கட்டுப்பாடு இன்றியமையாது வேண்டப்படும். இதுபற்றிய நூல்கள் நால்வகை வழிகளை வகுத்துக் காட்டும்பொழுது மக்கள் மேற்கொள்ளவேண்டிய கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளன. கட்டுப்பாடு என்னும் வரையறையையும் ஒழுங்கு என்னும் சிறந்த பண்பினையும் தோற்றுவித்துக் கலையழகு பொலிய வகைசெய்கின்றன.

நால்வகை நெறிகளும் உயர் பரம்பொருளைப்பற்றிய அறிவை உணர்த்தி மக்களை அப் பொருளுடன் நெருங்கும் வாய்ப்பை அளிக்கின்றன. எம் ஆற்றலைமீறி விளங்கும் இறைவன் ஒப்புயர்வற்ற பெருந் தலைவனுக விளங்குகின்ருன் என்னும் பேருண்மையை நூல்கள் உணர்த்துகின்றன. தலைவன் உளன் என்ற கருத்துப் பிறந்ததும் அவனைப்பற்றி மேலே தொடர்ந்து விசாரித்தறியும் அறிவு வளர்ச்சியற்ற சரியைநெறி நிற்போர் தம் குற்றேவலால் அவனை மகிழ்விக்கும் செயலில்மட்டும் ஈடுபடுகின்றனர். கிரியைகளைக் கடைப்பிடிக்கும் மக்களின் நிலையோவெனின் இதினின்றும் சிறிது வேருயது. எல்லாம் வல்ல உயர் பெருந்தலைவன் உளன் என்பதையறிந்ததும் அறிவுவளர்ச்சி சிறிது வாய்க்கப்பெற்ற இவர், இத் தலைவன் யாவன்? இவன் எத்தோற்றத்தினன்? இவன் நிறம்யாது? இவனுக்குரிய பெயர்கள் எவை? இவன் எங்கே உறைகின்ருன்? இவன் பெருமை எத்தகையது? புகழ்பரப்பும் இவன் பெருஞ்செயல்கள் யாவை? இவனை எவ்வாறு அறியலாம்? இவனை எவ்வாறு நெருங்குவது? இவன் உள்ளத்தை மகிழ்வித்து இவனது அன்புக்கும் பேரருளுக்கும் பாத்திரமாவது எங்ஙனம்? என்றெல்லாம் விசாரிக்கும் நிலையைநோக்கி முன்னேறியவர்களே, தம் விசாரணைகளுக்கு சமயநூல்கள் தரும் விவரங்களையறிந்துணர்ந்ததனுல் கிரியை நெறிநிற்கும் தகுதிபெறுகின்றனர். இக் கிரியைநெறி இக் கேள்விகளுக்கெல்லாம் விடைகூறுவதாய், மக்களைத் தம்பால் பெருமளவிற்கு ஈர்ப்பதாய் இல்வாழ்வோர்க்கு எனச் சிறப்பாக உருவாயது. உலகில் பெரும்பாலானவர் இல்வாழ்வாராய் விளங்குதல்பற்றிக் கிரியை மிகவும் பிரசித்தி பெறலாயிற்று. உலகியல் நெறியில் ஈடுபடும் இல்வாழ்வோர் கடைப்பிடிக்கும் நெறியாதல் பற்றிக் கிரியை நெறி உலகியலுடன் தொடர்புபட்டுத் தெய்விக அடிப்படையில் பல கலைகளைத் தோற்றுவிக்கலாயிற்று

'மக்களால் கிரகிக்கமுடியாதவன்; அணுவிலும் நுண்ணியவன்; தோற்றம் அற்றவன், பெயரில்லாதவன்' என ஒருவாறு வரைவிலக்கணங்கள் கூறும் தொல்நூல்கள் இறைவனின் உன்னத நிலையினை உணர்த்துகின்றன. இத்தகைய பெருமை வாய்ந்த பரம்பொருளைப் பாமரமக்கள் உணரும்வண்ணம் மிகவும் அண்மையில் கொணர்ந்து புலன்களின்

துணைக்கொண்டு அறியத் தரும்படியாகச் சமயநூல்கள் காட்டிய வழியே கிரியைவழி. இவ்வழி நிற்போர்கள் உருவமற்ற இறைவனைப் பொன்னார் மேனியனாகக் காண்கின்றனர். அவன் தலையில் நீர்மலிவேணி விளங்குகின்றது; பாம்பும் பிறையும் அவனணிகலங்களிற்சில,முக்கண்கள் இவனுக்குரிமையாகி முக்கண்ணன் என்னும் பெயரையும் இவனுக்குடையதாகச் செய்கின்றன. கறை பொருந்தியது அவன் கழுத்து.இவன் பாம்புகளைப் பலவாறு அணிந்துள்ளான். புலித்தோல் அவனது ஆடை. சூலம் மழு மான் பிநாகம் ஆகிய படைக்கலங்களைத் தாம் புனையுங் கோலங்களுக்கு ஏற்றவாறு அவ்வப்போது கரங்களில் தாங்குவான். இடபம் இவனது ஊர்தி. கைலாசம் இவன்வாழும் பதி, ஊர், குணம், குறி பேர் இல்லாத இவ்விறைக்கு இவ்வாறு வகைவகையாக வடிவம் பெயர் முதலியவற்றைக் கற்பித்து உருவம் பெறச் செய்தலையே கலைகளின் முதல் தோற்றம் எனலாம். இவ்வாறு உருவாக்கப்பட்ட இறைவன் திருவுருவம் எவ்வாறு கலைகளை ஒன்றன்பின் ஒன்றாகத் தோற்றுவித்தது என்பதை அடுத்துவருங் கட்டுரைகளில் கவனிப்போம்.

இறைவன் திருவுருவத்தின மக்கள் கிரகிப்பதற்கு எளிதாக அமையும் முறையில் எடுத்துக் கூறும்பொழுது இலக்கியக்கலை பிறக்கிறது. தொல் நூல்கள் வருணிக்கும் இத் திருவுருவத்தைக் கற்பனைசெய்வதன்மூலம் நெடுநேரம் அகக்கண்முன் நிறுத்திக் கண்குளிரக் காணமுடியாதவர்க்குப் புறக்கண்களால் நேரேகண்டு எளிதிற் கிரகிக்க வாய்ப்பு ஏற்படுத்தும் நோக்கம் சிற்பக்கலையைத் தோற்றுவித்தது, நூல்கள் கூறும் இலக்கணங்களுக்கமையச் சிற்பி திருவுருவங்களைச் சமைக்கின்றான். சிற்பக்கலை தலைசிறந்த கலையாக உருவாகி வளரத் தொடங்கிற்று. இத் திருவுருவங்கள் கிரியைகளில் முக்கிய இடம் வகிக்கலாயின, வகிக்கவே இத் திருவுருவங்களை நிரந்தரமாக நிறுவுவதற்கு இடங்கள் வகுக்கப்பட்டன. இச் சந்தர்ப்பத்தில் விளைந்த பெறுபேறு கட்டிடக் கலையின் தோற்றம். திருவுருவங்களை நிறுவி வழிபடுவதற்குகந்தான திருக்கோவில்களை அழகுறக் கட்டி எழுப்பும் நுண்கலை கட்டிடக் கலை. உருவாகிய திருவுருவங்களை அழகுறுத்துவதற்குச் சிற்பக்கலையினின்றும் கிளைத்தெழுந்தகலை ஓவியக் கலை. விக்கிரகங்களை அமைக்கமுடியாதவிடத்து திருவுருவங்களைச் சித்திரங்களாகத் தீட்டிப் பயன்படுத்தவும் கட்டிடங்களையும் திருவுருவங்களையும் அழகுறுத்தவும் ஓவியக்கலை உருவாயிற்று.

கிரியைகளில் இசைபாடுதல் இன்றியமையா அம்சமாதல் பற்றி இவ்வடிப்படையிலேயே இசைக் கலை தோன்றி வளரலாயிற்று. வழிபடும் நேரத்தில் பரவசமுற்று ஆடுதல் உணர்ச்சியுடன் வழிபடுபவர்களுக்கு இயற்கையாக அமையும். இது தவிர்க்கமுடியாத நிகழ்ச்சி. ஆடுந் தெய்வத்திற்கு ஆடுதலைக்காண்பதில் பெரும் உவகை உண்டு. இதனால் நடனமும் வழிபாட்டில் தனி இடம் பெறுகின்றது.

இவ்வாறு நுண்கலைகள் இறைவனைப் பற்றியவையாய்,வழிபாட்டில் முக்கிய பங்குவகிப்பனவாய் விளங்கிச் சமய நூல்களில் பெரிதும் விரித்துக் கூறப்படும் நிலையை எய்தின. சிற்பக்கலை, கட்டிடக்கலை, ஓவியக்

கலை, இசைக் கலை நாட்டியக் கலை, ஆகிய ஐம்பெருங் கலைகள் பற்றிய விளக்கங்களும் விரிவுரைகளும் சமய நூல்களில் விரிவாக இடம்பெறலாயின. கலையறிவு புகட்டும் நூல்களுள் தலையாய இடம் வகிப்பவை கிரியை கூறும் சமயநூல்கள். இக் கலைகளை இக்கட்டுரைத் தொடர் இடந்தரு மளவிற்கு ஒவ்வொன்ருகக் கவனிப்போம்.

ஐம் பெருங்கலைகளைப் பற்றிக் கூறுமுன் இவற்றிற்கு நிலைக்களனுக விளங்கும் கிரியை எவ்வாறு தனிப் பெருங் கலையாக விளங்குகின்றது என்பதைச் சுருக்கமாக நோக்குவாம். கலையின் சிறப்பு அது மக்களைக் கவரும் வனப்பில் தங்கியுள்ளது. கிரியை நெறி மக்களைக் கவருமளவிற்கு வேறு ஒன்றும் கவருவதில்லை. மேலும், கலையின் உயர்ச்சி அதன் தொன்மையைக் கொண்டு மட்டிடப்படுவது. கிரியை நெறி பாரதநாட்டில் வேதகாலம் முதல் கடைப்பிடிக்கப்பட்டுவருவது. இதனுலும் இக்கலை உயர்ந்த கலை என்பது பெறப்படுகின்றது. அத்துடன் அமையாது இக்கலை மக்கள் மனதை நன்கு கவர்ந்து அவர்களுக்கு ஆறுதல் அளித்து இன்பத்திலாழ்த்துவது; மக்களை உயர்கதிக்கு இட்டுச்செல்ல வல்ல உயர் குறிக்கோளையுடையது; வாழ்க்கையுடன் மிக நெருங்கிய தொடர்புடையது.

"மனிதன் செயலில் ஈடுபடாது ஒரு கணப் பொழுதேனும் நிற்றற்கு ஆற்றலற்றவனுகின்ருன்" என்று பகவத்கீதை கூறுகின்றது. நாம் வாழுங் காலம் முழுவதும் எதையாவது செய்து கொண்டே இருக்கிறேம். என நம்மவருட் பலர் உணராத அரிய உண்மையை இவ் வாக்கியம் உணர்த்தி நிற்கின்றது. ஆயினும், நாம் வாழ்க்கையில் செய்யுஞ் செயல்களில் பெரும்பாலானவை நிரந்தரமான பெறுபேற்றைத் தருவனவல்ல. எனினும் இறைவன் வழிபாட்டில் ஈடுபட்டுச் செயல்களை நிகழ்த்தும் பொழுது அவை பயன் பயப்பனவாகின்றன.

நம் வாழ்க்கையில்நிகழுஞ் சம்பவங்கள் சந்தோஷத்தையுந் துக்கத்தையும் தருவனவாக மாறி மாறி நிகழ்கின்றன. இவ்விருவகை நிழ்ச்சிகளிலும் அவற்றின் நிலைக்கேற்ப நம் மனம் அல்லலுறுகின்றது. அங்குமிங்கும் அலைந்து தழும்பி நிற்கும் மனத்திற்கு கிரியைகள் ஆறுதலளிக்கும் பற்றுக்கோடுகளாகவிளங்குவன. மனத்திற்கு மிகவும் இன்பந்தரும் விவாகம் நிகழும் வேளையும், மிகவுந் துன்பம் பெருகும் மரணம் நிகழும் வேளையும் மக்கள் வாழ்க்கையின் இரு முக்கிய நிலைகளைக் காட்டுகின்றன. கிரியைகளில் சிறிதளவேனும் நம்பிக்கை இல்லை என்று சொல்லிக் கொள்பவர்களும் இவ் வேளைகளில் யாது செய்கின்றனர்? இறந்தவரின் சடலத்தை அப்படியே தீயினுள் தள்ளிவிடுகின்றனரா? ஒருபொழுதுமில்லை. மக்கள் பாரம்பரியமாகக் கடைப்பிடித்துவரும் கிரியைகள் வேண்டாம் என ஒதுக்குமளவில்மட்டும் தங் கொள்கையை வரையறுத்துக்கொண்டு அச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றதாக ஒரு கிரியையைத் தாமே வகுத்துக்கொள்கின்றனர். இவ்வாறு இவர் இறந்தவரைக் குறித்து நிகழ்த்தும் செயல்களும் சடங்குகளாகி விடுகின்றன. விவாககாலத்திலும் இதேபோன்ற புது சடங்குகளை

இவர் தோற்றுவிப்பர். கிரியைகளை வெறுத்தொதுக்குபவர், இவ்வாறு தாமே புதிதான கிரியைநெறியை வகுக்கத் தூண்டப்படுவதைக் கவனிக்கும்பொழுது கிரியைகள் இல்லாது வாழ்வதற்கு மனிதன் வழியற்றவன் என்னும் பேருண்மை அறைந்து கூறப்படுவதை உணருகின்றோம்.

கிரியை நெறியிலும் மக்களின் வாழ்க்கையுடன் தொடர்பு பெற்ற பல அம்சங்களைக் காண்கின்றோம். கிரியைகளில் இடம்பெறும் இறைவன் திருவுருவம் மக்கள் கிரகிக்கக்கூடிய மக்களின் அம்சங்களைப் பெருமளவிற் பெறுகின்றது. இவ்வுருவவழிபாட்டில் மக்களுடன் தொடர்புள்ள வாழ்க்கையின் அன்றன்றாட நிகழ்ச்சிகளாகிய நீராடல், உடுத்தல், அழகு செய்தல், உண்ணுதல், பவனிவருதல், உறங்குதல் முதலியன இடம்பெறுகின்றன. இந் நிகழ்ச்சிகள் நிகழும் வேளை மன்னனுக்கு மரியாதைகாட்டிச் செய்யும் உபசாரங்களும் நிகழ்த்தப் பெறுகின்றன. இவ்வம்சங்கள் கிரியைகளில் இடம்பெறுவதனால் மக்களுக்கும் இறைவனுக்கும் இடையே தொடர்பு பக்தியடிப்படையில் வளருகின்றது. தன்னைப் பேணிக் கொள்வது போல் இறைவனையும் நீராட்டி அலங்கரித்து, உணவை நிவேதித்து உபசாரங்கள் செய்து, உலவிவரச் செய்து வருதல் இறைவனைத் தன்னைப்போல் கருதும்படி தூண்டியும், தன்னைப் பற்றித் தான் கொள்ளும் அதே சிரத்தையை இறைவனிடம் காட்டச் செய்தும் அவனிடம் செலுத்தும் அன்பை வளர்க்கின்றது. இவ்வன்பு தெய்வத்திடம் பதியும் அன்பாதலால் பக்தியெனப் பெயர் பெறுகின்றது. வழிபடுவோனைப் பற்றிய அளவில் அவன் தொடர்பு கொள்வது திருவுருவத்துடனன்று. தெய்வத்துடனேயே அவன் தொடர்பு கொள்ளுகின்றான். இக்கிரியைகள் இறைவனை மகிழ்வித்தற்குக் கையாளப்படும் வெறும் சாதனங்களாகத் தொடக்கத்தில் வழிபடுபவன் காணினும், இவையொவ்வொன்றும் ஒவ்வொரு தத்துவத்தை உணர்த்துவதனால் அவன் நாளடைவில் அறிவும் அனுபவமும் முதிரப் பெறுகின்றான். இவ்விரண்டும் இவனுக்கு ஈற்றில் உயர்கதியை அளிக்கின்றன.

—தொடரும்



சென்னைமா நகரில்:

# எழுத்தும் இசையும்

## ஷண்முக. குமரேசன்

சில நாட்களுக்கு முன் சென்னையில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் சங்க மாநாட்டின் ஒரு பகுதிக்கும் சங்கீத வித்வத்சபை விழாவின் பெரும் பகுதிக்கும் தமிழ் இசைச் சங்க விழாவின் இரண்டொரு நிகழ்ச்சிகளுக்கும் சமுகமளித்தேன்.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் மாநாடு மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்றது. விழா அழைப்பிதழொன்று திரு. பழநியாண்டி (அன்புப்பழம் நீ) தந்தார். நிகழ்ச்சி நிரலில் திருவாளர்கள் பாபநாசம் சிவன், பா. தாவூத்ஷா, பு. தி. நரசிம்மாச்சார் ஆகியோருக்குக் கேடயங்கள், பதக்கங்கள் ஆகியன வழங்கப்படுவதாக இருந்தது, திரு. பாபநாசம் சிவன் இயற்றிய 'மாரமணன்' (ஹிந்தோளம்) 'சிவகாம சுந்தரி' (முகாரி) முதலிய கீர்த்தனங்கள் பலரின் செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்குமென நம்புகிறேன்.

இரண்டாம்நாளே இம் மாநாட்டிற்குப் போக முடிந்தது. மண்டபத்துக்குச் சென்றதும் ரோசாமலர் தந்து வரவேற்றனர். மலர்ந்த முகத்தோடு வரவேற்ற தன்றி மலரும் தந்தது மனத்தைப் பெரிதும் கவர்ந்தது. அன்று காலை 10 மணியளவில் 'தமிழில் பிறமொழி இலக்கியங்கள்' என்னும் பொருள் பற்றி ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது. அதற்குப் 'பன்மொழிப்புலவர் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமை தாங்கினார். 'கன்னடம் நாடகங்களில் முன்னேறியுள்ளது; நம்முடைய மக்கள் பலமொழிகள் கற்கவேண்டும்; அரசியலைப் பற்றி நமக்குக்கவலையில்லை. தமிழிலுள்ள அரியவற்றைப் பிற மொழிகளில் வழங்கவேண்டும்' என்று கூறிய அன்னார், பிரெஞ்சுமொழியைப் பற்றிக் கூறுமிடத்து ஆங்கிலக் 'குழந்தைகள் நன்றாகப் படிக்கவில்லையே' என்று அறிஞர் பலாட் சொல்லியதை எடுத்துக் காட்டினார். இத்தகைய கருத்துக்கள் பேராசிரியர் மீனாட்சி சுந்தரனாரின் பன்மொழிப் புலமையையும் பரந்த நோக்கையும் புலப்படுத்தின.

இம்மாநாட்டில் நிகழ்ந்த பேச்சுக்கள் போதிய அளவு கேட்கவில்லை. ஒலிபெருக்கி இருந்ததாகத் தெரிந்தது. ஆனாலும் அது பயன்படுத்தப்பெறவில்லை. 'காரணம் என்ன?' என்று அன்பர் பழநியாண்டியைக் கேட்டேன். அம் மண்டபத்தில் எதிரொலி (echo) இருப்பதாக அவர் பதிலளித்தார்' மாநாட்டில் ஆங்கிலத்தைப் பற்றிப் பேசிய அன்பர், நகைச்சுவையான தொன்றை ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கும் பொழுது அந்

நகைச்சுவையின் தத்துவம் மொழி பெயர்ப்பில் நன்ருக அமைவதில்லை என்பதை விளக்கினர். சமஸ்கிருதத்தைப்பற்றித் திரு. பெ. திருஞானசம்பந்தம் பேசினர். அந்நேரத்தில், முன்னர் இலங்கை வானெலியில் அமைப்பாளராகப் பணியாற்றிய திரு சிவபாதசுந்தரமும் மேடையில் வீற்றிருந்தார்.

மாலை நிகழ்ச்சிகளுக்குச் சமுகமளிக்க முடியவில்லை. மண்டபத்தின் வெளியே பல புத்தகங்களைப் பார்க்க முடிந்தது. அங்கு குழுமிய சிலருக்கு, 'இவர் யாழ்ப்பாணத்திலிருந்து வருகிருர்' என்று திரு. பழநியாண்டி அறிமுகப்படுத்தினர். அப்பொழுது அவர்கள் தகுந்த மரியாதை காட்டினர்கள். 'பாரதி' என்னும் அம் மாநாட்டு மலரையும் இலவசமாகத் தந்தார்கள். அதிற் பலருடைய கட்டுரைகள்; கவிதைகள் ஆகியன மிளிர்கின்றன. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' முதலிய நூல்களை இயற்றிய திரு. மயிலை. சீனி. வேங்கடசாமியே சங்கத்தின் தலைவர் என்பதையும் அறிந்தேன்.

வெள்ளிக்கிழமை, 20-12-63 சங்கீத வித்வத் சபையின் ஆண்டு விழா தொடங்கியது. சபையின் மாடியில் ஆசனங்கள் இருக்கும் நிலையே ஒருவரை ஆச்சரியப்படுத்தும். 'வளர்ந்த" நிலையில் அங்கு ஆசனங்கள் இருக்கின்றன. ஆண்களும் பெண்களும் அங்கிருப்பதைப் பார்த்து ஓர் அன்பர் 'கொலுமாதிரி இருக்கிறது' என்ருர். தொடக்க விழாவில் தமிழ்நாட்டு இசைக் கருவியாம் நாதசுரத்தின் ஒலி கேட்டது. திரு. கே. காமராஜ் விழாவைத் தொடக்கி வைத்து, இசை இன வேறுபாட்டையெல்லாம் கடந்ததுஎன்று பேசினர். விழாவின் தலைவராம்வித்துவான்பூதலூர்-கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளைப்பற்றி வித்துவான் ஜி. என். பாலசுப்பிரமணியம் முதலியோர் புகழ்ந்து பேசினர்கள். ஆனல் பேசியவர்களுட் பெரும் பகுதியினர் கொச்சைத் தமிழைக் கையாண்டார்கள். 'அவர்' என்று சொல்வதற்குப் பதிலாக 'அவாள்'' ''அவா' என்று சொன்னர்கள். இசைக்கு மொழியைப் பற்றியகவலை வேண்டியதில்லை, என்று சிலர் சொல்லக்கூடும். ஆனல் பாட்டில் வரும் சொற்களை இசைக்காக ஒருவர் சிதைக்கலாமா? ஓர் இனத்தவர் ஒருவிதமான பேச்சு மொழியைக் கையாளக்கூடும். ஆனற் பல்வேறு மக்கள் கூடியிருக்கும் அவையிலே தமிழிற்பேசும் பொழுது ஒரு குறிக்கப்பட்ட இனத்தவர் வழங்கும் கொச்சைத் தமிழைக் கையாளாது நல்ல தமிழையே வழங்குவது பொருத்தமாகும். ஆங்கிலத்தில் ஒருவர் பிழைவிட்டால் அல்லது ஒன்றைச் சிதைத்துப் பேசினல் எத்தனையோபேர் கண்டனங் கூறுவர். ஆனல் தமிழை மட்டும் விரும்பிய படி கையாளலாமென்று சிலர் எண்ணுகின்றனர் போலும். விழாத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் 'இந்தியாவில் எந்தக் கலையாயினும் இறைவனை அடைவதற்கு ஒரு கருவியாகவே கருதப்பட்டு வருகின்றது' என்று தலைமையுரையிற் கூறினர்.

பத்துநாட்களுக்குமேல் நடைபெற்ற இவ்விழாவின் பெரும் பகுதிக்குச் சமுகமளித்தேன்

இந்திய மக்களுடன் சில மேனாட்டு ஆண்களும் பெண்களும் அங்கிருந்தனர். சில மேனாட்டினர் இந்திய உடையணிந்திருந்தனர். ஓர் அமெரிக்கப் பெண் தாம் வீணை பயில்வதாகச் சொன்னார். இவற்றின்மூலம் வெளிநாட்டினர் தென்னிந்திய இசையையெப்படிப்போற்றுகின்றனர் என்பதை உணர்ந்தேன்.

இவ்விழாவில் வித்துவான் ஜி. என். பாலசுப்பிரமணியம், வித்துவான் செம்மங்குடி சீனிவாசய்யர், ஸ்ரீமதி எம். எஸ் சுப்புலக்ஷ்மி, திரு மதுரை-சோமசுந்தரம், திரு. பாலமுரளிகிருஷ்ண, ஆகியோரின் வாய்ப்பாட்டும் திரு. காருகுரிச்சி அருணசலத்தின் நாதசுரமும் திரு. சு. பாலசந்தரின் வீணையும் வித்துவான் த்வாரம் வெங்கடசாமி நாயுடுவின் வயலினும் உள்ளத்தை மிகவும் கவர்ந்தன. வட இந்தியக் கலைஞர் ரவி சங்கரின் சிதாரும் அலி அக்பரின் சரோட்டும் குறிப்பிட வேண்டியவையே. மூன்று நல்ல நாட்டிய விருந்துகளும் நடைபெற்றன. முன்னர் இருமுறைக்குமேலாக இசைவிழாவுக்குப் போயிருக்கிறேன். ஆனல் ஒவ்வொருமுறையும் நான் அவதானித்த ஒரு குறையுண்டு. அஃதாவது மிருதங்கத்தின் தனி ஆவர்த்தனம் தொடங்கியதும் பலர் இடைவேளையாகக் கருதி வெளியே செல்கின்றனர். இச்சிறு நிகழ்ச்சிக்குக் குறுகிய நேரமேவிடப்படுகிறது. இந்நேரத்தில் மக்கள் வெளியே போவது மிருதங்கம் வாசிப்பதை அவமதிப்பதாகும்.

பகல் வேளையில் மாநாட்டில் நடைபெற்ற ஆராய்ச்சியுரைகள், விளக்கங்கள் ஆகியன இசையின்பம் துய்ப்போருக்கு மிகவும் பயன்பட்டன. வட இந்திய இசையிலும் தென்னிந்திய இசையிலும் தேர்ச்சி பெற்ற திரு. நாக்பூர்-சுப்பராவ் வட இந்திய இராகங்கள் சிலவற்றையும் அவற்றிற்கு ஒத்த தென்னிந்திய இராகங்களையும் வீணையில் வாசித்துக்காட்டி விளக்கங்கூறினர். மேனாட்டிசை வல்லார் மேனாட்டிசையையும் உதாரணங்களுடன் விளக்கினர். சிதம்பரம் பாரதி இயற்றிய சிறந்த கீர்த்தனைகள் சிலவற்றைக் கேட்கும் வாய்ப்பும் ஒரு நாள் கிடைத்தது. பல வாத்தியங்களில் நிபுணரான திரு. சு. பாலசந்தர், தென்னிந்தியர் வட இந்திய இசையையும் கேட்கிறர்கள்; இது நம் பரந்த உள்ளத்தைக் காட்டுகிறது; ஆனல் வட இந்தியர் தென்னிந்திய இசையைக் கேட்கவிரும்புவதில்லை என்றும் வடக்கே தென்னிந்தியக் கலைஞர்களை அழைப்பதானல் அங்குள்ள தென்னிந்தியர்களின் சங்கங்களே சிரத்தையெடுக்கின்றன என்றும் மேனாட்டினர் போற்றினலும் வடஇந்தியர் தென்னிந்திய இசையைப் போற்றுதது குறையே என்றும் எடுத்துக்காட்டி சங்கீதவித்வத்சபை முதலிய சபைகள் இக்குறையை நீக்குவதற்கு ஆவன செய்யவேண்டும் என்றுங் கேட்டுச் 'சென்னை'த் தமிழிற் பேசினர்.

ஒரு கச்சேரி மாலை 5. 30க்குத் தொடங்கி 8.30 அளவில் முடியும். இரவு 9 மணியளவில் இரண்டாவது கச்சேரி தொடங்கும். இடைவேளையில் உணவருந்துவதற்கு அங்கே வசதியுண்டு. கச்சேரி முடிந்ததும் 'பஸ்' வசதியும் உண்டு.

கடைசி நாளன்று 'சதஸ்'

நடைபெற்றது. அதற்குவித்துவான் செம்மங்குடி சீனிவாசய்யர் தலைமை தாங்கினர். போட்டிகளின் முடிவின் படி பரிசுகள் வழங்கப்பெற்றன. வளர்ந்த–இளம்–ஆண்களும் பெண்களும் பரிசுபெற்றனர். அவர்களைச் 'சிறுவர்கள்' 'குழந்தைகள்' என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். ஓர் இளைஞனையும் 'குழந்தை' என்று சென்னையிற் குறிப்பிடுவதை முன்னரும் கேட்டிருக்கிறேன். பரிசு பெற்ற இக் 'குழந்தை'களுக்கே குழந்தைகள் இருக்கக்கூடும். வித்துவான் செம்மங்குடி, பல ஆண்கள் சங்கீதம் பயில முன்வருவதில்லையே என்று வருந்தினர். மேலும், சங்கீதம் பயின்றவர்கள் வேலையில்லாமல் திண்டாடக்கூடாது என்றும் அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்றும் திருவனந்தபுரத்திற் பெற்ற அனுபவத்தைக் கொண்டு கூறினர். அத்தருணம் வித்துவான் பூதலூர் – கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளுக்குச் 'சங்கீத கலாநிதி' என்ற பட்டம் வழங்கப் பெற்றது. சாஸ்திரிகள் எவரையும் மதிப்பவர் என்பதைக் காட்டி அவரின் வேறு நல்ல குணங்களையும் புகழ்ந்து சிலர் பேசினர்கள். இப்பேச்சுக்களிலும் 'அன்னிக்கு' ('அன்றைக்கு' என்பதற்குப் பதிலாக) முதலிய கொச்சைச் சொற்களைப் பிரயோகித்தார்கள். பேசியவர்களுள் ஒருவரோ இருவரோ தமிழ் எழுத்தாளர்கள் என்றும் அறிந்தேன், முன்னர் நடைபெற்ற விழாக்களிலும் இத்தகைய சொற்பிரயோகத்தை அவதானித்தேன்.

தமிழ் இசைச் சங்கத்தின் இசைவிழா தொடங்கிய அன்று (21-12-63) ராஜா அண்ணாமலை மன்றத்துக்குச் சென்றேன். அவ்விழாவைத் தொடக்கிவைத்த அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம், கலைஞர்களை மக்கள் உற்சாகப்படுத்தவேண்டும் என்றும் மேனாடுகளில் போரினால் நாசமாக்கப்பட்ட மண்டபங்களுள் முதலிற்கலைக்கூடங்களையே திருத்தி அமைக்கிருர்கள் என்றும் கூறினர். வரவேற்புரை நிகழ்த்திய திரு. நாராயணசாமிப்பிள்ளை, விழாத் தலைவராம் வித்துவான் முசிரி சுப்பிரமணிய ஐயர் 'திருவடிசரணம்' என்ற பாடலுக்குப் பெயர் போனவர் என்பதையும் 'தேயிலைத் தோட்டத்திலே' என்று அவர் பாடிய பாட்டு எத்தனையோபேரை உருக்கியது என்றும் சொன்னர். ஆனல் அவர் 'பில்டிங்' (Building) முதலிய ஆங்கிலச் சொற்களைப் பேச்சில் தவிர்த்திருக்கலாம். 'கட்டடம்' என்று சொல்லியிருக்கலாம். வித்துவான் முசிரி சுப்பிமணிய ஐயர் தம் குருவாகிய சபேசய்யரின் பெருமையைக் குறிப்பிட்டார். பத்து வயதும் அடையாதசிறுவனாக நான் இருந்த பொழுது வித்துவான் முசிரி சுப்பிரமணிய ஐயர் இலங்கைக்கு வந்து யாழ்ப்பாண நகரசபை மண்டபத்திலும் கோப்பாய் அரசினர்ஆசிரியர் கலாசாலையிலும் இசைவிருந்தளித்தது இங்கு நினைவுக்கு வருகின்றது. ஓரிடத்தில் 'தேயிலைத் தோட்டத்திலே' என்ற பாடலும் மற்றைய இடத்தில் 'மாருபல்க' (ஸ்ரீரஞ்ஜனி) 'நடமாடித்திரிந்த' (காம்போதி) ஆகிய கீர்த்தனைகளும் பாடியது ஓரளவு நினைவாக இருக்கிறது. தமிழ் இசைச் சங்க விழா இம்முறை திரு சீர்காழி கோவிந்தராஜனின் தோத்திரப் பாடலுடன் தொடங்கியது. 'குனித்த புருவமும்,

என்ற தேவாரத்தையே அவர் பாடினார். வித்துவான் முசிரி சுப்பிரமணிய ஐயருக்கு 'இசைப் பேரறிஞர்' என்ற பட்டம் வழங்கப் பெற்றது அன்றிரவு இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகரின் இசை விருந்து நடைபெற்றது.

தமிழிசைச் சங்க விழாவின் இரண்டொரு நிகழ்ச்சிகளுக்கே சமுகமளித்தேன் அவற்றுள் ஒன்று ஸ்ரீமதி சிவானந்த விஜயலட்சுமியின் கதாகாலட்சேபமாகும். 'நந்தனார்' என்னும் பொருள் பற்றி அன்னார் நிகழ்த்திய இக்காலட்சேபத்தின் மூலம் அவரின் இனியகுரலையும் இசைத்திறனையும் மேற்கோளுடன் பேசும் ஆற்றலையும் உணர்ந்தேன். சென்னையில் இவ்வளவு தெளிவான தமிழைக் கேட்கின்றோமே என்ற எண்ணம் தோன்றியது. பின்னர்தான் அவர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர் என்பது' தெரிய வந்தது. திரு. நாமகிரிப்பேட்டை கிருஷ்ணனுடைய நாதசுரக் கச்சேரியைக் கேட்கும் வாய்ப்பும் ஒரு நாள் கிடைத்தது. சிறந்த இக் கச்சேரி இரவு 9.30 அளவில் தொடங்கி நள்ளிரவு 1 மணிக்குப் பின்னர் முடிந்தது.

பகலில் நடைபெற்ற பண்ணாராய்ச்சிக்கு ஒரு நாள் போயிருந்தேன். பல ஓதுவார்கள் மேடையில் இருந்தனர். அப்பொழுது தக்கராகப் பண்ணைப் பற்றி ஆராய்ச்சி நடந்தது. இப் பண்ணினுள்ள பாடல்களை அநேகமாக ஆரபியிற் பாடுகிறார்கள் என்றும் சிலர் சுத்த சாவேரியிற் பாடுகிறார்கள் என்றும் ஓர் ஓதுவார் கூறினார். திருமுறைப் பாடல்கள் சிலவற்றை இசைத் தட்டிற் பாடிய சுந்தர ஓதுவாமூர்த்தியைப் பற்றியும் அவர் குறிப்பிட்டார். திருவாசகம் பாடும் முறையைப் பற்றிப் பேராசிரியர் மு. வரதராசன் கேட்டார். பொதுவாக அது மோகனத்துக்கு உரியதென்றும் திருப்பள்ளியெழுச்சி பூபாளத்திற் பாடலாமென்றும் ஓதுவார்கள் சொன்னார்கள், பண்களைப் புரிந்து கொள்வதற்கு இத்தகைய ஆராய்ச்சிகள் பெருந்துணையாகின்றன.

இத்தகைய விழாக்கள் செவி வழியும் கண்வழியும் புகுந்து கருத்தைக் கவர்கின்றன. யாழ்ப்பாணத்தில் இத்தகைய விழாக்களை எடுப்போரும் இவற்றினாற் பெரிதும் பயனடையலாம்.

---


## எமது பிரதம விற்பனையாளர்

ஒரு பத்திரிகையின் வளர்ச்சி, அதன் விற்பனையாளர்களின் விடாமுயற்சியில் பெரிதும் தங்கியுள்ளது. 'கலைச்செல்வி' யின் பிரதம விற்பனையாளராகக் கொழும்பில் கடமையாற்றும் திரு. எஸ். என் முத்தையா ஊக்கமும் உற்சாகமும் மிக்கவர். இவருடைய பெருமுயற்சியால், கொழும்பிலுள்ள பல அன்பர்களின் கையில் 'கலைச்செல்வி தவழ்கின்றாள். அவருடைய முகவரி இது:-

**எஸ். என். முத்தையா**

**13/104 நில் வீதி**

**கொழும்பு.**



நான் மருதானைச் சந்திவழியாக வந்து ‘பஞ்சிகாவத்தைரோட்’டில் திரும்பிக் கொண்டிருந்தேன். பகல் முழுவதும் ஓயாது ஓடும் ‘ட்ராலி’ பஸ்கள் இப்போது ஓய்ந்துவிட்டன. தெருவில் கார்களோ, பஸ்களோ ஒன்றையும் காணோம். ‘லபாய்,லபாய்’ என்று கத்திக் கொண்டிருக்கும் வியாபாரத்தந்திரிகள் தங்கள் கடைகளை மூடிவிட்டார்கள். இரவு பகல் இருபத்துநான்கு மணிநேரமும் சேவை செய்யும் ஒரு தேநீர்க்கடை மட்டும் திறந்திருந்தது. முன்பகுதியிலுள்ள மேசையருகே முதலாளி தூங்கி வழிந்து கொண்டு இருந்தார். அவரைத்

எனது நடையில் வேகம் கூடியதை உணர்த்தேன். சட்டைப் ‘பாக்கெட்டி’ல் இருந்த ரூபாய் நோட்டுக்கள் பெருஞ் சுமையாய்க் கனத்துக் கொண்டிருந்தன.

ஒன்றரை மாதகாலமாகத் தியேட்டர் ஒன்றில் கடமையாற்றியதில் இன்றுதான் சம்பளம் கிடைத்தது. தினமும் இரவு இரண்டாம் காட்சி முடிந்து வீடுதிரும்புவதற்கு எப்படியும் நேரமாகிவிடும். முன்பெல்லாம் நான் இவ்வழியாகவரும் பொழுது அதிகம் பயப்படுவதில்லை. இன்று எனது மனத்தைப் பயம் கவ்விக் கொண்டுவிட்டது.

மருதானை வீதிகளில் இரவில்

# பிழைப்பு

## அண்ணவி

தவிர வேறு ஒருவரையுமே கடையில் காணவில்லை. அருகிலுள்ள புகையிரத நிலையத்தின் ‘குட்செட்’டில் இயந்திரங்களின் ஒலிகள் இடையிடையே கேட்டுக் கொண்டிருந்தன. வெகுதூரத்தில் மங்கலாக இரு உருவங்கள்...மனிதர்களாகத்தான் இருக்க வேண்டும். அவர்களைத் தவிர அத்தெருவில் மனித சஞ்சாரமே அற்றுப் போயிருந்தது.

புகையிரத நிலையத்தின் மணிக்கூண்டுக் கோபுரத்தை நிமிர்ந்து பார்த்தேன். இரவு ஒன்று ஐம்பத்தைந்தாகிவிட்டது. மனதை இலேசாகப் பயங் கவ்விக்கொண்டது.

நடமாடுவது கவனமாக இருக்க வேண்டும். இங்கு வழிப்பறிகள் நடப்பதுண்டு. அத்தோடு வேறு விதமான கொள்ளைகளும் நடக்கும். மருதானை நகருக்கு இரவெல்லாம் பகல்தான். வெறியர்களின் கூத்துகளும் கும்மாளங்களும் வேறும் பல கேளிக்கைகளும் இங்குநடைபெறும், வாழ்நாள் முழுவதும் உழைக்கும் பணத்தை நொடிப் பொழுதில் தீர்த்துக் கட்டக்கூடிய பணம் விழுங்கிகளின் சுவர்க்கபூமியிது. அவர்களின் வலைக்குள் அகப்பட்ட எத்தனையோ அப்பாவிகளின் கதைகளை நான் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

திறிது காலத்துக்குமுன் எனது ஏழைநண்பன் ஒருவன் என்னிடம் வந்தான். தனது சகோதரிக்கு ஏதோபண இடைஞ்சலாம்' சம்பளப் பணம் முழுவதையும் அவளிடம் கொடுத்துவிட்டானும், கைச் செல வுக்குப் பணம் வேண்டுமென்று என்னிடம் கடன் கேட்டான். ஏதோ கையில் இருந்த பணத்தைக் கொடுத்து அனுப்பினேன். நான்கைந்து நாட்களின் பின்தான் உண்மை வெளிப்பட்டது. அவன் சினிமாவுக்குச் சென்று திரும்புகை யில் தனது சம்பளத்தைப் பறி கொடுத்துவிட்டான் என்பதை வேறு சிலர் கூறத்தான் கேள்விப் பட்டேன். அவனிடம் உண்மையை விளக்கமாகக் கூறும்படி கேட்டால் வெட்கமும் வேதனையும் அடை வானே என்று பேசாமல் இருந்து விட்டேன். பாவம், அவன்மேல் எனக்கு அனுதாபந்தான் ஏற்பட் டது.

அருகில் இருக்கும் தியேட்ட ரில் இரவு இரண்டாம் காட்சியாக ஏதோ பயங்கரமான படம் காட்டு கின்ருர்கள் போலிருக்கின்றது. இடையிடையே அலறும் சத்தங்கள் கிளம்பிக்கொண்டிருந்தன.

மிகவும்சமீபத்திலிருந்து ஏதோ துர்நாற்றம் என்மூக்கைத் துளைத் தது. விரல்களால் மூக்கை அழுத் திப் பிடித்துக் கொண்டே நடந் தேன். நான்கைந்து நாட்களுக்கு முன் தெருவோரத்தில் ஒரு காகம் செத்துப்போய்க் கிடந்தது. அதன் அழுகிய நாற்றமாகத்தான் இருக்கு மோ...? அப்படியும் நினைத்துவிட முடியாது. ஏனெனில் வெகுகால மாகவே இத்துர்நாற்றம் இவ் விடத்தில் இருக்கின்றது. சிறிது தூரத்தில் சாக்கடை நீர் தேங்கி நிற்கின்றது. அதன் நாற்றமாகத் தான் இருக்கவேண்டும்.

தெருவின் வளைவையடைந்து விட்டேன். சிறிது தூரத்தில் வரிசை யாகத் தொழிலாளர்களின் குடிசை கள். அவற்றைத் தாண்டிவிட்டால் நான் குடியிருக்கும் வீட்டை அடைந்துவிடலாம்.

நான் கண்களைக் கூர்மையாக் கிக் கொண்டு பார்த்தேன். அதோ ஒரு பெண்ணின் உருவம் தெரி கின்றது. குடிசையொன்றின் முன் வாசலில் நிற்கின்ருள்.

வழக்கமாக எதிர்ப்பக்கத்தில் உள்ள கட்டிடத்தின் மேல்மாடியில் உள்ள விளம்பரப் பலகையில் மின் சாரபல்புகள் எரிவதும் அணைவது மாக இருக்கும். அதனுல் அவ்விடத் தில் யார்நின்ருலும் துலக்கமாகத் தெரியும். ஆனுல் இன்று அந்த இடம் இருளாக இருக்கின்றது. மின் சாரபல்புகள் பழுதடைத்திருக்க வேண்டும். தூரத்திலுள்ள மின் சாரக் கம்பத்திலுள்ள வெளிச்சம் அவ்விடத்தில் சிறிது மங்கலாகத் தெரிகின்றது.

நான் அவ்விடத்தைச் சமீபித் துக் கொண்டிருந்தேன். இப்போது அவளின் உருவம் துலக்கமாகத் தெரிகின்றது. இளம் பெண்ணுக இருக்கின்ருளே...பதினேழு வயது வரை மதிக்கலாம். அவள்தெருவின் இருபக்கங்களையும் பார்க்கின்ருள். பின்பு குடிசை வாசலை அடைகின் ருள். அவளுடைய பார்வையில் ஏன் ஏக்கம் தெரிகின்றது? அவள் யாருடைய வரவையோ எதிர் பார்த்துக் கொண்டு நிற்கின்ருளா?

அவள் தன்னை அலங்கரித்திருப்பது நன்ருகத் தெரிகின்றது. இந்த அகால வேளையில் அப்படி என்ன அலங்காரம் வேண்டிக்கிடக்கின்றது தலைவாரிப் பூச்சூடி அழகாக உடையணிந்திருக்கின்ருள். ஒரு வேளை இவளும்...? அப்படித்தான் இருக்க வேண்டும். தனது காதலனை-இல்லை காதலர்களை எதிர்பார்த்து நிற்பவளாக இருக்கவேண்டும்.

நான் அவளைச் சமீபித்து விட்டேன். 'க்கும்' —ஒரு செருமல் ஒலி அவளது அடித்தொண்டையில் இருந்து கிளம்புகின்றது.

எனது தலை நிமிரவேயில்லை· நான் நடந்து கொண்டிருந்தேன். ஆனலும் நடையின் வேகம் குறைந்துவிட்டது. அவளின் செருமலுக்கு அவ்வளவு சக்தியா?கடைக் கண்ணுல் அவளைப் பார்த்தேன்.

அவள் சிறிது சத்தமாகச் சிரிக்கின்ருள். ஜலதரங்கத்தின் நாதமல்லவா கேட்கின்றது. என்னையும் மீறிக்கொண்டு எனது தலை நிமிர்கின்றது. அவள் புன்னகை புரிந்த வண்ணம் தன்னிடம் வரும்படி கையால் அழைத்தாள். ஏன் நடை தடைப்பட்டுவிட்டது? கால்கள் இயங்க மறுக்கின்றன? நான் நகராமல் நின்றுவிட்டேனே! என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை. எனது இதயம் வேகமாக அடித்துக்கொள்ளுகின்றது இந்தத் தருணத்தில் பயத்தைக் களைந்தெறிந்துவிட்டுப் புத்திசாலித்தனமாகவல்லவா நடந்து கொள்ள வேண்டும். ஏன், என் புத்தி மழுங்கிவிட்டதா?

இதோ அவள் என்னை நோக்கி வந்து கொண்டிருக்கின்ருள். என்னருகில் நெருங்காதே' என்று கத்த வேண்டும்போல் தோன்றுகின்றது. எனது தொண்டைக்குள் என்ன அடைத்துக்கொண்டுவிட்டது? உமிழ்நீரைக்கூட விழுங்க முடியவில்லையே! இந்த இடத்தை விட்டே ஓடிவிடுவோமா? ஆம், அது தான் சரியான யோசனை. ஆனல் எனது கால்களை நகர்த்தக்கூட முடியவில்லையே. கால்களுக்கு இவ்வளவு கனம் திடீரென்று எப்படி வந்தது?

அவள் என்னருகில் நிற்கின்ருள். இதழ்களிலே புன்னகை அரும்பி நிற்கின்றது. அப்பப்பா. அவளது வதனத்திலே எவ்வளவு கவர்ச்சி! நாகபாம்பின் உடம்பிலே ஒருவகை வழவழப்பான அழகு தோன்றுமே அதேபோலத்தான், ஐயோ! அவள் என் கைகளைப் பற்றுகின்ருளே!

என் தேகமெல்லாம் ஏன் ஒரு மாதிரி இருக்கின்றது? இரத்தமெல்லாம் உறைந்து விட்டதா? எனது உரோமக் கால்கள் குத்திட்டு நிற்கின்றன. நான் மரக்கட்டை போலாகி விட்டேனே! எனது கைகளை விடுவித்துக் கொள்ளக் கூடிய சக்தி எங்கே ஓடி மறைந்து விட்டது? இந்நிலையில் யாராவது பார்த்து விட்டால்...? நான்கு பக்கங்களையும் கவனிக்கின்றேன். நல்லவேளை ஒருவருமேயில்லை.

"உள்ளே வாருங்கள்" என்று கூறிக்கொண்டு எனது பதிலையும் எதிர்பாராது. என்னை இழுத்துக் கொண்டு குடிசைக்குள் சென்ருள். நான் இயந்திரம்போல் அவளைப் பின் தொடர்ந்தேன்.

நாம் செய்யக்கூடாதென்று திட சங்கற்பம் செய்திருக்கும் செயல்களைச் சிலவேளைகளில்' சந்தர்ப்பவசத்தால் நம்மையும் மறந்து செய்து விடுகின்ருேமே... இதே நிலையில்தான் நானும் இருந்தேன்

மிகவும் சிறிய குடிசைதான் பல கைத்துண்டுகளினுலும் தகரத்தி

ணலும் அமைக்கப்பட்டிருந்தது. குடிசைக்குள் நுழைவதற்கு நன்ருகக் குனிய வேண்டியிருக்கிறது. முன் பகுதியில் அதிக வெளிச்சம் இல்லை. எதிலோ என் கால்கள் இடறி நிலை தளருகின்றன. அவள் என்னைத் தாங்கிக்கொண்டாள். குடிசையின் மூலையில் ஒரு சிறு கயிற்றுக் கட்டில். அதில் என்னை அமர்த்தினுள். ''கொஞ்சம் இருந்துகொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டுக் குடிசையின் முன் கதவைச் சாத்தினுள்.

அப்பப்பா, சிறிது நேரத்துக்குள் எனது உடைகள் எல்லாம் வியர்வையால் நனைந்துவிட்டதே! சே! ஏன் எனது உடம்பெல்லாம் இப்படி நடுங்குகின்றது. நான் மிகவும் தென்புடன் அல்லவா இருக்கவேண்டும். எனது பயந்தாங்கொள்ளித்தனத்தை இவள் அறிந்துகொண்டால் மிகவும் சாதுரியமான முறையில் எனது பணத்தைப் பெற்றுக்கொண்டுவிடுவாளே!

எனது சிறியதொகைப் பணத்தைச் செலவுசெய்தற்கு நான் போட்டுவைத்திருந்த திட்டங்கள் மனக்கண்முன் வந்தன. எனக்கு வேலைகிடைத்தவுடன் முதற்சம்பளத்தில், ஊர்ப்பிள்ளையாருக்கு ஒரு தீபம் வாங்கித்தருவதாக எனது அன்னை நேர்த்திக்கடன் செய்திருந்தாள். முக்கியமாக அதனை நிறைவேற்றவேண்டும். எனது ஏழைத் தங்கைக்கு ஒரு சேலை வாங்கியனுப்பவேண்டும். பாடசாலைக்கு வசதிச்சம்பளம் கட்டுவதற்குப் பணம்வேண்டுமென்று தம்பி கடிதத்துக்குமேல் கடிதமாக எழுதியிருந்தான். இவற்றையெல்லாம்விட வேறும் பல சில்லறைச் செலவுகள்...

நான் மிகவும் சாதாரணமாக இருப்பவனைப்போல் நடித்துக் கொண்டு நான்குபக்கமும் நோட்டம் விட்டேன். எதிர் மூலையில் ஏதோ பாத்திரங்கள் உருண்டுகிடந்தன. அறையின் நடுவே ஒரு பிரம்புத் தட்டி தொங்கிக்கொண்டிருந்தது மறுபக்கத்தில்தான் சமையல் அறை போல் இருக்கின்றது. உள் வளை மரங்களில் புகை ஒட்டறைகள் படிந்திருந்தன. எதிரேயிருந்த கதிரையொன்றில் இரும்புப்பெட்டி வைக்கப்பட்டிருந்தது.எதிர்ப்பக்கத்தில் சேலைகளும் வேறு உடைகளும் இருந்தன. இவைகளைப் பார்த்தால் அக் குடிசையில் அவளைத்தவிர வேறு ஒருவரும் வசிப்பதில்லைப்போல் தெரிகின்றது. இவள் தனியாகவா இங்கு இருக்கின்ருள்?

மண்ணெண்ணெய் விளக்கு வெளிச்சத்தில் மேற்கூரையில் ஏதோ மின்னியவாறு தெரிந்தது. உற்றுக் கவனித்தேன்.

ஒரு சிலந்திவலைபின்னியிருந்தது. வட்டம்வட்டமாக எவ்வளவு அழகாக இருக்கின்றது. அதன் நடுவே சிலந்தி! அந்த வலையில் பூச்சியொன்று விழுந்து துடித்துக்கொண்டிருந்தது.

அவள் திரும்பிவந்தாள். விளக்கு வெளிச்சத்தில் அவளின் தோற்றத்தை நன்கு கவனித்தேன். எவ்வளவு அழகாக இருக்கின்ருள்! இவளது வதனத்தில் எவ்வளவு கவர்ச்சி! தோற்றத்தில் நாரீமணிகளின் அதிமித அலங்காரம் இருக்கவில்லை. குடும்பப் பெண்ணுக்குரிய அலங்காரத் தோற்றந்தான் இருந்தது. அவளைப் பார்க்கும் பொழுது அவளின்மேல் அனு

தாபந்தான் ஏற்பட்டது.

இவள் தனது வாழ்வைச் சரியானபாதையில் செலுத்தியிருந்தால் நிச்சயம் ஒரு சிறந்த குடும்பப்பெண்ணாகியிருப்பாள் என்று எண்ணத் தோன்றியது.

ஏன் இவ்வளவு கீழ்த்தரமான வழியில் இறங்கியிருக்கின்ருள்? ஒரு வேலை வறுமையாக இருக்குமோ? நிச்சயம் அப்படியிருக்க முடியாது. வறுமையைப் போக்கிக்கொள்ள எவ்வளவோ கண்ணியமான தொழில்கள் இருக்கின்றனவே. படுகுழியில் விழ வேண்டியதில்லையே! இந் நிலைக்குக் காரணந்தான் என்ன?

அவர்கள் வாழும் கீழ்த்தரமான டாம்பீக வாழ்க்கைமுறையாகத்தான் இருக்கவேண்டும். குடிக்கும் குடிமாளத்திற்கும் கண்ணியமாகப் புரியும் தொழில்களின் வருமானங்கள் ஈடு செய்வதில்லை. அதனுற்நான் குறுக்கு வழியை நாடுகின்ருர்கள்போலும். ஆனாலும் இந்த முடிவை எனது மனம் ஒப்புக்கொள்ளவில்லை. அவளுடன் கதைத்து ஏதாவது கிரகித்துக் கொள்ளலாம்போலத் தோற்றியது.

இதோ அவள் என்னிடம் எதையோ நீட்டுகின்ருள். கிண்ணத்துடன் பாலைவாங்கிச் சுவைத்தேன். அவள் என்முன் அடக்கமாக நின்றுகொண்டிருந்தாள். நான் இங்குவந்தபோது காணப்பட்ட கலகலப்பு எங்கே ஓடிமறைந்துவிட்டது? கிண்ணத்தைக் கட்டிலின்ஓரத்திலே வைத்தேன்.

விம்மும் ஒலி கேட்கின்றதே!

அவளை உற்றுக் கவனித்தேன். கண்ணீர்... இது என்ன தொந்தரவாக இருக்கின்றது? எதற்காக இவள் அழுகின்ருள்? அழவேண்டுமாஞல் தனிமையில் இருந்து அழுது தொலைக்கலாமே, என்னை இங்கு அழைத்துக்கொண்டு வந்து வைத்து ஏன் அழவேண்டும்? வரவர அழுகை அதிகரிக்கின்றதே எனக்கு அவளைப் பார்ப்பதற்கு அனுதாபமாகவும் இருந்தது; சங்கடமாகவும் இருந்தது.

''ஏன் அழுகின்ருய்?''

அவள் அதிகமாக விம்மினள். எனக்குப் பொறுமை குறைந்துகொண்டு வந்தது. கேட்பதற்குப் பதில்கூருமல் இப்படி அழுதுகொண்டிருந்தால்...? ஆத்திரந்தான் பொங்கியது ஆனாலும் அடக்கிக்கொண்டு அவளின் அழுகைக்குக் காரணத்தைக் கண்டிப்புடன் கேட்டேன்.

இப்போது அவள் ஒருவாறு தனது அழுகையைக் குறைத்துக்கொண்டாள். முந்தானையால்கண்ணீரைத் துடைத்துக்கொண்டே சொன்னாள்.

''நான் ஒரு அனுதை. சிறுவயதிலே தாய் தந்தையரை இழந்த எனக்கு அண்ணா ஒருவர் துணையாக இருந்தார், ஆனால் அவரும் சிறிது நாட்களுக்குமுன் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார். நான் தனிமையாகிவிட்டேன். எனது துன்பத்தை நினைக்கும்போது அழுகை வந்துவிட்டது.'' என்று கூறிக்கொண்டே நிலத்தில் அமர்ந்தாள்.

என் மனம் சிறிது வேதனைப்பட்டது. பாவம், இந்த இளம்வயதில் அவளுக்கு இவ்வளவு கொடுமையா? விதி யாரைத்தான் விட்டுவைத்தது!

ஆனாலும் அவள்புரியும் இழிவான தொழிலை நினைக்கும்போது மனதில் கசப்புத்தான் ஏற்பட்டது.

ஒருவேளை தனியாக விடப்பட்ட அவள் வயிற்றை நிரப்புவதற்குத் தான் இத் தொழிலைப் புரிகின்றுளா?

"ஏன் ஏதாவது கண்ணியமான தொழிலைச்செய்து சம்பாதிக்கலாமே" என்று மெதுவாகக் கேட்டுவைத் தேன்,

"நேற்றுவரை என்னிடம் இருந்த நகைகளைவிற்றுக் கண்ணிய மானமுறையில் சீவனத்தை நடத்தி விட்டேன். என்னிடம் இருந்தபணம் எல்லாம் கரைந்துவிட்டது. தனிமை யில்விடப்பட்ட ஒரு இளம்பெண் எந் தக் கண்ணியமான தொழிலைச் செய்ய லாம்? அவளைச் சுற்றியிருக்கும்சிலர் எப்படியும் அவளை இழிவுநிலைக்குக் கொணர்ந்துவிடுவார்கள். அப்படி யொருநிலை பிறரால் ஏற்படுமுன் நானே இந்நிலைக்கு வந்துவிடுவ தெனத் தீர்மானித்தேன். நீங்கள் தான் முதன்முதலில் என்னிடம் வந் திருக்கின்றீர்கள்.''

நான் அவளை நிமிர்த்துபார்த் தேன். புதுமலரின் வர்ணிக்கமுடியாத ஒருவகை வனப்பு அவளிடம் மறைந் திருந்ததை என் உள்மனம் உணர்ந் துகொண்டது. நுகரப்படாத மலரா அவள்? நமது சமுதாயத்தில் தேவை யற்றமுறையில் எவ்வளவு மலர்கள் அநியாயமாகக் கசங்கிவிடுகின்றன.

அவள் தொடர்ந்தாள்..."ஆனல் உங்களைக் கண்டவுடன் நான் அந்த எண்ணத்தைக் கைவிட்டுவிட்டேன். என் சகோதரனை உங்கள் உருவத் தில் பார்க்கின்றேன். என் அண்ணு வின் அதே கனிந்தபார்வை, தோற் றம்யாவும் உங்களிடம் அமைந்திருக் கின்றன. அண்...ணு!" விம்மிய படியே என்னை அழைத்தாள். உணர்ச்சி இழையோடிய அவளது அன்புக்குரலின் சக்தி எனது உரோ மக் கால்களைக் குத்திட்டு நிற்கச் செய்தது.

எனது கண்கள் குளமாகின. அவளின் நிலைகண்ட எந்த மனித இதயமும் கலங்காமல் இருக்கமாட் டாது. அவள் தனது உள்ளத்தைத் திறந்து எல்லாவற்றையுமே கூறி விட்டாள். இந்த உத்தமப் பெண் ணுடன் உடன்பிறக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லையே என்று எனது மனம் அழுதது. ஆனுலும் நான் அவளுக்கு என்ன உதவியைச் செய்யப்போகின்றேன்? எனது குடும் பத்தில் எனக்கு இருக்கும் பொறுப்பே சுமக்க இயலாமல் கனக்கின்றதே!

எனது சட்டைப் பாக்கெட்டில் கிடந்த பணத்தில் நூறுரூபாவை எடுத்து அவளிடம் நீட்டினேன். அவள் தயங்கினுள்.

"ஒரு இளம்பெண் தனியாக வாழமுடியாது என்று நினைத்துக் கொள்ளாதே. மனத்திடமும் துணி வும் கொண்ட எந்தப் பெண்ணும் துன்பமில்லாது வாழலாம். கண்ணிய மான ஏதாவது தொழிலைச் செய்து வாழக் கற்றுக்கொள். அதற்கு இந் தப்பணம் மூலதனமாகவாவது உத வட்டும்." என்று கூறி அவளது கை யில் பணத்தைத் திணித்தேன்.

நான் அவளுக்குக் கூறிய வார்த்தைகளும் செய்த சிறு உதவி யும் எனது மனதுக்குத் திருப்தி அளிக்கவில்லை. ஆனுலும் என் நிலைமையில் அதைத்தான் என்னுல் செய்யமுடிந்தது.

நன்றிப் பெருக்கால் அவளது கண்கள் கலங்கின. நான் புறப்படும் பொழுது "போய்வாருங்கள் அண்ணு" என்று கூறி அன்புடன் விடைதந்தாள்.


வாழ்வினில் நல்லகாரியம் ஒன் றைச் சாதித்த மனநிறைவுடன் எனது அறையை அடைந்தேன்.

---

**வ**ழக்கம்போல் அடுத்தநாள் இரவு அவ்வழியாக வந்துகொண் டிருந்தபொழுது என்னையறியாமலே எனது கண்கள் அவளது குடிசை யின்பக்கம் நாடியது. அங்கே நான் கண்ட காட்சி...

ஒரு இளம்வாலிபனை அணைத்த படியே அவள் குடிசைக்குள் நுழைந்துகொண்டிருந்தாள்.

# பாரசீக இலக்கியப் பூங்கா



உலக இலக்கியங்களின் வரிசையில் பாரசீக இலக்கியத்துக்குச் சிறந்த ஒரு இடமுண்டு. உலக இலக்கியச்சோலையில் பாரசிகக் கவி மலர்களின் வாசனை நித்தியமானது மட்டுமல்ல அந்தச் சோலைக்கே எழிலும், வனப்பும் அளிப்பவை. பாரசிக இலக்கியத்தினையும், அதன் பண்புகளையும் பற்றி ஆழ்ந்து அகன்ற நோக்கில் விமரிசிப்பது இக் கட்டுரையின் நோக்கமல்ல. மாறாக அந்த இலக்கியத்தின் பொதுப்பண்புகள் பற்றி ஆராய்ந்தறிவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

உலக இலக்கியங்களில் செய்யுளிலக்கியமே முதலில் தோன்றியது என்ற உண்மை எல்லா இலக்கியங்களுக்கும் பொருந்தக்கூடிய ஓர் உண்மையாகும். பாரசிக இலக்கியத்தைப் பொறுத்தவரையிலும் இந்தக் கருத்து ஏற்புடைத்தாகின்றது. 'பஹ்லவி' என அழைக்கப்பட்ட ஆரம்ப பாரசிக மொழியில் ஸொராஸ்டிரியர்களின் வேதமான 'ஜென்ட் சுவெஸ்தா'வைத் தவிர வேறு குறிப்பிடத்தக்க இலக்கியம் எதையும நாம காணமுடியவில்லை. இஸ்லாத்தின் இரண்டாவது கலிபா உமர் அவர்களால் கி. பி. 635ல் பாரசிகம் கைப்பற்றப்பட்ட சம்பவம் பாரசிக அரசியல் வரலாற்றிலே மட்டுமல்ல, பாரசிக மொழியில், இலக்கியவரலாற்றிலும் ஒரு மகத்தான மாற்றத்தை ஏற்படுத்தியது. அரபு மொழியின் தாக்கமும்—பண்பாடும் வளமும்பெற்றஅரபிஇலக்கியத்தின் தாக்கமும்—பாரசிகஇலக்

எம். ஏ. எம். சுக்ரி

கியத்தில் ஆழ்ந்து பதிந்தது. இந்தத் தாக்கம் செமித்திய மொழியினதும், ஆரியமொழியினதும் சங்கமத்தினடியாகத் தோன்றிய ஒரு புது இலக்கியத்துறைக்கே வித்தூன்றியது. அரபிலக்கியத்தின் தாக்கம் காரணமாக கி. பி ஒன்பதாம், பத்தாம் நூற்றுண்டளவில் பாரசிக இலக்கியத் துறையில் ஒரு புது உத்வேகமும் மறுமலர்ச்சியும் தோன்றியது. இந்த, மறுமலர்ச்சி கால—நவபாரசிக இலக்கியத்தின் முதல்வராக ருடாகிவிளங்குகின்ருர். பிற்காலப் பாரசிகக் கவிஞர்களில் பெரும்பாலோர் ருடாகியையே தமது கவித்துறை முதல்வராகவும் வழிகாட்டியாகவும் கொண்டனர். ருடாகிக்குப்பின் சிறந்து விளங்குபவர் அபுல்காஸிம் பில் அலி பிர்தவ்ஸி ஆவர். கி. பி. 935ல் குராஸான் மாகாணத்திலுள்ள தூஸ்என்னும் நகருக்கு அருகேயுள்ள ஒரு சிற்றூரில் பிறந்த பிர்தஸிக்கு பாரசிக இலக்கியத்துறையில் அழியா இடமுண்டு. அவரது விரகாவியமான 'ஷாஹ்நாம' பாரசிக இலக்கியத்துறைக்கே அணிசெய்யும் ஓர் எழில் காவியமாகும். அறுபதிணுயிரம் ஈரபிப்பாக்கள் கொண்ட இக் காவியம் கவிஞன் பிர்தவ்ஸியினல் சுல்தான் மஹ்மூத் கஸ்னவிக்காக பாடப்பட்டது. இக் காவியத்தைப் பாடும்பொருட்டு பிர்தவ்ஸி பாரசிகத்தின் பண்டைப் பெருமைகளைப் பறைசாற்றும் வரலாறுகளையெல்லாம் ஆழ்ந்து படித்தாரென்றும், இந்தக் காவியத்தைப் பாடிமுடிக்க அவருக்கு ஏறக்குறைய நாற்பது வருடங்களாகின என்றும் கூறுவர். 'ஷாஹ் நாமாவில்' பாரசிகத்தின் புராணகால வரலாறுதொட்டு. முஸ்லிங்களின் படையெடுப்புவரையுள்ள பாரசிக வரலாறு இடம்பெற்றுள்ளது. இக் காவியம் முழுவதிலும் அடிச்சரடாக ஓடுவது விரச்சுவையாகும். ஷாஷ் நமாவை ஆழ்ந்து படித்த மேல்நாட்டு விமர்சகர்களில் பலர் விரக்சுவை ததும்பிய அமரகாவியமொன்றினைத் தந்த பிர்தவ்ஸியை மகா காவியங்களின் வரிசையில் அடக்கலாமெனக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பாரசிக இலக்கியத்துறையிலே தத்துவ ரீதியான மெஞ்ஞானப் பாடல்கள் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. இத்தகைய மெஞ்ஞானப் பாடல்களைப் பாடியோர்களை சூபிக்கவிஞர்கள் எனவும், இத்தகைய மெஞ்ஞானப்பாடல்களை சூபி இலக்கியம் (Sufistic or mystic literature) எனவும் அழைப்பர். பாரசிக இலக்கியத்துறையில் சூபி இலக்கியம் சிறந்த இடத்தை வகிக்கின்றது. பாரசிக சூபிக்கவிஞர்களின் பாடல்கள் முழுவதும் தன்னுணர்வு வெளிப்பாட்டுப் பாடல்களாக (Subjective poetry)வே விளங்குகின்றன. பாரசிக சூபிக்கவிஞர்களின் வரிசையில் அத்தார், மௌலான ரூமி, ஹாபிஸ், இராகி, ஷைகுஸஆதி, உமர்கையாம் ஆகியோர் முககிய இடத்தை வகிக்கின்றனர். மெஞ்ஞானிகளது உலகம் உணர்வுரீதியானது—சூட்சுமமானது தன்னுனர்வுரீதியானது. இந்த நிலையில் மெஞ்ஞானிகள் தமக்கும், நித்திய பரம்பொருளாம் இறைவனுக்குமிடையிலேயுள்ள ஆன்மீக உறவை வெளிப்படுத்த உவமான உவமேயங்களைச் கையாளுவது தவிர்க்கமுடியாததாகி விடுகின்றது. இறைவனுக்கும் அடியார்க்குமிடையேயுள்ள தொடர்பை வெளிப்படுத்த மெஞ்ஞானுகளுள் பெரும்பாலோர் மானிடர்தம் காதலையே துணையாகக் கொள்வர், இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே தமிழ்

லக்கியத்துறையில் பல்லவர்காலப்பிரிவில் மாணிக்கவாசகர் போன்ற மெஞ்ஞானிகள் தமது தெய்வீகக் காதலை வெளிப்படுத்த சங்ககால அகத்திணை மரபைத் துணையாகக் கொண்டனர் என்பதும் இங்கு நோக்கத்தக்கதாகும். பாரசிக சூபிக்கவிஞர்கள் அவர்களுக்கும் இறைவனுக்குமிடையேயுள்ள தெய்விகக் காதலை வெளியிட மானிடக் காதலைக் கையாண்ட பான்மையினை ஹக்கீம்ஸனுயின் பின்வரும் பாடல் அழகுற விளக்குகின்றது.

காதலன் ஒருவன் மரணத்தறு
[வாயிலிருந்தான்
மரணவேதனை நீங்கி அவன்
முகத்தில் புன்னகை
[மலர்ந்தது.
குழிந்து, உப்பிய கன்னங்களில்
[திடீரென தசைப்பிடிப்பு
பஞ்சடைந்த கண்களில் ஒளி
[யின் தீட்சண்யம்
தெய்விகப் பேரின்பத்தில்
அவன் திளைப்பதாக அது காட்
[டிற்று.
அவனைப் புன்னகை புரியச்செய்
[தது எது என்று
அவன் பக்கமிருந்தோர் ஆச்
[சரியமுற்றனர்
அப்போது அவன் சொன்னான்!
ஆஹா! வாழ்நாள் முழுவதும்
[போற்றினேன்!
இப்பொழுது இந்த அழகி
தன் திரையை நீக்கிவிட்டாள்
நித்திய இன்பங்களை
ஊனக்கண்களுக்குத் தெரியா
[மல்
மறைத்த திரை அது.
உண்மையான அன்பர்கள்
அந்த இனிய நெருப்பால்
நெடுங்காலமாகச் சூடேற்றப்
[பட்டுக்
காதலியின் கடைக்கண் அருளில்
புளகித்து மாள்கின்றனர்.

இத்தகைய அகத்திணை ரீதியான உவமானங்கள் மட்டுமன்றி, பாரசிக சூபிக்கவிஞர்கள் தமக்கே உரியமரபு முறை பேணிய நிலையில் சிலஉவமைகளைக் கையாண்டுள்ளனர். பாரசிக இலக்கியத்தை உரியமுறையில் புரிந்துகொள்ள இந்த உவமைகளின் தத்துவங்களைப்பற்றிய அறிவு அவசியமாகும். ''இத்தகைய உவமைகளாக மது, மதுவருந்துவான் மது கடைக்காரன் முதலியவற்றைச் சூபி கவிஞர்கள் கையாளுவர். இங்கு மது என்பது இறைவன்பற்றிய அறிவையும், அன்பையும்,மதுவருந்துவோன் என்பது இறைவனது அன்பையும் இறைவன்பற்றிய அறிவையும் நாடிச் செல்லும் பக்தனையும், மதுக்கடைக்காரன் என்றபதம் அந்த இறைவன் பால் பக்தனை ஆற்றுப்படுத்தும் ஆன்மீகத் தலைவனைக்குறிக்கவும் கையாளப் படுகின்றது. பாரசிக இலக்கியத்துறையில் சூபிக்கவிஞர்களால்கையாளப்படும் இந்த உவமைகள் அனைத்தையும் ஒருங்குபடுத்திப்பயன்படுத்தி கவிதைத்துறையில் வெற்றிகண்டவராக நிஸாவி கன்ஜவி என்ற கவிஞர் விளங்குகின்ருர். பன்னிரண்டாம் நூற்ருண்டளவில் வாழ்ந்த பரீ உத்தீன் அம்தார் எண்ணற்ற இலக்கிய சிருஷ்டிகளின் கர்த்தாவாக விளங்குகின்ருர். ''மஸ்ஹருவ் அஜாயிப்,'' ''பந்த் நாமா'' ''மன்திக் தா இர்'' என்பன இவரது புகழ்படைத்த நூல்களாகும். 'மன்திக் தா இர்' என்ற ''பறவைகளின் பராளுமன்றம்'' எனப் பொருள்படும் இவரது நூல் பாரசிம் இலக்கிய வல்லுனர்களால் பெரிதுக பாராட்டப்படுவதாகும். இதில் பற

வைக் கூட்டமொன்றின் பிரயாண மொன்றை வர்ணிக்கும் பாணியில் அத்தார் தனது தத்துவக் கருத்துக் களை வெளியிடுகின்றார்.

பாரசிக சூபிக்கவிஞர்களுள் மௌலானா ஜலாலுத்தின் ரூமிக்குச் சிறந்த இடமொன்றுண்டு. "ஆசியா விலேயே மிக முக்கியமான சூபிக் கவிஞர் மௌலானா ரூமி" என பேராசிரியர் இ. ஜி. பிரௌன் தனது "பாரசிக இலக்கிய வரலாறு" என் னும் நூலில் கருத்துத் தெரிவிக்கின் றார். மௌலானா ரூமி பராசிக இலக் கிய உலகிற் களித்த சிறந்த செல் வம் "மஸ்னவி" என்ற பாடற்றொ குதியாகும். இதைவிட "திவானே ஷம்ஸே தப்ரேஸ்" என்ற பாடல் தொகுதியையும், "பீஹி–மா–பீஹி" என்ற ஒரு நூலையும் அவர் இயற்றி யுள்ளார். மௌலானாவின் மஸ்னவி பாரசிக மொழியின் குர்ஆன் எனப் போற்றப்படும் கவிதைக் களஞ்சிய மாகும். ஆத்மா தனது மூலமான இறைவனை அடையத் துடித்துக் கொண்டிருக்கும் ஒரு போராட்ட நிலையின் உணர்ச்சிப் பிரவாகமே மஸ்னவியில் காணப்படுகின்றது. ஏனைய பாரசிக சூபிக் கவிஞர்கள் போல ரூமியும் தனது ஆழ்ந்த தத் துவக் கருத்துக்களை வெளியிட மது, மதுவளிப்போன் போன்ற மரபுவழி உவமைகளையே கையாளுகின்றார்.

ரூமிக்கு அடுத்ததாக பாரசிக சூபிக்கவிஞர்கள் வரிசையில் எங்கள் உள்ளத்தைக் கவருபவர் ஷைகு முஸ்லிஹுத்தின் ஸஆதி ஆவர் அவ ரது கவிதைக் களஞ்சியங்களான "புஸ்தான்" "குலிஸ்தான்" இரண் டும் அவரது கவிதா வன்மையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. பு. "புஸ்தானில்" கவிதையுருவில் கதைகளைக் கூறுவதன் மூலம் தனது தத்துவக் கருத்துக்களை வெளியிட ஸஆதி முயன்றார். ஆனால் இதைவிட "குலிஸ்தானில்" உரை நடையுருவில், கதைகளைக் கூறி தனது தத்துவக் கருத்துக்களை வெளியிடுவதிலேயே ஸஆதி வெற்றி பெற்றார் என திறனாய்வாளர் கருத் துத் தெரிவிப்பர்.

பாரசிக இலக்கியத்தின் பெரு மையை உலகறியச் செய்த பெருமை உமர் கையாமைச் சாரும். உமர் கையாமை விட சிறந்த சூபிககவி ஞர்கள் பாரசிகத்திலிருந்த நிலையில் கூட, சில வரலாற்றுக் காரணங் ளால் மேற்கத்திய இலக்கியத் துறை யில் பாரசிக இலக்கியம் பற்றிய உணர்வும், பிரஞ்ஞையும், உமர் கையாமின் அபியாகத் தோன்றி அவரது அழியாகக் கவிதைச் செல்வ மான் ருபய்யாத்' மூலமாக வளர்க் கப்பட்டு வருகின்றது. மேற்கத்திய இலக்கியத்துறையில் பாரசிக இலக கிய கர்த்தாக்களுள் மிகப் பிரபல மானவர் உமர்கையாம், என்பதை விட மிக தவருக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளவர் உமர்கையாம் எனில் அது மிகப்பொருத்தம். "உமர் மதுவையும், மங்கையைப் பற்றிப் பாடினாரென்றும், உலக இன்பமும். கேளிக்கையுமே உமரின் குறிக்கோ ளென்றும், வாழ்க்கையின் இன் பத்தை ஒருகணமும் விடாது துய்த்து விட முயன்ற ஒரு நிலையே உமரின் கவிதைகளில் காணப்படுகின்றது என்பதுதான் உமரைப்பற்றி மேற்கத் திய உலகம்மட்டுமல்ல— கிழக்கத்திய உலகங்கூட தெரிந்துவைத்திருக்கும் உண்மைகள். மேற்கத்திய நாடுகளில் இரவுகிளப்கள்கூட "உமர்கையாம்

களைப்" எனப் பெயரிட்டுள்ளன. உமர்கையாமின் கவிதைகள் காம வெறியூட்டும் சித்திரங்களை விளக்கப் படங்களைத் துணையாகக்கொண்டு வெளியிடப்பட்டுள்ளன. உமர்கையாம் யார்? அவர் ஒரு சூபிக்கவிஞரா? இல்லை! உலக இன்பங்களையே குறிக்கோளாகக்கொண்டு வாழ்ந்த சிற்றின்பக் கவியா? என்பனபோன்ற கேள்விகள் இன்று எழக்காரணம் உமர்கையாமை ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தி யார் செய்த தவறென்றே கூறவேண்டும். எட்வர்ட் பிட்ஸ்கெரல்ட் போன்றோர் மொழிபெயர்ப்பாசிரியர்கள் என்ற முறையில் "ருபய்யாத்தை" மொழிபெயர்த்ததில் வெற்றிபெற்ற நிலையில்கூட உமரின் தத்துவக்கருத்துக்களை. உமரின் கவிதைகளில் அமச்சரடாக ஓடும் சூட்சும உண்மையினை—மெய்ப்பொருளை உணர்வதில் தோல்விகண்டனர் என்றே கூறவேண்டும். சுவாமி கோவிந்த தீர்த்தா என்பார் எழுதிய "Netar of Grace" என்ற நூலில் தான் உமரின் தத்துவக் கருத்துக்கள் ஓரளவுக்கேனும் விளக்கப்புட்டுள்ளன. பாரசிக இலக்கிய மரபில் மது மதுவளிப்போன், மதுக்கிண்ணம், ரோஜா, போன்ற பதப்பிரயோகங்கள் எந்தக் கருத்தில் - எத்தகைய தத்துவக் கருத்துக்களை வெளியிட கையாளப்பட்டுள்ளன என்ற உண்மையை மரபு நிலைபேணிய நிலையில் உணர்ந்து உமர் கையாமைப் படித்திருந்தால் இத்தகைய தவறுகள் தோன்றக் கூடிய வாய்ப்புக்களே இருந்திருக்க இடமில்லை உமர் ஒரு கவிதையில்

"நான் மலட்டுத் தன்மை [வாய்ந்த<br>
"அறிவை" விவாகரத்துச்செய்து [விட்டு,<br>
திராட்சையின் புதல்வியை<br>
(மது) மணம் முடித்தேன்"

எனப்பாடுகின்றார்.

இதை எட்வர்ட்பிட்ஸ்கெரால்ட் ஆங்கிலத்தில் பின்வருமாறு மொழிபெயர்த்துள்ளார்.

You know my friends how<br>
Long Since in my house<br>
For a New Marriage I did<br>
Make Carouse<br>
Divorced Old Barren Reason<br>
From my Bed<br>
And took the Daughter of<br>
Vine to spouse

இதில் உமர் இறைவனை அறிய அறிவு துணை புரியாதெனக் கண்டு தான் அறிவைத் துறந்து விட்டு அன்பையும், பக்தியையும், தெய்வீகக் காதலையும் துணையாகக் கொள்ள முடிவு செய்துள்ளார் என்ற தத்துவக்கருத்தையே வெளியிடுகின்றார். பெரும்பான்மையான சூபிக்கவிஞர்கள் அறிவு Rationalism ரீதியாக இறைவனை உணர முடியாதென்றும் அன்பு, காதல் (Ultra-Rationalism) என்பவற்றின்மூலமாகவே இறைவனை அடையமுடியுதென்றும் கூறுவர். கூறுவர். இந்த சூபிக்கவிஞர்களின் கருத்தையே உமரும் இங்கு பிரதிபலிக்கின்றார். உமர் அறிவின் குறுகிய எல்லைகளைக் கடந்து பரந்து வியாபித்துள்ள அன்புலகை தன்னையே மறக்கச் செய்யும் பக்தியுலகை தெய்விகக் காதலுலகை மதுவுக்கு உவமிக்கின்றார்.

எனவே பாரசிக இலக்கியத்தில் "மரபுக்குச்" சிறந்த இடமுண்டு. மரபைப் பேணாத நிலையில் மரபைக் கைவிட்ட நிலையில் இலக்கியத்தை

அணுகும் பொழுது இலக்கியத்தை உரிய முறையில் புரியமுடியாமற் போவது மட்டுமன்றி தவறாகப் புரிந்துகொள்ளும் நிலையும்ஏற்படுகின்றது. மரபுணர்வோடு அணுகும் பொழுதுதான் அதன் யதார்த்தம் பேணப்படுகின்றது. சூபிக்கவி உமர் கையாம் மதுவையும். மங்கையையும்பற்றிப் பாடியவை சிற்றின்பக் கவியாக அறிமுகப்படுத்தப்படவும் மெஞ்ஞானக்கவி மாணிக்கவாசகர் மாக்ஸீயசித்தாந்த விமரிசன நோக்கில் அறிமுகப்படுத்தப்படுவதற்கும் மூலகாரணம் மரபுணர்வற்ற இலக்கிய விமரிசன முயற்சியாகும்.


தமிழிலக்கியத்துறையில் மறுமலர்ச்சியும், புத்துணர்ச்சியும், தோன்றியுள்ள இன்றைய காலகட்டத்தில்பிற மொழி இலக்கியங்கள் பற்றிய அறிவும், தொடர்பும்,உணர்வும் பிரக்ஞையும் இலக்கியம் படைப்பவர்கட்கும், விமரிசகர்கட்கும் அவசியம். அதுவும் கீழைத்தேயசிந்தனைகளின்வளர்ச்சியையும், பாரம்பரிய உணர்வுகளையும்—கீழைத்தேய உள்ளங்களின் உணர்ச்சிக் குவியல்களையும்—மனப் போராட்டங்களையும் அறிய கீழைத்தேய இலக்கியம்பற்றிய அறிவு மிக மிகஅவசியம். அது எமது இலக்கிய நோக்கை குறுகிய சிந்தனைகளிலிருந்து விடுதலைசெய்யும். எமது பாரம்பரியத்துக்கும் — மரபுநெறிக்கும், வாழ்வியல் கொள்கை, கோட்பாடுகளுக்கும் முரணான தத்துவங்களுக்கும்நாம்அடிமையாவதிலிருந்து எம்மைக் காப்பாற்றும். ஆண்டாண்டு காலமாக நாம் பேணிவரும் வாழ்வியல் லட்சியங்களைப் பேணிய நிலையில் - எமது நாகரிகத்தின்—கலாசாரத்தின் தனித்தன்மையைப் பேணிய நிலையில் இலக்கிய ராஜபாட்டையில் வீறுநடைபோட எம்மை ஆயத்தஞ்செய்யும். அதுவே இன்றைய எமது இலக்கியத்தின் தேவை—கடமை—பணி!

நினைவுமலர்கள் வெளியிடுவோரே!
பாடசாலை அதிபர்களே!
புத்தக ஆசிரியர்களே!
பத்திரிகை நிர்வாகிகளே!

குறைந்த செலவில்
சிறந்த 'புளக்'குகள்
செய்யவேண்டுமானால்
எங்களுக்கு எழுதுங்கள்.

**Sri Lanka Block Makers**

131, MESSENGER STREET, COLOMBO.




ந. தேவமனோகரி யாழ்ப்பாணம்.

கே: ஆண்கள், பெண்களைப் பார்த்து மயங்கி, மனத்தைப் பறி கொடுப்பது......?

ப. ஆதாம் – ஏவாள் காலத்தி லேயே ஆரம்பித்து விட்டது!

கி. சிவலிங்கம், சாவகச்சேரி

கே. பாலைக் குடிக்கும்போது அது கசக்கின்றதே, காரணம என்ன?

ப. அது பாலின் தவறன்று, பருவத்தின் தவறு! ஒருவர், இருவராகவேண்டிய காலம் வந்து விட்டது!

தா. மகாதேவன், காரைநகர்.

கே. மகாதேசாதிபதியை, அவருடைய மாளிகையிற் காணவிரும்புகின்றேன். அங்கே எப்படிச் செல்வது?

ப. 'இராணி மாளிகை'யில் 'உள்ளே' என்று போட்டிருக்கின்றதே, அந்த வாசல் வழியாகச் செல்லலாம்!

ச. அனந்தன் சுதுமலை,

கே. மற்றப் பத்திரிகைகளிடம் இல்லாத ஒரு தனிப்பட்ட பிரியம் "கலைச்செல்வி" யிடம் எனக்கு இருக்கிறது. காரணம் புரியவில்லையே?

ப. உண்மையான காரணத்தைச் சொல்வதற்குத் தன்னடக்கம் என்னைத் தடுக்கின்றதே, நான் என் செய்வேன்? தங்கள் பிரியம் நீடூழி வாழ்க!

கே. வீரப்பெண்கள் இப்போதும் இருக்கின்றார்களா?

ப. நிறைய இருக்கின்றார்களே! தம் வேல் விழிகளை உருட்டி 'முழி'த்துத் தம் கணவன் மார்களை அடக்கி அடிபணிய வைக்கும் பல வீரப் பெண்கள் இருக்கின்றார்கள்!

க. சுப்பிரமணியம், காரைநகர்

கே. 'மலைவிழுங்கி மகாதேவனை' உங்களுக்குத் தெரியுமா?

ப. சில இலக்கியத் திருட்டுகளை அம்பலப்படுத்தியதற்காக, அப்படி அம்பலப்படுத்தியவர்களை ஒழித்துக்

கட்டுவதற்கு முயலும் 'ஆள்விழுங்கி எழுத்தாளர்க'ளைவிட அந்த மலை விழுங்கி மகாதேவன் பயங்கரமான வரோ!

கே. 'அத்தான்' என உங்கள் மனைவி குழையும்போது அது எதற்காகவென நீங்கள் முன் கூட்டியே அறிவீர்களா?

ப அறிவேன்—அடுத்த மாதச் சம்பளம் அத்திவாரத்துடனேயே இடம் பெயரப் போகின்றது என்பதை!

எஸ். எம். ஏ. சேகுமுகம்மதலி, [கல்முனை.

கே. இனிமை, அறிவு, கசப்பு, கைப்பு, அன்பு, ஆராய்ச்சி, ஆணவம்—இவற்றின் பிறப்பிடங்கள் யாவை?

ப. இவை வெவ்வேறு இடங்களிலிருந்து பிறப்பதில்லை; ஒரே இடத்திலிருந்து தான் பிறக்கின்றன—மனித உள்ளத்திலிருந்து!

சி. செல்வரதி, சங்குவேலி.

கே. தமிழ்வாணனைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப. பிழைக்கத் தெரிந்த பத்திரிகையாசிரியர் தமிழ்வாணன்;வேறு பத்திரிகைகளில் வெளியாகும் முக்கிய செய்திகளை வைத்துக்கொண்டு அவற்றிற்குப் பொருத்தமான கேள்விகளைத் தயாரிப்பதில் மகா நிபுணர்!

இ. சந்திரன் ஆவரங்கால்.

கே. காதலனிடமிருந்து காதலி முத்தம் பெறமுன்பு என்ன எண்ணத்தையும் பெற்றபின்பு என்ன எண்ணத்தையும் கொள்ளுகின்ருள்?

ப. முதலில் ஒன்று 'கிடைக்காதா?' என்றும் பின் 'இன்னும் கிடைக்காதா?' என்றும் எண்ணுவாள்!

வி. எஸ். துரை, நீர்வேலி.

கே. சுயநலத்திற்காகத் தமிழினத்தைக் காட்டிக்கொடுக்கும் கயவர்கள் எதற்குச் சமம்?

ப. கோடரிக்காம்பிற்குச் சமம் என்று கூறலாம்; ஆனால் கோடரிக்காம்பிடம் சுயநலம் இல்லையே!

கே. தற்போயை அரசாங்கத்தின் ஆயுள்கயிறு எதில் தங்கியிருக்கின்றது?

ப. மொழிச்சட்டம் என்ற முரட்டுக் கழுதையில்! ஆனால் இந்தக் கழுதை, முன்னாலே செல்பவர்களை முட்டும் காலமும் பின்னாலே செல்பவர்களை உதைக்கும் காலமும் வெகு தூரத்திலில்லை!

கே. இலங்கையின் மிகத்திறமை வாய்ந்த ஓர் அரசியல் ஞானியைக் கூறுவீரா?

ப. இனிமேல்தான் தோன்றவிருக்கும் ஒருவரைப் பற்றி இப்பொழுதே கூறுவதற்கு நான் ஒரு தீர்க்கதரிசி அல்லன்!

V. P. சேகரன், கொக்குவில் மேற்கு.

கே. உண்மைக் காதலியின் அன்பை எந்நேரத்தில் புரிந்து கொள்ளலாம்?

ப அவளுடன் இருக்கும் ஒவ்வொரு நிமிடத்திலும், அவளுடன் இல்லாத ஒவ்வொரு செக்கண்டிலும் புரிந்து கொள்ளலாம்!

எம். ஐ. ஏ. தாலிப், பெரிய கிண் [ணியா.

கே. ஈழத்து எழுத்தாளர் ஐவரின் படைப்பாகிய "மத்தாப்பு" என்னும் நாவலை, ஒருவரே தீட்டியிருந்தால்...?

ப. ஒரே ஒரு வர்ணமாகவே விரிந்து கண்களுக்குத் தெவிட்டியிருக்கும்!

இராஜு, நெல்லியடி.

கே. "கலைச்செல்வி" ஏன் நெல்லியடிக்கு வருவதில்லை?

ப. ஏன் வருவதில்லை? நெல்லியடிச் சந்தியிலுள்ள லக்ஷ்மி ஸ்டோரில் கேட்டீர்களா? அவர்கள் தான் நெல்லியடியில் "கலைச்செல்வி"யின் விற்பனையாளர்களாக மிகவும் உற்சாகத்துடன் கடமையாற்றுகின்றார்களே!

வி. சாதசிவம், அரசாங்க அச்சகம், கொழும்பு.

கே. தங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவமொன்றைக் கூறுங்கள், பார்க்கலாம்?

ப. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் எனக்கு இந்தப் பெயரைச் சூட்டினார்களே, அந்தப் பெயரையும் சம்பவத்தையும் என்னால் இன்னமும் மறக்கவேமுடியவில்லை.

எஸ். ஞானசேகரன், கண்டி

கே, யாழ்ப்பணச் சரித்திரத்தை எழுதிய முதலியார் இராசநாயகம் எப்போது பிறந்தார்? எப்போது இறந்தார்?

ப. 22-10-1870ல் பிறந்த அவர், ஏறக்குறைய எழுபது ஆண்டுகள் வாழ்ந்து 15-1-1940ல் இறந்தார்.

சி. இரத்தினம், ஆத்திப்புலம், யாழ்ப்பாணம்.

கே நான் ஒரு நாடகத்திற்கு விமர்சனம் எழுதியுள்ளேன். அதைக் "கலைச்செல்வி"யில் வெளியிட என்ன செய்யவேண்டும்?

ப. இப்படி எழுதப்படும் விமர்சனங்களைக் "கலைச்செல்வி"யில் வெளியிட முடியாதென ஆசிரியர் கூறுகின்றார். நாடகம் நடைபெறுவதற்கு முன், "கலைச்செல்வி"க்கு அறிவிக்க வேண்டும். அலுவலகத்திலிருந்து பிரதிநிதிகள் நாடகத்திற்கு அனுப்பப்படுவார்கள். அவர்களின் விமர்சனங்கள் "செல்வி"யில் இடம் பெறும்,

க. இராமசாமி, கொட்டாஞ்சேனை

கே. ஒருவன் இவ்வுலகிற் செய்யும் முதலாவது வேலை என்ன? கடைசி வேலை என்ன?

ப. அழுவது; அழவைப்பது!

சி. விநோதினி, மட்டக்களப்பு.

கே. இப்போது எமது நாட்டில் குற்றவாளிகள் பெருகிவருவது எதைக் காட்டுகின்றது?

ப. சட்டங்கள் பெருகிவருகின்றன என்பதை!

"சிவாஜிதாசன்", பருத்தித்துறை.

கே. "கர்ணன்" படம் இலங்கையில் எங்கே காட்டப்படும் என்பதைக் கூறுவீர்களா?

ப. சினிமாத் தியேட்டர்களிலுள்ள வெள்ளைத் திரையில்!

சி. கந்தையா, மட்டக்களப்பு

கே. சாரதா தேவி அம்மையாரின் பிறந்த தினத்தை இலங்கைக் கலண்டர்கள் வெவ்வேறாகக் கூறுகின்றன. எது சரி என்பதை நீங்கள் உறுதிப்படுத்துவீர்களா?

ப. அவர் பிறந்த தினம் 22-12-1853. சமாதியடைந்த தினம் 20-7-1920. இந்த விபரங்கள் அன்னையாரின் படத்துடன் லீலா பஞ்சாங்கக் கலண்டரில் வெளியாகியுள்ளன.

குறிப்பு:- கேள்விகளை அஞ்சலட்டையில் எழுதிக் கீழேயுள்ள முகவரியை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும்,

---

**தாண்டவக்கோன்,**
மே/பா. கலைச்செல்வி
இளையதம்பி கட்டடம்,
ஸ்டான்லி வீதி,
**யாழ்ப்பாணம்.**

# தமிழில் ஒரு புதுமை!

சி. ச.

மிகவும்சிறந்த முறையிலே இலக்கிய விழாவொன்றை நடாத்தவிரும்புகின்றீர்கள். யார் யாரைச் சொற்பொழிவாளர்களாக அழைக்கலாம்? அவர்கள் எங்கிருக்கின்றார்கள்? அவர்களின் முகவரி என்ன?— இத்தகைய பிரச்னைகள் பலருக்குத் தோன்றலாம். இவற்றை இலகுவில் தீர்த்துவைப்பதற்கென விரைவில் வருகின்றது ஒரு தொகுப்புநூல்.

அதன் பெயர்தான் வரத'ரின் பலகுறிப்பு.

ஈழத்திலும் இந்தியாவிலும் என்னென்ன தின வார மாத இதழ்கள் வெளியாகின்றன? முகவரி என்ன? ஈழத்தின் சிறந்த எழுத்தாளர்கள் யார்?—இப்படியான கேள்விகளுக்கு விடையிறுக்கும் வகையில் வருகின்றது வரத'ரின் பலகுறிப்பு.

சாய்ப்புச் சட்டமென்றால் என்ன? ஒருவன் வருமானவரியாக எவ்வளவுதொகை செலுத்தவேண்டும்? விற்பனை வரி என்றால் என்ன? கார் ஓட்டுபவர் கவனிக்கவேண்டிய விதிகள் யாவை?—இவற்றைச் சரியாகவும் விரிவாகவும் விளக்குகின்றது வரத'ரின் பலகுறிப்பு.

ஈழத்திலுள்ள தலைசிறந்த கல்லூரிகள், தொழிற்சாலைகள், ஈழநாட்டில் இதுவரை வெளியான நூல்கள், வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஆண்டுகள், வர்த்தக நிலையங்கள்—இப்படி இன்னுமனேக விபரங்களைக் கொண்டுள்ளது வரத'ரின் பலகுறிப்பு.

தமிழில் இதுவரை இப்படியொரு தொகுப்புநூல் வெளிவரவில்லை என்றே சொல்லலாம். ஆங்கிலத்தில் பல்லாண்டு காலமாக 'பர்கூசன் டிறக்டரி' என்ற நூல் வெளியிடப்பட்டு வருகின்றது. சிங்களத்தில் ''ஜன பொத'' என்பது சென்ற சிலகாலமாக வெளியிடப்படுகின்றது. தமிழில் முதன் முறையாக இப்போதுதான் வெளிவரவிருக்கின்றது இத்தகைய ஒரு நூல்.

பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் இப் பெரிய தொகுப்புநூலைத் தயாரித்து வருபவர், ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களுள் ஒருவராகிய திரு. வரதர் அவர்கள். ஒவ்வொரு துறையிலும் அறிவும் அனுபவமும் ஆற்றலும்மிக்க பலர் அவருக்கு உறுதுணையாக இருக்கின்றார்கள்.

தமிழ் மக்கள் ஒவ்வொருவருடைய கையிலும் இந்நூல் இருப்பது அவசியம். பொதுத் தேர்வுகளுக்குத் தோற்றும் மாணவர்கள் இந்நூலின்மூலம் பல புதிய, அரிய செய்திகளை அறிந்துகொள்ளலாம்; எந்தக் கடையில், என்னபொருளை வாங்கலாம்? என்ற விபரத்தை எல்லாரும் இலகுவில் அறிந்துகொள்ளலாம்; கல்லூரி ஆசிரியர்கள், அதிபர்கள், வைத்தியர்கள், கிராமசேவையாளர்கள், அரசாங்க அதிகாரிகள், அரசியல்வாதிகள், தொழிலாளர்கள், இலங்கையைப் பற்றி அறிய விரும்பும் வெளிநாட்டினர் முதலிய பல்வகைப்பட்ட மக்களுக்கும் இந்நூல் பெரிதும் பயன்படக்கூடிய வகையில் தயாராகின்றது.

ஏறக்குறைய அறுநூறு பக்கங்கள்கொண்ட வரத'ரின் பலகுறிப்பு எல்லாருக்கும் இலகுவில் கிடைக்க வேண்டும் என வெளியீட்டாளர்கள் விரும்பியபோதிலும், இப்போதுள்ள காகிதக் கட்டுப்பாட்டின் காரணமாக பத்தாயிரம் பிரதிகளே அச்சாகின்றன. தமிழர்களின் இன்றியமையாத ஒரு தேவையைப் பூர்த்திசெய்ய முன்வந்த ''வரதர் வெளியீடு'' நிர்வாகிகளுக்குத் தமிழ்மக்கள் ஊக்கமும் உற்சாகமும் அளிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இத் தொகுதியின் விலை 10-00ரூபாவாகும். அன்பர்கள், முற்பணமாக 3-00 ரூபாவை அனுப்பித் தங்களுக்குரிய பிரதியை முன்கூட்டியே பதிவுசெய்வார்கள் என நம்புகின்றோம். இவ்வாண்டு மே மாதத்தின் முதல் வாரத்தில் வரத'ரின் பலகுறிப்பு வெளியாகும்.

# கலைச்செல்வி நடாத்தும்

## 2-வது அகில இலங்கைச் சிறுகதைப் போட்டி

## பரிசு : ரூபா 200-00

1 இப் போட்டியில் இலங்கையிலுள்ள சகல எழுத்தாளர்களும் பங்கு பற்றலாம்.

2 கதைகள் 'புல்ஸ்காப்' தாளில் எட்டுப் பக்கங்களுக்கு அதிகப்படாமல் தாளின் ஒரு பக்கத்தில் மையினுல் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

3 கதைகள், எழுத்தாளரின் சொந்தக் கற்பனையாக இருக்கவேண்டும். தழுவலாகவோ, மொழிபெயர்ப்பாகவோ, ஏற்சனவே பிரசுரிக்கப்பட்டதாகவோ இருக்கக்கூடாது. இவற்றை உறுதிப்படுத்தும் கடிதம் கதைகளுடன் இணைக்கப்படவேண்டும்,

4 கதையை எழுதியவரின் பெயர், முகவரி முதலிய விபரங்கள் தனித் தாளில் எழுதப்படவேண்டும் புனைபெயரில் எழுதுபவர்கள், தம் சொந்தப்பெயரையும் குறிப்பிடவேண்டும்.

5 நீதிபதிகளால் மிகச் சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்படும் கதைக்கு முதற்பரிசாக ரூபா 100/- வழங்கப்படும். அடுத்த கதைக்கு இரண்டாவது பரிசாக 60/-ரூபாவும் அடுத்ததற்கு மூன்ருவது பரிசாக 40/ரூபாவும் வழங்கப்படும்,

6 கதைகள் அனைத்தும் 31-3-64க்கு முன்னதாக எமக்குக் கிடைக்க வேண்டும்.

7 இப்போட்டி சம்பந்தமாக எழும் எவ்வித பிரச்சினையிலும், போட்டி ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

8 கதைகளை, "இரண்டாவது அகில இலங்கைச் சிறுகதைப் போட்டி; கலைச்செல்வி அலுவலகம், இளையதம்பி கட்டடம். ஸ்டான்லி வீதி யாழ்ப்பாணம்—என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

---

கலைச்செல்வியின் புதிய முகவரியைக் குறித்துக்கொள்ளும்படி அனைவரையும் கேட்டுக்கொள்ளுகின்ருேம்.

**கலைச்செல்வி**

இளையதம்பி கட்டடம்,

ஸ்டான்லி வீதி : : யாழ்ப்பாணம்.

---

# இலங்கா நிதி லிமிற்றெட்

## 10 ஆண்டு நிரந்தர சேமிப்பு மூலம்

ரூ 500-00, 10 ஆண்டில் ரூ. 1000-00 ஆகும்
ரூ. 1000-00, 10 ,, ரூ. 2000-00 ,,

## ஷை நிரந்தர சேமிப்பு ஒருமாத அறிவித்தலின் பின் கீழ்க்கண்ட தொகையை எடுக்கலாம்

| சேமிப்பு | ரூ. 500-00 க்கு | ரூ. 1000-00 க்கு |
|---|---|---|
| 1 ஆண்டின் பின் | 535-00 | 1070-00 |
| 2 ,, | 572-00 | 1144-00 |
| 3 ,, | 611-00 | 1222-00 |
| 4 ,, | 652-00 | 1340-00 |
| 5 ,, | 695-00 | 1390-00 |
| 6 ,, | 745-00 | 1490-00 |
| 7 ,, | 800-00 | 1600-00 |
| 8 ,, | 860-00 | 1720-00 |
| 9 ,, | 925-00 | 1850-00 |
| 10 ,, | 1000-00 | 2000-00 |

தலைமை ஆபிஸ்: திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
கிளை: வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

கல்லூரிகளுக்கு, அலுவலகங்களுக்கு, விளையாட்டுப் போட்டிகளுக்கு, உல்லாசப் பிரயாணங்களுக்கு—இப்படி இன்னும் எத்தனையோ இடங்களுக்குச் செல்பவர்கள், பொருத்தமான உடையணிந்து செல்லவேண்டுமல்லவா?

ஒவ்வொருவருடைய ருசிக்கும்
ஒவ்வொருவருடைய பணவசதிக்கும்
ஏற்ற ஏராளமான புடைவைத்
தினிசுகள் எம்மிடம் இருக்கின்றன.

## கணேசன் ஸ்டோர்ஸ்.

78, கே. கே. எஸ் வீதி. யாழ்ப்பாணம்.
போன் : 7169. தந்தி : கணேசன் ரெக்ஸ்.




தயாரிப்பாளர்கள்:-
**RVG பீடிக் கம்பெனி,**
34, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம்.